Australia: $2.00 Canada: $ 2.00 Europe € 1.20 India: Rs.10.00 Norway: Kr.15.00 Sri Lanka: Rs.15.00 Switzerland: Fr.3.00 United Kingdom: £1.20

NAZHIKAI
London

MARCH 2009

# நாழிகை

International Tamil Newsmagazine




## இலங்கை: மனித அவலம்


Niru BRAND ®
நிரு
பிராண்ட்
Chicken Curry Sauce
Niru BRAND
100% NATURAL
NO PRESERVATIVES
Madras style
Chicken Curry Sauce
Sauce de Poulet au curry
Huhncurrysoße
Ready to Cook
SAUCE ONLY
Introductory Offer
BUY 1
GET 1
FREE
NET WT. 285g
SERVING SUGGESTION
HOME MADE
READY TO COOK
HOT & SPICY
JUST ADD CHICKEN & COOK
Introducing...
READY TO COOK
Introductory Offer
BUY 1
GET 1
FREE
SAUCE
Also available:
KERALA FISH SAUCE
CHICKEN CURRY SAUCE
PEPPER CHICKEN SAUCE
CHETTINAD FISH CURRY SAUCE
MUTTON SAUCE
VEGETABLE BRIYANI GRAVY


ஸ்ரீ ஐஸ்வர்யா சேலைகளின்
ஹன்சிகா கலெக்ஷன்ஸ்!
இங்கிலாந்தில் முதல் முறையாக
நம்பமுடியாத விலையில் முதல் தரமான
வைர ஆபரணங்கள்,
Exclusive Embroidery புடவைகள்
அறிமுகப்படுத்துகிறோம்.
பட்டு புடவைகள், சில்க்காட்டன், பாலிகாட்டன்,
காட்டன் புடவைகள், வேட்டி மற்றும் சுவாமி துண்டுகள்
WHITE FIRE UK LTD
#63, Victoria Road, Ruislip Manor,
Middx, HA49BH
Mobile: 077 80975142 Ph : 01895636462
Fax : 01895634422

ஐரோப்பிய, மத்திய கிழக்கு நாடுகளில்
24 மணிநேரமும் ஒளிரும் தமிழ் தொலைக்காட்சி

# DEEPAM

* செய்திகள் * காலைக்கதிர் * சின்னத்திரைத் தொடர்கள்
* அரசியல் ஆய்வு விவரணங்கள் * மகளிர், சிறுவர் நிகழ்ச்சிகள்
* நீங்களும் நாங்களும் இணையும் பல நிகழ்ச்சிகள்
* இசை, நடன நிகழ்ச்சிகள் * புத்தம் புதிய திரைப்படங்கள்

## உலகத் தமிழருக்கு ஒரு தொலைக்காட்சி


சந்தா விசேட சலுகைகளுக்கு தொடர்புகொள்ளுங்கள்


DEEPAM

**DEEPAM TV**
EAST WEST BROADCAST LTD
UNIT 1, EBURY BUSINESS CENTRE
161-163 STAINES ROAD, HOUNSLOW, MIDDLESEX, TW3 3JB, UK


Tel: + 44 (0)208 814 6565, Fax: + 44 (0)208 814 1144
Email: info@deepamtv.tv Web: www.deepamtv.tv

36 | கலை
இன்னோர் இமயம்





38 | சிறுகதை
சிரட்டை



18 | அட்டை செய்தி
ஒருபுறம் வேடன்
மறுபுறம் வேங்கை
இலங்கையில் மனித அவலம்





20 | நடப்பு விவகாரம்
அரசியலில் தொலைந்த
மனிதாபிமானம்
இலங்கை தமிழர் பிரச்னையில்
இந்தியா

32 | உலக விவகாரம்
'ஒஸ்கார்' விருது
இந்தியாவின் வறுமையும்
பெருமையும்

46 | விருந்தினர் பக்கம்

42 | சினிமா



24 | இந்தியா
தேர்தல் திருப்பங்கள்

26 | தென்கிழக்கு ஆசிய சமூகம்

17 | இலங்கை
தொடரும் அச்சுறுத்தல்

28 | மலேசியா
சுதந்திரத்தில் உரிமை


TIME TRAVEL
& Tours
ucanfly.co.uk
KINGFISHER
AIRLINES
JET AIRWAYS
THE JOY OF FLYING
SriLankan
KUWAIT AIRWAYS
QATAR
297 Rayners Lane
Pinner
Middx. HA5 5EH
Tel: 020-8429 8333

# Selection
# Select.gb.com
# Selected

Do you want to

**Rent, Buy, Sell, Mortgage or Insure your Property** Look no further

We've got it all covered.

## Free EPC

Free energy performance certificate
for properties instructed on full management.
Typical price of an EPC is £ 60.00+ VAT

# 0845 470 1500

## வேகத்துக்கு ஈடுகொடுக்கட்டும்

பத்து வருடங்கள் கழித்து 'நாழிகை' மீண்டும் வருவது மகிழ்வைத் தருகிறது. 'அடுத்த இதழ் ஒரு தசாப்தத்தின் பின்னரா' என்ற அவநம்பிக்கை தோன்ற வேண்டிய அவசியம் என்ன? உறுதியுடன் ஆரம்பித்தாயிற்றே.

இதழ் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளதைக் குறிப்பிட வேண்டும். வடிவமைப்பு, ஆக்கங்கள் யாவும் தரமாக உள்ளன. பின்னாலுள்ள உழைப்பு தெரிகிறது.

'நாழிகை' நேரத்தைக் குறிக்கிறது. எனவே, செய்திகள் நேரத்துடன் வருவது அவசியம். 'டைம்', 'இந்தியா டுடே' போன்ற சஞ்சிகைகளைப்போலவே 'நாழிகை'யையும் வெளியிட விரும்புவது தெரிகிறது. இவை வாராவாரம் அல்லது இருவாரத்துக்கு ஒருமுறை வெளிவரும் சஞ்சிகைகள். எனவே, செய்திகள் சூடானவையாக இருக்கும். அந்தவகையில் மாதம் ஒரு முறை வரவிருக்கும் 'நாழிகை'யில் செய்தி விளக்கம், ஆய்வு என்பவை தரமாக இருப்பது அவசியம். காலங்கடந்த நிகழ்வுகளை இன்றைய வேகமான உலகு வரவேற்கமாட்டாது. 'நாழிகை' போன்ற இதழ்களை வாசிப்பவர்கள் இணையத்தில் எல்லாவற்றையும் உடனுக்குடன் வாசிப்பவர்களாகவும் இருப்பார்கள். எனவே, அந்த வேகத்துக்கு ஈடுகொடுத்து, 'நாழிகை' தொய்வு ஏற்படாமல் இருப்பது அவசியமாகிறது.

நூல் மதிப்பீடு, உலகத்தர சினிமா பற்றிய பார்வை போன்றவற்றையும் சேர்த்தால் நல்லது.

பரா. சுந்தா
அவுஸ்திரேலியா

## ஆம்; முடியும்

திறந்திருந்த விழிகளினூடே இதயங்களைத் திருட 'நாழிகை'யின் எந்த இதழாலும் என்றும் முடியும்.

தமிழில் ஒரு தரமான சஞ்சிகையாய் என்றென்றும் மிளிர 'நாழிகை'யால் இன்றும் முடியும்.

கிழக்குடனும் மேற்குடனும் ஆழமாகக் கைகுலுக்கி அதிசயம் நடத்திப் பிரமிக்கவைக்க 'நாழிகை'யால் பிரமாதமாக முடியும்.

எத்தனை நாடுகள் - எத்தனை சம்பவங்கள் - எத்தனை தலைவர்கள், அத்தனையையும் இனிய தமிழில், ஒரு 'நாழிகை'க்குள் காட்டிட '2008இல் உலகம்'ால் முடியும்

டி. ஐ. ரவீந்திரன், தனஞ்ஜெயன், சாரங்கன், தண்டாயுதன் ஆகியோரால் அழகான சஞ்சிகைக்கு அழகாக எழுதுவது இலகுவாக - இயல்பாக முடியும்.

பிங்காட்சன் சென்னை இசைவிழாவில் சுருதி சுத்தமாக சஞ்சரிப்பதை தலையாட்டி ரசிக்க 'அவனால்'தான் முடியும்.

சினிமா விமர்சனம் மூலம் மலரும் நினைவுகளை மனத்திரையில் மீண்டும் காட்டுவதைவிட வேறென்ன செய்யமுடியும்!


முன்னர் பரபரப்புடன் வந்த குறுக்கெழுத்துப் போட்டியை சுறுசுறுப்புடன் இனி என்று பார்க்கமுடியும்?

வடிவாக வடிவமைத்து அழகுக்கு அழகு சேர்த்த வரைகலைக் கலைஞர் கிருஷ்ணராஜாவின் பெயரைக் காணாதது தவறுதலா?

காலத்தில் நாழிகையைக் காட்ட பஞ்சாங்கத்தால் முடியும்.

'நாழிகை'யில் காலத்தைக் காட்ட ஆசிரியரால் முடியும்.

இளவாலை எஸ். ஜெகதீசன்
கனடா




## புது உலகு

நீண்ட நாள்கள் காத்திருந்தது கைகளில் கிடைத்திருக்கிறது.

'டைம்' சஞ்சிகையை ஞாபகமூட்டும் அற்புதமான அமைப்பு.

'இந்தியா டுடே'யை விஞ்சும் அச்சாக்கம்.


'கார்டியன்' பத்திரிகையை ஒத்த நிதானமும் காத்திரமுமான ஆசிரிய தலையங்கம்.

'நாழிகை' தூய தமிழ்ச் சொல்; ஒரு புது உலகைக் காண்பிக்கிறது.

ந. சி. ஜோர்ஜ்
லண்டன்

**Nazhikai** International Tamil Newsmagazine ISSN 1357-6933 Vol: IV, No: 2
**Editor:** S Mahalingasivam **Published by:** Pannews 123 Twyford Road Harrow Middx. HA2 0SJ UK
**Tel: 00 44 208 422 5699 Fax: 00 44 208 426 4105 Email: pannews@hotmail.co.uk**
**Editorial:** editor@nazhikai.com / letters@nazhikai.com

**Anual Subscription** (12 issues): £20.00 (India & Sri Lanka £10.00) Payable to Pannews






இலங்கை
இந்திய
மளிகைப் பொருட்கள்
மற்றும்
மரக்கறிகள்
மொத்தமாகவும்
சில்லறையாகவும்
கிடைக்கும்
சிறந்த இடம்

# V.T. CASH & CARRY

**11-15 Rue Cail, 75010 Paris**
**Tél: 01 40 05 07 18**
**M°: La Chapelle / Gare du Nord**

எல்லா விதமான
மரக்கறிகளும்
மிக மலிவு விலையில்




**Nazhikai** Distributors

**Canada:**
Murugan Book Depot.
1241 Ellesmere Road
Toronto
Ontario M1P 2X8
Tel: 416 285 9118 / 416 321 0285

**India:**
Sudarsan Book Processors & Distributors
(Old No. 130) New No. 257 Triplicane High Road
Chennai-600 005
Tel: 28441672 / 42155972

# சொந்த மண்ணில் அபலைகள்

உலகம் சந்திக்கும் மிகப்பெரும் மனித அவலங்களில் ஒன்றாக, இலங்கையில் தமிழர்களின் நிலை இன்று ஆகியிருக்கிறது. அவர்களுடைய சொந்த மண்ணில், அபலைகளைான ஒரு நிலைக்கு அவர்கள் ஆளாக்கப் பட்டிருக்கிறார்கள்.

தன்னுடைய மக்கள் என்று கூறும் அரசும், அவர்களைக் காக்கப் புறப்பட்டதான விடுதலைப் புலிகளும் அந்த மக்களை இந்த நிலைக்குள் சிக்கவைத்திருக்கின்றன. இந்த உயிர்களின் பணயத்தில், இரு தரப்பினரும் தமது வெற்றியையும், தப்புதலையும் சாதித்துக்கொள்ள மூர்க்கங்கொண்டிருக்கிறார்கள்.

இரு தரப்பினரதும் இந்த மூர்க்க நிலைக்கான காரணம் புரிந்துகொள்ளக்கூடியதே. விடுதலைப் புலிகளை ஒழித்துவிட நினைக்கும் அரசுக்கு, இந்த ஒரு குறுகிய இடத்துள் அவர்களைச் சுற்றிவளைத்துள்ளவேளையில் விட்டுவிடுவதென்பது முடியாதது. அவ்வாறே, எத்தகையதொரு பெரு நெருக்கடியிலேனும், இந்த நெருக்குதலிலிருந்து தப்பித்துவிட வழிதேடுவது புலிகளுக்கு வேண்டியது.

ஆக, 'யுத்த நிறுத்தம்' ஒரு தரப்புக்கு அறவே வேண்டாதது; மற்றைய தரப்புக்கு மிகவும் அவசியமானது. இந்த கயிறிழுப்பில்தான், அப்பாவி மக்கள் நடுவில் அகப்பட்டு ஆற்றொணாத அல்லலை அநுபவிக்கிறார்கள். இவர்களின் இந்த அவலம், ஐக்கிய நாடுகள் சபையும் அமெரிக்காவும் உள்பட, உலக நாடுகளும் உலக அமைப்புகளும் அக்கறையும் கவலையும் கொள்ளும் நிலையைத் தோற்றுவித்திருக்கிறது. 'இன ஒழிப்பு', 'யுத்த குற்றம்' ஆகிய மிகப் பாரிய குற்றச்சாட்டுகளுக்கான பதங்கள் இலங்கைத் தமிழர்களின் இந்த அல்லலில் பயன்பாட்டுக்கு எழுகின்றன.

'யுத்த குற்றம்' பற்றி ஐ. நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் தலைவி நவநீதம் பிள்ளை தெரிவித்திருப்பது இலங்கை அரசை பதற்றத்துக்குள்ளாக்கியிருக்கிறது. இலங்கை அரசுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் விதத்தில், விடுதலைப் புலிகளின் பொய்யான பிரசாரம் உலகளாவிய ரீதியில் வலுவடைந்து, சர்வதேச அமைப்புகளில் தமது செல்வாக்கையும் புலிகள் செலுத்துவதாக இலங்கை அரசு சீற்றம்கொள்கிறது.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகளைச் சர்வதேச அரங்கில் பயங்கரவாதமாகப் பிரசாரப்படுத்தி, அதில் பெற்ற வெற்றியில்தான் இன்று புலிகளுக்கு சார்பாக எந்தவொரு நாட்டினதும் ஆதரவும் எழாது, புலிகளுக்கு எதிரான இந்த யுத்தத்தில் இலங்கை அரசு இந்த அளவுக்கு முன்னேறியிருக்கிறது.

ஆனால், இன்று அந்த நிலைமை மாற்றப்பட்டுவிட்டதாக அரசு கருதினால், அதற்குக் காரணம் அரசேதான் என்பதையும் அரசு புரிந்துகொள்ளவேண்டும்.

பொதுமக்களைப் பாதுகாப்பதற்கென்று அரசாங்கத்தாலேயே ஏற்படுத்தப்பட்ட பாதுகாப்பு வலையத்துள், தினசரி அல்லும் பகலும் நிகழும் நெஞ்சத்தை உறையவைக்கும் கொடூர அனர்த்தத்தில் அரசு சம்பந்தப்படவில்லை என்றோ அல்லது அரசு அதற்குப் பொறுப்பு அல்ல என்றோ ஒருபோதும் கூறமுடியாது.

இங்குள்ள மக்கள் படும் மனித அவலம், உயிரிழப்புகள் ஒருபுறமிருக்க, அங்கங்களை இழந்த மனித குரூரம் எத்தகையது?

இந்த பாதுகாப்பு வலயம் ஒருதலைப்பட்சமானதேயன்றி, தாமும் இணைந்து, பரஸ்பரம் ஏற்படுத்தப்பட்டதல்ல என்று விடுதலைப் புலிகள் வேண்டுமானால் கூறமுடியும். ஆனால், மக்களைப் பொறுத்தவரையில், விடுதலைப் புலிகளைக்காட்டிலும் அரசுக்கு அதிக பொறுப்பு உண்டு. இங்குதான் 'இன ஒழிப்பு' என்ற வார்த்தைப் பிரயோகத்தை இலங்கை அரசு பெரும்பாலும் எதிர்கொள்ள சந்தர்ப்பம் ஏற்படுவதாக தெரிகிறது.

'இன ஒழிப்பு' என்னும்போது எத்தகைய ஒரு விசனத்தை இலங்கை அரசு எய்துகிறதோ, அதே விசனத்தைத்தான், விடுதலைப் புலிகளை 'பயங்கரவாதிகள்' என்று அரசாங்கம் விளிக்கும்போதும், பொதுவாக புலிகளை ஆதரிக்காத தமிழர்களும்கூட எய்துவார்கள்.

அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த மக்கள் பற்றியும் சரியான தகவல்கள் பொதுவில் கிடைப்பதில்லை. அதுதொடர்பிலும் அரசால் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்த முடியவில்லை.

மறுபுறத்தில், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் - போக்குகள் சில, சிங்கள, பௌத்த தேசியவாதத்துக்கு மீண்டும் தூபமிடுமோ என்ற ஐயத்தையும் தமிழ் மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்றன.

புலிகளை அழித்தொழிப்பதில் காண்பிக்கும் தீவிரத்தைப் போல, தமிழர் பிரச்னையில் ஓர் அரசியல் தீர்வையும் காண்பதில் அரசு தனது அக்கறையை வெளிப்படுத்தவில்லை.

'ஆனந்த விகடன்' இந்தியாவிலிருந்து வெளியாகும் ஒரு சஞ்சிகை. வாராவாரம் வெளியாகும் அந்த சஞ்சிகையின் ஓர் இதழில் அரசுக்கு விரோதமான அல்லது, புலிகளுக்கு ஆதரவான செய்தி வெளிவந்ததெனின், அத்தகைய பிரசுரத்தைக் கட்டுப்படுத்தும் ஒழுங்கை அரசாங்கம் மேற்கொண்டிருந்திருக்க வேண்டும். அல்லது, குறித்த அந்த இதழின் விற்பனையை இரத்துச்செய்ய நடவடிக்கை எடுத்திருக்கவேண்டும். இதுவன்றி, விற்பனைக்கு அனுப்பிய முகவரையும், இறக்குமதியாளரையும் கைதுசெய்து தடுத்து வைப்பதென்பது எப்படி?

ஆக, இவைபோன்ற விடயங்கள், விடுதலைப் புலிகள் மீதான ஆதரவு - எதிர்ப்பு எப்படியோ ஆனால், இலங்கை அரசு மீது ஒரு சந்தேக பார்வையையே தமிழ் மக்கள் மத்தியில் பொதுவாக ஏற்படுத்துகிறது.

விடுதலைப் புலிகளை வெற்றிகொள்ளும் இலங்கை அரசின் பலத்துக்கு முக்கிய காரணம் இந்தியா. எனவே, இலங்கை அரசு முயல்கின்றவிதத்தில், விடுதலைப் புலிகள் வெற்றிகொள்ளப்பட்டால், இலங்கைத் தமிழர்களின் நியாயமான அரசியல் தீர்வுக்கும் இந்தியாவே ஜவாப்தாரி. ■

# உலகம்



## இந்தியா

### மார்ச்சில் 'நானோ'

இந்தியாவின் டாட்டா கார் உற்பத்தி நிறுவனம் தயாரிக்கும் உலகின் அதி மலிவான மோட்டார் கார் மார்ச் 23ஆம் தேதி வெளிவரும் என்று டாட்டா நிறுவனம் அறிவித்திருக்கிறது.

இந்திய ரூபா சுமார் ஒரு லட்சம் விலையுள்ளதான 'நானோ' என்ற இக் கார் கடந்த ஆண்டில் வெளிவரவிருந்தபோதும், மேற்கு வங்காளத்தில் இதன் உற்பத்தி தொழிற்சாலைக்காக வாங்கப்பட்ட காணிதொடர்பில் அங்குள்ள விவசாயிகளுடன் எழுந்த சர்ச்சைகளில், தொழிற்சாலையை குஜராத் மாநிலத்துக்கு மாற்ற நேர்ந்தது. அதனால் இத் தாமதம் எற்பட்டது.

குஜராத் உற்பத்திச்சாலை, தொடக்கத்தில் ஆண்டொன்றுக்கு இரண்டு லட்சத்து 50 ஆயிரம் 'நானோ'க்களை உற்பத்திசெய்யுமென்றும் பின்னர், இது ஐந்து லட்சமாக அதிகரிக்குமென்றும் தெரிவிக்கப்படுகிறது.



## நேபாளம்

### அருங்காட்சியகமாகும் அரண்மனை

நேபாள மன்னர்களின் அரச மாளிகை 'நாராயநிதி', ஓர் அருங்காட்சியகமாக மாற்றப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது.

நேபாள தலைநகர் காத்மாண்டுவில் 90 அறைகளைக் கொண்டதான இந்த மாளிகையின் 19 அறைகள் மட்டும் தற்போது முதல்கட்டமாக பார்வைக்கு விடப்பட்டுள்ளது. 240 ஆண்டுகள் கால பழைமைவாய்ந்த நேபாளத்தின் முடியாட்சி கடந்த ஆண்டில் ஒழிக்கப்பட்டது. எட்டு ஆண்டுகளுக்கு முன்னர் அங்கு நிகழ்ந்த கோரப் படுகொலையில் மன்னர் பிரேந்திரா, அரசி ஐஸ்வர்யா ராஜ்ய லக்ஷ்மி தேவி உள்பட, அரச குடும்பத்தின் பத்துப்பேர் முடிக்குரிய இளவரசர் திபேந்திராவால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

கொலைச் சம்பவத்தின் பின்னர் இளவரசர் திபேந்திரா மன்னராக பிரகடனப்படுத்தப்பட்டபோதும் சம்பவத்தின் பின்னர் தன்னைத் தானே சுட்டுக்கொண்டு காயமுற்றிருந்த அவர் மூன்றாம் நாள் மரணமுற்றார். பின்னர், மன்னர் பிரேந்திராவின் சகோதரர் கஜனேந்திரா மன்னராக முடிசூடினார். எனினும், அந்தப் படுகொலை, நேபாள முடியாட்சியின் முடிவுக்கே இட்டுச்சென்றது. மாவோ தீவிரவாதிகளுடனான சமரச உடன்பாட்டில் கடந்த ஆண்டு கஜனேந்திரா முடிதுறக்கப்பட்டு, நாடு மக்களாட்சிக்கு மாறியது.

முன்னாள் மாவோ தீவிரவாதியான பிரதமர் பிரசண்டா அருங்காட்சியகத்தைத் திறந்துவைத்தார்.

நேபாள மன்னர்கள் பரம்பரை பரம்பரையாக அரசோச்சிய, பொன், வெள்ளியினாலான அரியணையும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ளது.

கஜனேந்திரா இப்பொழுது அண்மையிலுள்ள ஒரு வன பகுதியில் வசித்துவருகிறார். அவரது வயதான தாயாரும் பேர்த்தியும் அரச மாளிகையின் ஒரு பகுதியிலேயே இன்னமும் தங்கியிருக்கிறார்கள்.

மக்கள் செல்வாக்கை மிகக் கணிசமான அளவில் பெற்றிருந்தவரான கொலைசெய்யப்பட்ட மன்னர் பிரேந்திரா, லண்டன் ஈற்றன் கல்லூரியில் கல்வி கற்றபின்னர், ஹாவார்ட் பல்கலைக்கழகத்தில் அரசியல்துறை பட்டம் பெற்றவர்.



சீனா

## பொருளாதார அச்சம்

உலக பொருளாதார நெருக்கடியில், சீனா இந்த நூற்றாண்டில் எப்போதுமே அடைந்திராத நெருக்கடியை இந்த ஆண்டில் எதிர்கொள்வதாக சீன பிரதமர் வென் ஜியாபோ தெரிவித்திருக்கிறார். சீன பொருளாதாரத்தை ஊக்குவிக்க 585 பில்லியன் அமெரிக்க டொலர்கள் முதலீடு அவசியம் என்றும் அவர் வற்புறுத்தியுள்ளார்.

எட்டு வீத வருடாந்த உற்பத்தி இலக்கைப் பிரகடனப்படுத்தியுள்ள அவர், இந்த இலக்கை அடையாவிட்டால் சீனாவில் சமூக கொந்தளிப்பு ஏற்படும் அபாயத்தை எண்ணி, கம்யூனிஸ்ட் கட்சி கொண்டுள்ள பெரும் விசனத்தையும் தெரிவித்தார்.

மக்கள் தொழில் பெறமுடியாத நிலை ஏற்பட்டால் எதற்காக கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சியிலிருக்கவேண்டும் என்ற வினா எழத் தொடங்கும் என்ற அச்சம், பொருளாதார ஊக்குவிப்புக்கான திட்டத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாக அவதானிகள் கூறுகின்றனர்.



இந்தியா

## மும்பை தாக்குதல் வழக்கு தாக்கல்



'இந்தியாவுக்கு எதிரான யுத்தமா'க மேற்கொள்ளப்பட்ட மும்பை தாக்குதலில் உயிர்தப்பிய ஒரேயொரு துப்பாக்கிதாரிக்கு எதிரான வழக்கு இந்திய பொலிசாரினால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மொஹமட் அஜ்மல் அமிர் காசப் மற்றும் 19 பேருக்கு எதிரான இந்த வழக்கின் குற்றப்பத்திரிகை ஆயிரக் கணக்கான பக்கங்களைக் கொண்டிருக்கிறது. இந்தியாவையும் பாகிஸ்தானையும் சேர்ந்தவர்கள் இந்த வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார்கள்.'

பாகிஸ்தான் பிரஜையான அஜ்மல் காசப்பும் மற்றும் ஒன்பது துப்பாக்கிதாரிகளும் இந்தியாவின் வர்த்தக தலைநகரான மும்பையின் அதிமுக்கிய இடங்களில் இத் தாக்குதலை நிகழ்த்தியதில் 170க்கும் அதிகமானோர் உயிரிழந்தனர். இத் தாக்குதலுக்கு பாகிஸ்தான் தீவிரவாதிகளே பொறுப்பு என்று இந்தியா குற்றஞ்சாட்டியுள்ள வேளையில், தாக்குதலுக்கான திட்டங்கள் பாகிஸ்தான் மண்ணிலேயே ஓரளவுக்கு திட்டமிடப்பட்டதென்பதை பாகிஸ்தான் ஒப்புக்கொண்டுள்ளது.

அஜ்மல் அமிர் காசிப் நீதிமன்றத்தில் ஆஜராக்கப்படவில்லை. ஆனால், இத் தாக்குதலில் வேவுபார்த்த குற்றச்சாட்டில் பாஹிம் அன்சாரி, சபாவுடின் என்ற இந்திய பிரஜைகள் இருவர் ஆஜராக்கப்பட்டிருந்தனர். வழக்கு விசாரணை மும்பையின் அதிபாதுகாப்புச் சிறைச்சாலையில் நடைபெறும்.

பாகிஸ்தானின் லஸ்கார் ஈ தைபா தீவிரவாத குழுவின் நடவடிக்கைப் பிரிவு தலைவர் ஸாகி உர் ரஹ்மான், அபு ஹம்சா என்ற மற்றொரு உறுப்பினர் உள்பட, ஏழு பாகிஸ்தான் பிரஜைகள் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளனர்.


இத் தாக்குதல் தொடர்பாக எட்டுப்பேர்மீது குற்றஞ்சாட்டியுள்ள பாகிஸ்தான், இவர்களில் ஆறுபேரைக் கைதுசெய்துள்ளது. சம்பந்தப்பட்டவர்களை தம்மிடம் கையளிக்கவேண்டும் என்ற இந்தியாவின் கோரிக்கையை நிராகரித்த பாகிஸ்தான், இவர்கள் தமது நாட்டிலேயே விசாரிக்கப்படுவார்கள் என்று தெரிவித்துள்ளது. தாக்குதலில் சந்தேகப்படுபவர்களில் ஒன்பதுபேராவது கராச்சியிலிருந்து மும்பைக்கு மூன்று படகுகளில் சென்றிருப்பது பாகிஸ்தானின் புலனாய்வுகளில் தெரியவந்துள்ளது.

இந்தியா

## மனித விண்கலம்

இந்தியாவின் சொந்த மனித விண்கலம் 2015இல் விண்வெளிக்கு ஏவப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதன்மூலம் அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய நாடுகளுடன் நான்காவது பெருமைமிக்க நாடாக இந்தியா இந்த வரிசையில் சேர்ந்துகொள்ளும். இதற்காக, இரண்டரை பில்லியன் டொலர்களை இந்தியாவின் திட்டமிடல் ஆணைக்குழு தனியாக ஒதுக்கிவைத்துள்ளது.

முதலில் இரண்டு விண்பயணிகளை சுமார் ஒருவார காலத்துக்கு விண்வெளிக்கு அனுப்ப இந்தியா திட்டமிடுகிறது. தற்போது அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகிய மூன்று நாடுகளே சொந்த விண்கலங்களில் தமது விண் பயணிகளை அனுப்புகின்றன.




இந்தியா

## தேர்தலில் "ஜெய் ஹோ..."

'ஸ்லம்டொக் மில்லியனர்' படத்தின் "ஜெய் ஹோ..'' ஒஸ்கார் விருதுபெற்ற பாடலின் உரிமையை இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் கட்சி வாங்கியுள்ளது. தேர்தலில் காங்கிரசின் சாதனைகளை வெளிப்படுத்தும் தேர்தல் பிரச்சாரத்துக்கு இப்பாடல் பயன்படுத்தப்படும் என கட்சி உத்தியோகத்தர்கள் கூறுகின்றனர். இந்திய பொதுத்தேர்தல் ஏப்ரல் 16ஆம் தேதியிலிருந்து மே 13ஆம் தேதிவரை நடைபெறவிருக்கிறது.

பிரிட்டிஷ் இயக்குநர் டனி பொயிலின் 'ஸ்லம்டொக் மில்லியனர்' திரைப்படத்தில் ஏ. ஆர் ரஹ்மான் இசை அமைத்த இப்பாடல் 'சிறந்த பாடல்', 'சிறந்த இசை' ஆகியவற்றுக்கான இரண்டு ஒஸ்கார் விருதுகளைப் பெற்று, மிகுந்த பிரபல்யத்தைப் பெற்றிருக்கிறது. "அரசாங்கத்தின் சாதனைகள் போற்றப்படத்தக்கவை; அதனை இப்பாடல் சிறப்பாக உணர்த்துகிறது'' என்று, காங்கிரஸ் கட்சி பேச்சாளர் ஒருவர் தெரிவிக்கிறார்.

மும்பையின் சேரி வாழ்வைச் சித்தரிக்கும் இத் திரைப்படம், "நிச்சயமாக காங்கிரசின் தோல்வியை உறுதிசெய்யும். ஏனெனில், காங்கிரசின் தவறான கொள்கைகளால் லட்சக் கணக்கான மக்கள் இன்னமும் சேரிகளிலேயே வாழவேண்டியிருக்கிறது என்பதை ஒவ்வோர் இந்தியனுக்கும் இந்தப் பாடல் நினைவூட்டும்'' என்கிறார் பிரதான எதிர்க்கட்சியான பாரதிய ஜனதா கட்சியின் சிரேஷ்ட தலைவர் ஒருவர்.



பாகிஸ்தான்

## தேர்தலில் தடை

தேர்தல் மூலமான பதவிகள் எதனையும் வகிப்பதற்கு பாகிஸ்தான் முன்னாள் பிரதமரும் எதிர்க்கட்சித் தலைவருமான நவாஸ் ஷரீபுக்கும் அவரது சகோதரருக்கும் லாகூர் மேல் நீதிமன்றம் விதித்திருந்த தடையை பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உறுதிப்படுத்தி தீர்ப்பளித்திருக்கிறது.


பஞ்சாப் மாநிலத்தில் நவாஸ் ஷரீபின் கட்சி அதிகாரத்திலுள்ளது. அவரது சகோதரர் ஷபாஸ் அங்கு முதலமைச்சராகவிருக்கிறார். நீதிமன்றத்தின் தீர்ப்பையடுத்து ஷபாஸ் தனது முதலமைச்சர் பதவியிலிருந்து விலகவேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி பேர்வெஸ் முஷாரபினால் பதவிநீக்கம்செய்யப்பட்டிருந்த நீதிபதிகளை மீள பதவியில் அமர்த்தவேண்டும் என்ற தனது பிரச்சாரத்தைக் கைவிட மறுத்ததால், ஜனாதிபதி அலி சர்தாரி இத் தீர்ப்பின் பின்னணியில் செயல்பட்டிருக்கிறார் என்று, நவாஸ் ஷரீப் ஜனாதிபதிமீது குற்றம் சுமத்துகிறார்.

நீதிமன்றத்தின் இத் தீர்ப்பு மாநில அரசுக்கும் மத்திய அரசுக்கும் இடையேயான விரோதத்தை விரிவாக்கி, நாட்டில் அரசியல் ஸ்திரமின்மைக்கு வாய்ப்பளிக்கும் என்று அவதானிகள் கருதுகின்றனர்.

'நீதிபதிகள் தொடர்பான பிரச்சாரத்தை கைவிடுங்கள்; அவர்கள் உங்களுக்குச் சாதகமாக தீர்ப்பளிப்பார்கள்' என்று சர்தாரி தனது சகோதரரிடம் கூறியிருந்ததாக நவாஸ் ஷரீப் கூறுகிறார். நீதிபதிகள் தொடர்பான தனது பிரச்சாரத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் அவர் தெரிவித்திருக்கிறார்.

1999இல், ஜெனரல் முஷாரப் இராணுவ தளபதியாகவிருந்தவேளை, அவர் பயணம்செய்த விமானத்தைக் கடத்தியதாக அப்போது பிரதமராகவிருந்த நவாஸ் ஷரீப் குற்றவாளியாக தீர்ப்பளிக்கப்பட்டிருந்தார். இது, இராணுவ சதி ஒன்றில் ஜெனரல் முஷாரப், பிரதமராகவிருந்த நவாஸ் ஷரீபை பதவியிலிருந்து அகற்றி, தான் ஜனாதிபதியாக ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு வழிவகுத்தது. அந்த தீர்ப்பே ஷரீப் தேர்தல் எதிலும் பங்குபற்றுவதை தடைசெய்தது. ஜனநாயக ரீதியில் தெரிவான தற்போதைய அரசாங்கத்தில் இத் தடை விலக்கப்படும் என்று நவாஸ் ஷரீப் எதிர்பார்த்திருந்தார்.



ஈராக்

## 2010இல் அமெரிக்க படை வாபஸ்

ஈராக்கிலிருந்து அமெரிக்க படைகள் 2010இல் வாபஸ் பெறப்படும் என்று அமெரிக்க அதிபர் பராக் ஒபாமா அறிவித்திருக்கிறார்.

தற்போது ஈராக்கில் நிலைகொண்டுள்ள 142 ஆயிரம் அமெரிக்க துருப்புகளில் 50 ஆயிரம் பேர் ஈராக்கிய படைகளுக்கான ஆலோசனைகளுக்காகவும் அமெரிக்க நலன்களின் பாதுகாப்புக்காகவும் 2011 இறுதிவரை அங்கு தங்கியிருப்பர். அமெரிக்காவின் 'யுத்த நடவடிக்கை' 2010 ஆகஸ்டில் உத்தியோகபூர்வமாக முடிவடையும் என்று அதிபர் ஒபாமா அறிவித்திருக்கிறார்.

அமெரிக்க படைகள் வெளியேறிய பின்னர் ஈராக்கின் பாதுகாப்பைக் கட்டுப்பாட்டுள் கவனிக்கும் ஆற்றல் தமது படைகளுக்கு இருப்பதாக ஈராக்கிய பிரதமர் நூறி அல் மாலிக்கி தெரிவித்திருக்கிறார்.

அதிபர் ஒபாமாவின் இந்த முடிவை வரவேற்ற அமெரிக்க குடியரசுக் கட்சியினர், மிகப் பெருமளவு படையினரை அனுப்பி, ஈராக்கில் ஸ்திரத்தன்மையைக் கொணர்ந்ததற்காக முன்னைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷுக்கு அதிபர் ஒபாமா பாராட்டு தெரிவிக்கவேண்டும் என்றும் கூறியுள்ளனர்.

பிரான்ஸ்



## மீண்டும் 'நேட்டோ'வில்

நான்கு தசாப்தகால போக்கை மாற்றி, 'நேட்டோ' அமைப்பில் தனது நாடு மீண்டும் இணைந்துகொள்ளப்போவதாக பிரான்ஸ் அதிபர் நிக்கொலஸ் சாகோசி அறிவித்திருக்கிறார்.

நேட்டோவின் ஒன்றிணைந்த இராணுவ கட்டுப்பாடு, பிரான்சின் இறைமையைப் பலவீனப்படுத்துவதாக தெரிவித்து அதிபர் சார்ள்ஸ் டி கோல் 1966இல் பிரான்சை நேட்டோ அமைப்பிலிருந்து விடுவித்தார்.

நேட்டோவின் ஸ்தாபக அங்கத்துவ நாடான பிரான்ஸ், அந்த அமைப்பின் யுத்த தந்தர இராணுவ தீர்மானங்களில் எவ்வித கருத்தையும் தெரிவிக்காத நிலையில் இருப்பதில் எவ்வித நியாயமும் இல்லை என்று சாகோசி கூறுகிறார். சேய்மையாய் இருப்பது தமது சுதந்திரத்தையும் செயலாற்றலையும் மட்டுப்படுத்துவதாகவும் அவர் கூறுகிறார்.

ஆனால், இது அமெரிக்க ஆதிக்கத்துக்கு தலைபணியவைக்கும் ஒன்று என்ற ஆட்சேபணைக் குரல்களும் பிரான்சில் எழுகின்றன.



சிம்பாப்வே

## சட்டவிரோத தங்க விற்பனை

சிம்பாப்வே மீதான சர்வதேச பொருளாதார தடையை மீறி, துணை ஜனாதிபதி ஜொயிஸ் முஜுரு பல லட்சம் டொலர்களுக்கான தங்க பேரம் ஒன்றில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டுள்ளார். கொங்கோ நாட்டு தங்கத்தை ஐரோப்பாவில் விற்க முயன்றதாக இவர்மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

மனித உரிமை மீறல்களுக்காக குற்றஞ்சாட்டப்பட்ட சுமார் 200 சிம்பாப்வே பிரஜைகளில் முஜுருவும் ஒருவர். இதுவே சிம்பாப்வே மீதான ஐரோப்பிய ஒன்றியத்தின் பொருளாதார தடைக்கு காரணம்.

முஜுருவின் புதல்வி நயாஷா டெல் கம்போ மூன்றரை தொன்களுக்கு மேலான நிறைகொண்ட தங்கத்தை கொங்கோ ஜனநாயக குடியரசிலிருந்து ஐரோப்பாவில் அலுவலகத்தைக்கொண்ட கம்பனி ஒன்றுக்கு விற்க முனைந்திருக்கிறார். சுவிற்சர்லாந்தின் சூரிச்சிலுள்ள புடமிடும் சாலையொன்றுக்கு இத் தங்கத்தைக் கொண்டுசெல்வதற்கான போக்குவரத்துச் செலவினத்தை துணை ஜனாதிபதியே செலுத்தவிருந்தாரென்பது ருசுப்படுத்தப்பட்டிருக்கிறது. நயாஷா இந்தப் பேரத்தில் ஓர் ஒருங்கிணைப்பாளர் மட்டுமே என்பதும், இதில் உண்மையிலேயே சம்பந்தப்பட்டவர் முஜுருவே என்பதும் தெரியவந்தபோது ஐரோப்பிய கம்பனி பேரத்தை வாபஸ்பெற்றுவிட்டதாக கூறப்படுகிறது.

சிம்பாப்வேயின் முதல் துணைப் பெண் ஜனாதிபதியாக முஜுரு ஐந்து ஆண்டுகளுக்கு முன்னர் அதிபர் றொபர்ட் முகாபேயினால் நியமிக்கப்பட்டார். இவரும், சிம்பாப்வே தேசிய இராணுவத்தின் முன்னாள் தளபதியான இவரது கணவரும் சிம்பாப்வேயின் அதி செல்வாக்கும் செல்வமும் படைத்தவர்களில் இருவர்.



இங்கிலாந்து

## முருகதாசனுக்கு அஞ்சலி

ஜெனீவா, ஐக்கிய நாடுகள் சபை முன்பாக தீக்குளித்து மரணமான முருகதாசன் வர்ணகுலசிங்கத்தின் இறுதி அஞ்சலியில் 10 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் கலந்துகொண்டனர்.

லண்டனில் தகனக் கிரியைகளுக்கு முன்னதாக, விளையாட்டு மைதானமொன்றில் முருகதாசனின் உடலைத் தாங்கிய பேழை, மக்கள் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்தது. பிரிட்டிஷ் பாராளுமன்ற, உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரசியல் பிரமுகர்கள் உள்பட, பலரும் இதில் கலந்துகொண்டனர்.

இலங்கையில் தமிழ் மக்கள்படும் அல்லலை உலகின் கவனத்துக்கு உணர்த்துவதற்காக, இச் செயலுக்கு தான் துணிந்ததாக, 26 வயதான முருகதாசன் குறிப்பிட்டிருந்தார். லண்டனில் வசித்துவந்த முருகதாசன் ஒரு கணனி பட்டதாரி.

அமெரிக்கா

## மீட்கப்பட்ட காந்தி உடைமைகள்



மகாத்மா காந்தியின் தனித்துவ அடையாளச் சின்னமான அவரது மூக்கு கண்ணாடி உள்பட, அவரது சொந்த பாவனைப்பொருள்கள் சில, அமெரிக்க ஏலத்தில் பலத்த முயற்சிகளின்பின்னர், இந்தியாவுக்கு சேரும்விதத்தில் மீட்கப்பட்டுள்ளன. விஜய் மால்யா என்ற இந்திய தொழில் அதிபர் 1.8 மில்லியன் அமெரிக்க டொலர்களுக்கு (9.3 கோடி இந்திய ரூபா) இவற்றை ஏலத்தில் தனது நாட்டுக்காக வாங்கியுள்ளார்.

இப்பொருள்கள் ஏலத்துக்குச் செல்லாத விதத்தில் தடுப்பதற்கு, அதன் அமெரிக்க சொந்தக்காரரான ஜேம்ஸ் ஓட்டிசுடன் இந்திய அரசு பலவிதங்களில் முயன்றது. இந்தியா அதன் வரவுசெலவுத் திட்டத்தில் 5 வீத செலவினத்தை வறிய மக்களுக்காக ஒதுக்க சம்மதிக்கவேண்டும் என்று ஓட்டிஸ் நிபந்தனை விதித்திருந்தார். இதேவேளை, காந்தி ஆரம்பித்து நடாத்திய 'நவஜீவன்' பொது அறக்கட்டளை இந்த ஏலத்தைத் தடுக்க இந்திய நீதிமன்றம் ஒன்றில் வழக்கும் தாக்கல் செய்திருந்தது. கடைசி வேளையில், ஏலவிற்பனையை வாபஸ்பெற ஓட்டிஸ் விரும்பியபோதிலும், போதிய அவகாசமின்மையால் நியூ யோர்க்கில் மிப்பெரும் பரபரப்பை ஏற்படுத்தி, காந்தி உடைமைகள் ஏலத்துக்குச் சென்றன. ஆரம்பத்தில், 20 முதல் 30 ஆயிரம் அமெரிக்க டொலர்களுக்கே இவை விலைபோகும் என்று எதிர்பார்க்கப்பட்டது.

மூக்குக்கண்ணாடியுடன், அவரது சட்டைப் பைக் கடிகாரம், அவரே தயாரித்த காலணிகள், அவர் கொலைசெய்யப்படுவதற்கு சற்று முன்னதாக உணவருந்திய கிண்ணங்கள் ஆகியவற்றுடன், இந்திரா காந்தி அவருக்கு அன்பளிப்புச் செய்த 'ஸெனித்' கைக்கடிகாரமும் இந்த ஏலத்தில் மீட்கப்பட்டன.

சிம்பாப்வே

## பதவியேற்றவுடன் கார் விபத்து



அரசியல், பொருளாதார நெருக்கடிகளிலிருந்து சிம்பாப்வே நாடைக் காக்கும் முயற்சியில், அதிபர் றொபர்ட் முகாபேக்கும் அவரது அரசியல் வைரியான எதிர்க் கட்சித் தலைவர் மோர்கன் ஷங்கராய்க்குமிடையே கைச்சாத்தான அதிகார பகிர்வு ஒப்பந்தத்தின்கீழ் புதிய பிரதமராக பதவியேற்றிருந்த மோர்கன் ஷங்கராய், பாராளுமன்றத்தில் பிரதமராக அவரின் கன்னி உரையை ஆற்றியிருந்த இரண்டாம் நாள், கார் விபத்து ஒன்றில் காயமுற்றவேளை, அவரின் மனைவி ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டார்.

அமெரிக்க, பிரிட்டிஷ் உதவி நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான லொறி ஒன்று இவரின் காருடன் மோதியதில் சம்பவம் நிகழ்ந்தது. முகாபேக்கும் ஷங்கராய்க்குமிடையே இன்னமும் பரஸ்பர நல்லெண்ணம் ஏற்பட்டிராதபோது, இந்த விபத்து அரசியல் சதியாகவே பெரும்பாலும் சந்தேகிக்கப்பட்டது. எனினும், இது முற்றிலும் ஒரு விபத்து என்றே நம்புவதாக ஷங்கராய் பின்னர் தெரிவித்திருக்கிறார். முகாபே உடனடியாகவே மருத்துவமனைக்குச் சென்று கவலை தெரிவித்திருந்தார்.

ஈராக்


## சிறைத் தண்டனை



அமெரிக்க முன்னாள் அதிபர் ஜோர்ஜ் புஷ்மீது தனது காற்செருப்பைக் கழற்றி வீசிய ஈராக் பத்திரிகையாளருக்கு மூன்று வருட சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

கடந்த டிசம்பரில் ஜோர்ஜ் புஷ் பிரியாவிடை விஜயமொன்றை மேற்கொண்டு பாக்தாத் சென்றிருந்தவேளை நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இச் சம்பவம் நிகழ்ந்தது. 'ஈராக்கில் கொல்லப்பட்டும் , அநாதைகள் ஆக்கப்பட்டும், விதவைகள் ஆக்கப்பட்டும் துயருறும் அனைவரது சார்பிலுமான பிரியாவிடை முத்தம்' என்று கூறி, பாக்தாத் தொலைக்காட்சி ஒன்றின் நிருபரான அல்-ஸைடி தனது செருப்பைவீசியதை அவதானித்த புஷ், தலையை அசைத்துக்கொண்டதில் அது அவர்மீது படவில்லை.

# சட்டத்தின் கற்காலம்



**வன்முறைகளைக் கண்டிக்க சட்டத்தின் காவலர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?**

இது ஜனநாயக நாடு. யாரும் எங்கும் என்னவேண்டுமானாலும் செய்யலாம். சுதந்திரமய்யா, சுதந்திரம், மக்களைத் தவிர மற்றவர்களுக்குச் சுதந்திரம். சட்டக் கல்லூரி மாணவர்களா, அவர்கள் சக மாணவர்களைத் தாக்கலாம். கல்லூரி என்பது படிக்க வரும் இடம் அல்ல, அடிக்க வரும் இடம்.

நீதி மன்றமா, அங்கே வழக்காடுவது என்பது உப வேலைகளில் ஒன்று. மற்றையபடி, கும்பல் கூடி கோஷம் எழுப்பலாம். உள்ளே ஊர்வலம் வரலாம். வழக்கு மன்றத்துக்கு வராத, வரவேண்டியவை அல்லாத பொது விஷயங்கள் தொடர்பாக வக்கீல்களே அங்கே ஆர்ப்பாட்டங்கள் நடத்தலாம். வழக்கு மன்ற அறையில் வாதங்களைத் தவிர்த்து முட்டைகளை வீசலாம். தனக்கு சம்பந்தப்படாத வழக்கு என்றாலும் எந்த வழக்குமன்ற அறையிலும் யாரும் நுழையலாம். என்ன வேண்டுமானாலும் செய்யலாம். இதை, நான் சொல்லவில்லை; உயர்நீதிமன்ற வளாகம் போர்க்களமான தினத்தில், 'டைம்ஸ் நவ்' தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் ஒரு கட்சியின் முக்கிய பிரமுகர் சொன்னார். நீதிமன்றத்தில் வக்கீல்கள் இப்படி நடந்துகொள்ளலாமா என்ற கேள்விக்கு அவர், யாரும் எங்கும் எதையும் பேசும் சுதந்திரம் இருக்கிறது' என்று பதில் சொன்னார். நாம் பெற்ற சுதந்திரம் இப்படி விபரீதப் போக்கில் செல்வது கடிந்துகொள்ளப்பட வேண்டியது; அல்லது விலக்கிக்கொள்ளப்பட வேண்டியது. சுப்பிரமணியம் சுவாமி என்ற மனிதரின் படிப்பை, தொழிலை, பழைய பணியை மறந்துவிடுவோம், ஒதுக்கிவிடுவோம். அவர் கடற்கரையில் தேங்காய், மாங்காய், பட்டாணி, சுண்டல் விற்பவராகவே இருக்கட்டும். பொதுநலம் சார்ந்த வழக்கில், அரசும் மக்களும் சம்பந்தப்பட்ட ஒரு வழக்கில், அவர் தன்னை இணைத்துக்கொள்ள விரும்புகிறார். அவரை எதிர்ப்பவர்கள் சட்டப்படி வழக்காடுவதே நியாயம். அவர், நீதிமன்றத்தில் நீதிபதியின் முன்பு வக்கீல்களாலேயே தாக்கப்படுகிறார். இது விபரீதமான போக்கு அல்லவா? அழுகிய முட்டை முன்னாள் சட்ட அமைச்சருக்குக் கிடைத்த அசைவப் பரிசு. நம் அருமையான சுதந்திரம், வக்கீல் மோகன்தாஸ் கரம் சந்த் காந்தி வாங்கித் தந்த சுதந்திரம், கட்சிக்காரர் மீது முட்டைகளை வீச அனுமதிக்கிறது. ஏன் அப்படிச் செய்தீர்கள் என்று வக்கீல்களைக் கேட்டால் இருக்கவே இருக்கிறது பி. சி. ஆர். ஜாதிப் பெயரைச் சொல்லி என்னைத் திட்டினார் என்று ஒருவர் புகார் கொடுத்தால் அவர்மீது வழக்குத் தொடரலாம். பிடிக்காதவர்கள்மீது தொடரப்படுவதற்கென்றே பிறந்தது பி. சி. ஆர். அதற்குத் தேவைப்படுவது புகார், புகார் மட்டுமே.

கட்டடம் வலுவாக இருக்க கல் கட்டுமானம் தேவைப்படுவதுபோல, வழக்குகள் வலுவாக இருக்கவும் கற்கள் தேவைப்படுகின்றன என்று சில வக்கீல்கள் நினைப்பதுபோல் தெரிவதால் இந்தக் காலத்தைச் சட்டத்தின் கற்காலம் என்று சொல்லலாமா? கையிலெடுக்க வக்கீல்களுக்கு வாதங்கள் இருக்கின்றன, கற்கள் எதற்கு?

சூழ்நிலை எதுவாக இருந்தாலும் வக்கீல்கள் கைகளில் கற்களைத் தூக்கியது தம் தொழிலுக்கு அவர்களே கற்பித்துக்கொண்ட அபவாதம்; அதில் சந்தேகமில்லை. பொதுமக்கள் அன்று அவர்களைப்பற்றி என்ன நினைத்தார்கள், என்ன பேசிக்கொண்டார்கள் என்பதைக் கேட்க நேர்ந்தால் அவர்கள் இன்னும் கொஞ்சம் ஆத்திரப்பட்டிருப்பார்கள். மனச்சாட்சி உறுத்தினால், தாம்

மேற்கொண்ட முதல் நடவடிக்கையும் எதிர் நடவடிக்கையும் சரியல்ல என்றே அவர்கள் ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கும். சட்டத்தை நிர்வகிப்பவர்கள் சட்டத்தை மட்டும் கையில் எடுப்பதே அவர்களுக்கு மரியாதை; சட்டத்துக்கு மரியாதை; ஜனநாயகத்துக்கும் மரியாதை.

வக்கீல்கள் கற்களை எடுத்து வீசியதைத் தொலைக்காட்சியில் கண்டு பதைத்தவர்களில் பலர் மறுநாளிலிருந்து இவர்களது வக்கீல் தொழிலின் சன்னத்தை விலக்கிவிட்டால் என்னவென்று நினைத்தார்கள். தொலைக்காட்சியினர் மக்களைப் பேட்டிகண்டிருந்தால் அவர்கள் அதையும் சொல்லியிருப்பார்கள். ஆனால், இதையெல்லாம் எடுத்துச்சொல்லவும் இந்தக் காலத்தில் தயக்கமிருக்கிறது. காவல்துறை, சட்டத்துறைபற்றி பேசத் தயங்குகிறார்கள். நமக்கு ஏன் பொல்லாப்பு என்று நினைக்கிறார்கள். இது, ஆரோக்கியமான சமுதாயப் போக்கு அல்ல.

விமரிசனம் கூர்மையாக இருந்தால் விமர்சிக்கப்படுபவர்கள் பத்திரிகைகளைத் தாக்குகிறார்கள். பத்திரிகையாளர்களையும் தாக்குகிறார்கள். இதுபோன்ற சமயங்களில் பத்திரிகையாளர்களையும் சமுதாயத்தையும் காக்கவேண்டியவர்கள் வக்கீல்களும் காவல்துறையினரும். ஆனால், வக்கீல்களும் காவல்துறையினரும் நீதிமன்ற வளாகத்திலேயே இப்படிக் கண்டனத்துக்குரியபடி நடந்துகொண்டால் மக்கள் யார்மீது நம்பிக்கைவைத்து, எப்படி நியாயம் கேட்கப்போவார்கள்?

துப்பாக்யைத் தூக்கி எதிரியை வீழ்த்தும் அதிகாரம் உள்ள காக்கிச் சட்டைக்காரர்களும் கற்களை வீசினார்களே, அது கொடுமையிலும் கொடுமை. கல் வீச்சில் காயப்படாமல் இருப்பதற்காகத்தான் அவர்களுக்கு மூங்கில் தட்டிக் கேடயங்கள் தரப்பட்டுள்ளன. மெலிதான தாக்குதலுக்கே தடி கொடுக்கப்பட்டிருக்கிறது. தீவிர வன்முறை என்றால் அவர்கள் கண்ணீர்ப்புகைக் குண்டுகளை வீசலாம்; வான் நோக்கிச் சுடலாம், மிரட்டலுக்காக. வளைத்துப் பிடிப்பதற்காக முழங்காலுக்குக் கீழே எதிரியைச் சுடலாம். ‘இதெல்லாம் முடியவில்லை, கலவரம் மோசமானது; சுட்டேன். வன்முறையாளர்களில் சிலர் இறந்தார்கள்’ என்று காவல்துறையினர் நிலைமையைத் திரித்துச் சொன்னாலும் அது, சட்டம் ஒழுங்கைக் காக்கும் நடவடிக்கையாகத்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறதேதவிர, கொலையாகக் கருதப்படுவதில்லை. இத்தனை இருந்தும் காவல் துறையினர் சிலர் வக்கீல்கள்மீது கற்களை வீசினார்கள். லத்தியைச் சுழற்றி மனிதர்களை அடித்தார்கள். வாகனங்களை நொருக்கினார்கள். எந்த விதிமுறைப்படி இவர்கள் வாகனங்களின்மீது தடியடிப்பிரயோகம் நடத்தினார்கள்? இது அவர்களது வரம்புமீறிய ஆத்திரத்தை வெளிப்படுத்தியது. ஆக, கல்லும் தடியுமே சட்டம் என்றாகிறது.

நீதி நிர்வாகத் துறை ஒரேயடியாக, கடுமையான வார்த்தைகளைால் காவல் துறையைச் சாடவில்லை. அதேநேரம் தம் துறையினரையும் கடிந்துகொள்ளவில்லை. கலவரத்தைத் தொடங்கிய, நடத்திய, வக்கீல்கள் கௌரவமாக நடந்துகொள்ளவில்லை என்பதனால், இன்றைய நீதிபதிகளான முன்னாள் வக்கீல்கள் இந்நாள் வக்கீல்களைக் கண்டிக்கவில்லையோ என்று மக்கள் நினைக்கத் தூண்டப்படுவதும் துரதிருஷ்டமான போக்கே. காவல் துறையினரின் எஜமானனான அரசாங்கத்தை, நீதித் துறையை இந்த விஷயத்தில் விமரிசிக்கமுடியாது. ஏனென்றால், அரசு சார்ந்த காவல்துறை அத்துமீறி நடந்துகொண்டுவிட்டது. ஏதோ நடந்தது, மறப்போம், மன்னிப்போம், வேலையைத் தொடர்வோம் என்று வக்கீல்கள் நினைப்பதாகவும் தெரியவில்லை.

சென்னைக்கு ஆதரவாக பிற ஊர்களிலும் கொந்தளிப்பு எதிரொலித்தது. அங்கும் கறுப்பும் காக்கியும் மோதிக்கொள்கின்றன. இது இன்னமும் தொடர்கிறது. இப்போது முதல்வர் உண்ணாவிரதம் இருக்கிறேன் என்கிறார். இந்தநிலையில் அவரால் செய்யமுடிவது இதுதான். வேறு யார்தான் என்ன செய்துவிட முடியும், இவர்களா நம் சட்டத்தின் காவலர்கள் என்று நொந்துகொள்வதைத் தவிர?

இதுபோன்ற மோதல்கள் இனி நிகழாமலிருக்க, ஜனநாயகம் காயப்படாமல் பிழைக்கச்செய்ய ஒரேயொரு வழிதான் இருக்கிறது. வக்கீல்களுக்கு கட்சிக்காரர்கள் இருக்கலாம். ஆனால், வக்கீல்கள் கட்சிக்காரர்களாக, அரசியல் கட்சிக்காரர்களாக, நடந்துகொள்ளக்கூடாது. வக்கீலுக்குப் படித்துவிட்டு அரசியலுக்குச் செல்பவர்கள் தயவுசெய்து அங்கேயே தொடர்வார்களாக; சட்டம்பிழைக்கட்டுமே! எல்லா அரசியல் கட்சிகளும் தம் வக்கீல்கள் பிரிவுகளை உடனடியாகக் கலைத்துவிடவேண்டும், பொதுநன்மை கருதி. எதிர்காலத்தில் இதனால் ஆபத்து அதிகமாகலாம்.

வழக்குகள் வழக்குகளாக, முட்டை விதிகளின்படி அல்லாமல் சட்ட விதிகளின்படி நடக்கட்டும். இதே நிலைமை தொடர்ந்தால் இனி நீதிமன்றக் கட்டடங்கள் அந்தந்தக் கட்சிகளின் வண்ணங்களைப் பூசிக்கொள்ள நேரிடும். அல்லது, வக்கீல்கள் கறுப்புக் கோட்டுப் போட்டுக்கொள்வதைப்போல நீதிமன்றக் கட்டடங்களுக்கும் கறுப்பு வண்ணம் பூசவேண்டியிருக்கும்.

கறுப்பும் சிவப்பும் கல்லாலும் கழியாலும் மோதிக்கொள்வது ஜனநாயகத்துக்கு ஆபத்து. கறுப்புக் கோட்டுக்காரர்களுக்குச் சொல்லப்படுவது காக்கிச் சட்டைக்காரர்களுக்கும் பொருந்தும். அணிந்திருக்கும் காக்கிச் சட்டையின் மாட்சிமை புரியாமல் கரைவேட்டிக்காரர்களாக சில சமயங்களில், நீதிமன்ற வளாக மோதல் என்றில்லை, வேறுபல விவகாரங்களிலும் காவல்துறையினர் நடந்துகொள்வது ஜனநாயகத்துக்கு இழுக்கு. இப்படிச் சட்டத்தை மதிக்கவேண்டியவர்களே அதைக் காலில்போட்டு மிதிப்பார்கள் என்றால் சமுதாயத்தின் பிற துறைகளில், அதாவது படித்த, படிக்காத, அரைகுறை ஊழியர்களின் வேலைநிறுத்தம், அரசியல் தொண்டர்களின் அராஜகம், மாணவர்களின் போராட்டம் இவை சார்ந்த வன்முறைகளைக் கண்டிக்க சட்டத்தின் காவலர்கள் என்று சொல்லிக்கொள்பவர்களுக்கு என்ன யோக்கியதை இருக்கிறது?

எத்தனை கமிஷன்கள் நியமித்தால் என்ன, யார் விசாரித்தால் என்ன? கட்சிகளின் பிடியிலிருந்து கறுப்புக் கோட்டுகளும் காக்கிச் சட்டைகளும் விடுபட்டால்தான் அவர்களுக்கும், அவர்களை நியமித்தவர்களுக்கும், நியமித்தவர்களை நியமிப்பதாகச் சொல்லப்படும் மக்களுக்கும் கௌரவம் மிஞ்சும். ஆனால், சட்டம் ஒழுங்கு சம்பந்தப்பட்டவர்கள் எல்லோரும் எதையெதையோ தேடுவதனால் சமூக கௌரவம் காணாமல்போகிறது. அந்த கௌரவத்தை மீட்டுத்தரும் பொறுப்பில் உள்ளவர்களே அதைப் பாழ்படுத்துவது இன்றைய ஜனநாயகத்தின் சாபக்கேடு. இது சமுதாயத்துக்கு இவர்கள் தெரிந்தே இழைக்கும் தீங்கு. சட்டத்தைக் காக்கவேண்டிய இவர்களே இப்படி நியதிகளை, மரபுகளை மீறி, ஒழுக்கத்தைப் புரட்டிப்போட முடியுமென்றால், நமக்கு எதிரிகள் வெளிநாடுகளிலிருந்து வரவேண்டுமென்பதில்லை. ■

# தொடரும் அச்சுறுத்தல்



## இராணுவ நடவடிக்கைகளில் ஒடுக்கப்படும் பத்திரிகைச் சுதந்திரம்

தண்டாயுதன்

இலங்கையில் பத்திரிகையாளர்கள் குறிப்பாக, தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீதான அச்சுறுத்தல், கடந்த சில வருடங்களாக ஒரு தொடர்கதையாக இருந்துவருகிறது. இத் தொடர்கதையில் ஒரு புதிய அத்தியாயமாக 'உதயன்', 'சுடரொளி' ஆகிய பத்திரிகைகளின் பிரதம ஆசிரியர் என். வித்தியாதரனின் கைது காணப்படுகிறது.

கொழும்பு, கல்கிஸையிலுள்ள பிரேதசாலை ஒன்றில், தமது உறவினர் ஒருவரது இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டிருந்தபோது, பலர் முன்னிலையில் வித்தியாதரன் கடத்திச் செல்லப்பட்டார்.

பலவந்தமாக, ஒரு 'கிரிமினல்' குற்றவாளியைப்போல அவர் வாகனமொன்றில் ஏற்றப்பட்டார். அவரைப் பிடித்து வாகனத்தில் ஏற்றியவர்கள் 'காடையர்கள்' போலவே நடந்துகொண்டனர்.

காட்டுத்தீபோல் வித்தியாதரன் கடத்தல் விவகாரம் பரவ ஆரம்பித்ததும், அரசாங்கம் செய்வதறியாது, 'பொலிசாரே அவரைக் கைதுசெய்துள்ளனர்' என்று, கடத்தல் இடம்பெற்ற ஒருமணி நேரத்தில் அறிவித்தது.

ஓரிரு மாதங்களுக்கு முன்னர் 'சண்டே லீடர்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் லசந்த விக்கிரமதுங்க பட்டப்பகலில் படுகொலை செய்யப்பட்டிருந்தார். இதனையடுத்து மற்றொரு சிங்களப் பத்திரிகை ஆசிரியர் வாகனமொன்றில் சென்றுகொண்டிருந்த சமயம் பலாத்காரமாக தாக்கப்பட்டிருந்தார்.

இவ்வாறு, பத்திரிகையாளர்களை இலக்குவைத்து மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் நாளுக்குநாள் மோசமாகிவரும் தருணத்திலேயே வித்தியாதரன் கடத்தப்பட்டுள்ளார். ஏற்கனவே, சுமார் ஒருவருட காலமாக திஸ்ஸநாயகம் என்ற பத்திரிகையாளர் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார். தற்சமயம் வித்தியாதரனும் விசாரணைக்குள்ளாகியுள்ளார். வித்தியாதரனோடு தொடர்புடைய வேறுசில பத்திரிகையாளர்களும் விசாரணைக்குள்ளாக்கப்பட்டிருந்தனர்.

வித்தியாதரன்மீது நீண்டகாலமாகவே அச்சுறுத்தல்கள் இருந்துவருகின்றன. யாழ்ப்பாணத்தில் அவரது 'உதயன்' அலுவலகம் பல தடவைகள் தாக்கப்பட்டதுடன், அதன் ஊழியரும் ஒருவர் கொல்லப்பட்டிருந்தார். கொழும்பிலும் சுடரொளி பத்திரிகை நிறுவனம் தாக்குதலுக்குள்ளாகியதோடு, அதன் பாதுகாப்பு ஊழியரொருவரும் கைக்குண்டுத் தாக்குதலில் உயிரிழந்திருந்தார்.

தராக்கி சிவராம், ஐ. நடேசன் ஆகியோர் கடந்த வருடங்களில் கொல்லப்பட்டனர்.

வித்தியாதரன் பாதுகாப்புத் துறையினரால் நீண்டகாலமாகவே நோட்டமிடப்பட்டுவந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இவருக்கு மிக நெருக்கமான தொடர்பு இருக்கிறதென்பதே பாதுகாப்புத் துறையினரது அபிப்பிராயமாக இருந்தது. அண்மையில், கொழும்பில் இடம்பெற்ற புலிகளது விமானத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக சந்தேகத்தின் பேரில் வித்தியாதரன் இப்போது கைதாகியுள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற தினம் வன்னியிலிருந்து இவரோடு புலிகள் தொலைபேசி வாயிலாகத் தொடர்புகொண்டு, கொழும்பு நிலவரம்பற்றிக் கேட்டதாகவும், இதனைப் பதிவுசெய்த பின்னரே அவர் கைதாகியுள்ளாரென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பொதுவாகப் பார்க்குமிடத்து, தமிழரோ, சிங்களவரோ பத்திரிகையாளரென்னும்போது - அரசாங்கத்துக்கு சவாலாக நடந்துகொள்ளும்போது, அவர்கள் ஆபத்தை எதிர்நோக்கவேண்டிய நிலைக்கே தள்ளப்பட்டுள்ளனர். நீண்டகாலம் தடுத்துவைக்கப்பட்டு விசாரிக்கப்பட்ட முதலாவது பத்திரிகையாளராக யாழ்ப்பாணம் 'ஈழநாடு' பத்திரிகையின் கொழும்பு செய்தியாளராகவிருந்த இ. கந்தசாமி விளங்குகிறர். இவர், எண்பதுகளின் நடுப்பகுதியில் கொழும்பிலுள்ள ஈழநாடு அலுவலகத்தில் கைதாகி, விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். பல மாதங்கள் அவர் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டு விசாரிக்கப்பட் பின்னர் விடுதலையாகியிருந்தார்.

இதன் பின்னர், இந்திய அமைதி காக்கும் படையினர் ஈழநாடு பத்திரிகையின் முன்னாள் ஆசிரியராகவிருந்த எஸ். எம். கோபாலரத்தினத்தை கைதுசெய்து, தடுப்புக் காவலில் சில வாரங்கள் வைத்து விசாரித்தனர். இதனைத் தொடர்ந்து, குறுகிய காலமாகவும் நீண்ட காலமாகவும் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் அவ்வப்போது விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

பட்டப்பகலிலேயே பலர் முன்பாக பத்திரிகையாளர்கள் கொல்லப்படுவதும் கைதுசெய்யப்படுவதும் இது ஓர் 'அரச பயங்கரவாதம்' என்று உணர்த்துவதாகவே இருக்கிறது.

செய்தித் துறையினர் அரசாங்கத்துக்கு சாதகமானவர்களாக இருக்கவேண்டும் என்றே எதிர்பார்க்கப்படுகின்றனர். ஓரிரு பத்திரிகைகள், தனியார் வானொலி, தொலைக்காட்சிகள் தவிர, ஏனையவை அரசுக்கு ஒத்திசைவாகவே செயல்படுகின்றன. வடக்கில் இடம்பெறும் இராணுவ நடவடிக்கைகளைக் காரணம்கூறி, தெற்கில் செய்தியாளர்களை அரசாங்கம் ஒடுக்கியேவருகிறது. அரசுக்கு எதிரான தமிழ் அரசியல்வாதிகள் ஜோசப் பரராஜசிங்கம், இ. ரவிராஜ், தி. மகேஸ்வரன் போன்றவர்கள் படுகொலை செய்யப்பட்டதைப்போல, தற்சமயம் தமிழ்ச் செய்தியாளர்கள்மீது பயங்கரவாத அழுத்தம் அதிகமாகியுள்ளது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் கல்வி பயின்ற காலத்திலேயே இலக்கியம், விளையாட்டுத்துறை போன்றவற்றில் ஆர்வம் கொண்டிருந்தவர் வித்தியாதரன். 'தினபதி' பத்திரிகையில் பிரபல பத்திரிகை ஆசிரியர் எஸ். டி. சிவநாயகத்தின்கீழ் பத்திரிகைத்துறையுள் பிரவேசித்தார்.

பின்னர், யாழ்ப்பாணத்தில் 'உதயன்' பத்திரிகையை ஆரம்பித்ததோடு, சுமார் பத்து வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் 'சுடரொளி' பத்திரிகையை ஆரம்பித்திருந்தார்.

உதயன் பத்திரிகை பல்வேறு இடர்களுக்கு மத்தியிலும் தடையின்றி வெளிவருவதில் வித்தியாதரனுக்கு பெரும்பங்கு உண்டு. அனைத்துமொழி செய்தியாளர்களுடனும் நன்கு பரிச்சயம்கொண்டவர் வித்தியாதரன். அவரது தடுப்புக்காவல் அவரது பாதுகாப்பைக் கேள்வியாக்கியுள்ள அதேவேளை, தமிழ்ச் செய்தியாளர்களையும் தளர்வடைய வைத்துள்ளது. ■



அட்டை செய்தி

# ஒருபுறம் வேடன் மறுபுறம் வேங்கை

**தற்போதைய சூழ்நிலையில் இலங்கையில் ஒரு திருப்பத்தைக் கொணர முடியுமா?**

தண்டாயுதன்

இராணுவ ரீதியான வெற்றிகளையீட்டி தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை ஓரங்கட்டியுள்ளதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் அறிவித்துவந்த நிலையில் தென்னிலங்கையில் அக்குரஸ்ஸ பகுதியில் மனித குண்டொன்று வெடித்ததில் பதினெட்டுப் பேர் பலியாகியுள்ளதுடன், அமைச்சரான மஹிந்த விஜேசேகராவும் படுமோசமாகக் காயமடைந்து உயிருக்காகப் போராடிவருகிறார்.

நபிகள் நாயகத்தின் பிறந்த தினத்தைக் குறிக்கும் மீலாத் விழா நிகழ்வொன்றில் இச் சம்பவம் இடம்பெற்றது. அங்கு வந்திருந்த அரசியல்வாதிகளை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்ட தாக்குதலில் இந்த அனர்த்தம் ஏற்பட்டிருந்தது. வடக்கே, வன்னிப் பகுதியில் நிறையவே பிரதேசங்களை இராணுவம் ஊடறுத்துள்ளது. வன்னியில் பெற்ற இராணுவ வெற்றிகளைப் பயன்படுத்தி பிரசாரஞ் செய்து, கடந்த வாரங்களில் மத்திய மற்றும் வடமேல் மாகாணசபைத் தேர்தல்களிலும் ராஜபக்ஷ தரப்பு வெற்றிபெற்றுள்ளது.

எனவே, தனது ஆட்சியைப் பலப்படுத்தவும் அரசியல் தேவைகளுக்காகவுமே இராணுவ நடவடிக்கைகளை ஜனாதிபதி ராஜபக்ஷ பயன்படுத்திவருகிறார் என்பது அரசியல்வாதிகளின் அபிப்பிராயமாக இருக்கின்றது.

எது எப்படியிருந்தபோதிலும், வன்னியிலிருந்து வருகின்ற மக்களின் நிலைமை மிக மோசமானதாகவே இருக்கின்றது. 'ஒருபுறம் வேடன், மறுபுறம் வேங்கை; இவையிரண்டுக்குமிடையே அப்பாவிப் புள்ளிமானி'ன் நிலையாகவே வன்னிப் பெருநில மக்களின் அவலம் காணப்படுகிறது.

யுத்தம் இடம்பெறும் பகுதிக்குள் சிக்குண்டுள்ள மக்கள் உயிருக்குக்காகத் தினமும் போராடிவருகின்றனர். அதேசமயம், யுத்த பிரதேசங்களிலிருந்து தப்பி, வவுனியா அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள மக்களும் 'தாழியிலிருந்து அடுப்பினுள்' வீழ்ந்ததைப்போல, சொல்லொணாக் கஷ்டங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

யுத்தப் பிரதேசங்களிலிருந்து வந்த மக்களை வவுனியாவில் முகாம் அமைத்து பாதுகாப்பதாக அரசு கூறிவருகிறது. ஆனால், அம் முகாம்களில் போதிய அளவு உணவோ, சுகாதார வசதிகளோ காணப்படுவதாக இல்லை. இதுதவிர, முகாமுக்கு வெளியே வரமுடியாத வகையிலும், உள்ளே எவரும் செல்லமுடியாத வாறும் கடுமையான தடுப்பு நடவடிக்கைகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளின் யுத்த நிறுத்த இணக்கத்தை ஏற்க அரசு மறுத்திருந்தது. அதுமாத்திரமன்றி, இந்திய அரசு உள்பட, வேறுபல நாடுகளும், உலக அமைப்புகளும் விடுத்த கோரிக்கையையும் ராஜபக்ஷ அரசு ஏற்கவில்லை. இத்தருணத்திலேயே அக்குரஸ்ஸ குண்டு அனர்த்தம் ஏற்பட்டது.

அக்குரஸ்ஸ, இலங்கையின் தென் முனையில், காலி பிரதேசத்தில் அமைந்துள்ளது. அத்துடன், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் தொகுதியான அம்பாந்தோட்டைப் பகுதியின் அயல் பிரதேசமாகவும் அமைந்துள்ளது. அக்குரஸ்ஸவில் இடம்பெற்ற இக் குண்டுத் தாக்குதல் விடுதலைப் புலிகள் வடக்கே மட்டுமல்ல, தென்னிலங்கையிலும் ஊடுருவியுள்ளதையே புலப்படுத்துவதாக இருக்கிறது.

**அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான பாதை தற்சமயம் தடைகள் நிறைந்ததாகவே இருக்கிறது**

**தமிழ் அரசியல் தலைமைகள் பலமற்றுப்போயுள்ள நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு இந்தியாவின் உதவியே பெரிதும் தேவைப்படுவதாக இருக்கின்றது**

இராணுவ ரீதியான வெற்றிகளை ஈட்டியபின்னர் அரசியல் தீர்வொன்றை முன்வைக்கப்போவதாக அரசு தரப்பு தெரிவித்துவருகின்றது. ஆனால், இராணுவ நடவடிக்கைகள் மூலமான வெற்றி நிரந்தரமற்றதென்பதையும், ஆயுதப் போராட்டம் முற்றுமுழுதாக களையப்பட முடியாதது என்பதையுமே அக்குரஸ்ஸ தாக்குதல் இத்தருணத்தில் எடுத்துச்சொல்கிறது.

அரசியல் தீர்வுபற்றி அரசாங்கம் அடிக்கடி குறிப்பிட்டு வருகின்றது. ஆனால், இனப்பிரச்னைத் தீர்வு சம்பந்தமாக நியமிக்கப்பட்ட அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸவிதாரண தலைமையிலான சர்வகட்சிக் குழு, இதுவரை தனது முடிவுகள் எதனையும் வெளியிடாதிருக்கின்றது. 'பானையில் இருந்தால் மட்டுமே அகப்பையில் வரும்' என்பதுபோல, இப்பிரச்னையைத் தீர்ப்பதற்கான திட்டங்கள் அரசாங்கத்திடம் கைவசம் இல்லை; சர்வகட்சி ஏற்பாடுகூட உலகுக்கான ஏமாற்று வித்தையே என்ற கருத்து பரவலாகவே இருக்கிறது.

இலங்கைப் பிரச்னையைப் பொறுத்தவரை அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான பாதை தற்சமயம் தடைகள் நிறைந்ததாகவே இருக்கிறது. அரசாங்கத்திடமும் எவ்வித தீர்வுத் திட்டமும் இல்லை. தமிழ் அரசியல் கட்சிகளிடமும் அரசியல் தீர்வை வலியுறுத்தவோ அல்லது தீர்வொன்றை முன்வைக்கவோ முடியாத நிலை காணப்படுகிறது.

வெறுமனே அரசாங்கத்தின் நடவடிக்கைகளை நியாயப்படுத்தி பேசும் நிலைக்கு கொழும்பிலுள்ள தமிழ் அரசியல்கட்சிகள் தள்ளப்பட்டுள்ளன. வடக்கு-கிழக்கை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு எவ்வித கருத்துக்களையும் கூறமுடியாத நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது.

இந்த சூழ்நிலையிலேயே இந்திய வெளியுறவுச் செயலாளர் சிவசங்கர் மேனன் வாஷிங்டனில் இலங்கைப் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தைகளை நடத்தியுள்ளார். அமெரிக்க இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்ரன் உள்பட அமெரிக்க அதிகாரிகள் இப்பேச்சுக்களில் கலந்துகொண்டிருக்கின்றனர். ஆயினும், இந்தியாவினால் வெளிநாடுகளின் உதவியோடு, இலங்கையின் தற்போதைய சூழ்நிலையில் ஒரு திருப்பத்தைக் கொணர முடியுமா என்பது சந்தேகத்துக்குரியதாகவே இருக்கிறது. சிவசங்கர் மேனன் அமெரிக்காவில் நடத்திய பேச்சுக்களின்போது, இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு அதிகார பரவலாக்கல்களோடு கூடிய தீர்வொன்றே ஏற்புடையதாக இருக்குமென வலியுறுத்தியுள்ளார். இலங்கையில் தமிழ் அரசியல் தலைமைகள் பலமற்றுப்போயுள்ள நிலையில் இலங்கைத் தமிழர் பிரச்னைக்கு இந்தியாவின் உதவியே பெரிதும் தேவைப்படுவதாக இருக்கின்றது.


ஆயினும், வெளி சக்திகளின் அழுத்தங்களுக்கு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அரசாங்கம் எவ்வளவு தூரம் அடிபணியுமென்பதும் கேள்விக்குறியே. எது எவ்வாறாயினும், இலங்கையின் தற்போதைய நிலைபரத்தைப் பார்க்கையில், மஹிந்த ராஜபக்ஷ அரசு தட்டிக் கேட்க ஆளில்லாத நிலையில் இருப்பதையே அவதானிக்க முடிகிறது. இந்நிலையில், வெளியுலகிலிருந்து பொருளாதார ரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் முன்வைக்கப்படுகின்ற அழுத்தங்களே இலங்கை அரசாங்கத்தை வழிக்குக் கொணர்வதற்கு ஏதுவானதாக இருக்கலாம்.

'பூனைக்கு மணிகட்டுவது யார்? இந்திய தலைமையீட்டை மீளவும் எதிர்பார்க்கும் நிலையே பரவலாக தெரிகிறது. ■

# அரசியலில் தொலைந்த மனிதாபிமானம்

**இலங்கைத் தமிழர்கள் விவகாரத்தில்
இந்திய அரசாங்கம்,
தமிழக அரசியல் கட்சிகள்,
தமிழக மக்கள் கொண்டுள்ள நிலைப்பாடுகள்**

தனஞ்ஜெயன்



இலங்கைத் தமிழர் பிரச்னை இன்று உலகின் கவனத்தை ஈர்த்திருக்கிறது. ஐக்கிய நாடுகள் சபையும் வல்லரசுகளும் இந்தப் பிரச்னையில் நேரடியாகத் தலையிட வேண்டும் என்று கோரிக்கைகள் வைக்கப்படுகின்றன. தமது அக்கறையை ஐ.நா. சபையும் வல்லரசுகளும் வெளிப்படுத்தியுமிருக்கின்றன. தமிழகத்தில் இதுபற்றிய கொந்தளிப்பு உச்ச நிலையை எட்டியிருக்கிறது. இந்திய அரசு இலங்கை அரசை நிர்ப்பந்தித்துப் போர்நிறுத்தம் செய்ய முயலவேண்டும் என்று கோரி, தமிழகத்தில் நான்குபேர் தீக்குளித்து மாண்டிருக்கிறார்கள். அமெரிக்காவும் புதிய அதிபர் பராக் ஒபாமாவும் இதில் தலையிட வேண்டும் என்று தமிழகத்திலுள்ள பல கட்சிகள் அமெரிக்க தூதரகம் சென்று மனு கையளித்துள்ளன.

இலங்கையில் தமிழர்களின் நிலைமை மிக மோசமாகிக்கொண்டிருக்கிறது என்பதில் எந்த ஐயமும் இல்லை. 1980களில் நிகழ்ந்ததுபோன்ற திட்டமிட்ட, பெரும்பாலும் எதிர்ப்பில்லாத, இனரீதியான



டாக்டர் ராமதாஸ். வை. கோபாலசாமி, ப. நெடுமாறன், தொல். திருமாவளவன் அமெரிக்க தூதரகம் முன்

**ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராடும் பல்வேறு தரப்பினரும் தி. மு. க. மீதும் கருணாநிதிமீதும் கடும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள்**

**ராஜீவ் காந்தி படுகொலைக்குப் பின்னர் புலிகளுக்கும் இந்திய அரசு அமைப்புக்களுக்குமிடையே எந்த தொடர்பும் இல்லாமல்போனதும் நிலைமையைச் சிக்கலாக்குகிறது**

மனித படுகொலை இலங்கை அரசால் நடாத்தப்பட்டுவருகிறது. இந்தப் பிரச்னையில் நேரடியாகவும் மறைமுகமாகவும் தொடர்புள்ளவர்கள்; இலங்கை அரசு, இந்திய அரசு, சீன, பாகிஸ்தான் மற்றும் அமெரிக்க, ஐரோப்பிய அரசுகள்; தமிழீழ விடுதலைப் புலிகள்; இந்திய தேசிய காங்கிரஸ், திராவிடக் கட்சிகள்; கருணாநிதி, ஜெயலலிதா; பாட்டாளி மக்கள் கட்சி (பா. ம. க.), மக்கள் திராவிட முன்னேற்ற கழகம் (ம. தி. மு. க.), விடுதலைச் சிறுத்தைகள் ஆகிய கட்சிகள்; நெடுமாறன் மற்றும் பிற சிறு குழுத் தலைவர்கள்.

இந்தப் பட்டியலில் முக்கியமாக இடம்பெறவேண்டியவர்கள் இலங்கைத் தமிழர்கள். ஆனால், அவர்கள் எது பற்றியும் முடிவுசெய்யக்கூடிய நிலையில் இல்லாது, மௌனமாகச் சிதைந்துகொண்டிருக்கிறார்கள்.

கிறிஸ்துவுக்கு முன்னைய காலகட்டத்திலிருந்தே இலங்கையில் சிங்களவர் - தமிழரிடையே பிரச்னைகள் இருந்துவருவதாக சரித்திர தகவல்கள் கூறுகின்றன. எனினும், சம உரிமை பெறுவதற்கான தமிழர்களின் போராட்டம் ஆயுத போராட்டமாக மாறியது கடந்த 25 - 30 ஆண்டுகளாகத்தான். பெருமளவில் தமிழர்கள் கொன்று குவிக்கப்படுவதும், உயிரைக் காப்பாற்றிக்கொள்ள அவர்கள் புலம்பெயர்வதும் இந்தக் கால்கட்டத்தில்தான் அதிகமாக நடைபெற்றுவருகின்றன.

இலங்கையில் இனப் பிரச்னைக்கு எதிராக பல குழுக்கள் ஆயுதம் ஏந்திப் போராடினாலும் அவை அனைத்தையும் பின்தள்ளிவிட்டு, களத்தில் முன்னணியில் நிற்பது தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்புத்தான். இந்தப் போராட்டத்தில் புலிகளுக்கு இராணுவ ரீதியான வெற்றிகள் கணிசமான அளவில் கிடைத்தாலும், சிங்கள இனவாதத்தையோ தமிழர் படுகொலையையோ அவர்களால் இன்றுவரையிலும் முடிவுக்குக்கொண்டுவர முடியவில்லை. புலிகளுக்கும் இராணுவத்துக்குமிடையே நடக்கும் கடும் போர், கடந்த சில ஆண்டுகளாக இலங்கைப் பிரச்னையின் தன்மையையே மாற்றிவிட்டது. 'தமிழர் உரிமை' என்னும் அடிப்படை இலட்சியத்தைப் பற்றிப் பேசுவதற்குப் பதிலாக, போர் நிறுத்தம் பற்றிய பேச்சுத்தான் பிரதான இடம் வகிக்கிறது. இந்த இரு தரப்பினரையும் பேச்சுவார்த்தைக்கு இணங்க வைப்பதே சமாதானம் விரும்புவோரின் முதல் இலக்காக இருக்கிறது.

தமிழர்களுக்கு ஆதரவாக இந்தியாவின் நேரடித் தலையீடுகுறித்த அச்சம் கொண்ட இலங்கை அரசு, இந்தியாவின் நேரடி, மற்றும் மறைமுக எதிரிகளான பாகிஸ்தான், சீனா ஆகிய நாடுகளோடு தற்போது ஏற்படுத்திக்கொண்டிருக்கும் நேரடித் தொடர்புதான் தற்போதைய போரின் முக்கிய அம்சம் என்று சொல்லப்படுகிறது. தமிழர்களின் உயிரைக் காப்பாற்றும் நோக்கில் இந்தியா நேரடியாகத் தலையிடும்பட்சத்தில் அமெரிக்க படைத்தளம், சீன ஆலோசகர்கள் மற்றும் பாகிஸ்தான் ஆயுதங்கள், ஆதரவு ஆகியவற்றோடு இலங்கை அரசு இந்தியாவை எதிர்கொள்ளத் தயாராகவே இருக்கிறது என்றும் சொல்லப்படுகிறது. இந்தியா தலையிடும் என்று தோன்றவில்லை என்பது வேறு விடயம்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் தமிழர்களின் ஒட்டுமொத்த நலனுக்கும், விடுதலை குறித்த அவர்களின் திட்டங்களுக்கும் வேறுபாடு எதுவும் இருப்பதாக அவர்கள் நினைத்ததேயில்லை. ராஜீவ் காந்தி - ஜயவர்த்தன ஒப்பந்தம், இலங்கையில் அதிகார பகிர்வு, அரசியல் நடவடிக்கைகள், தமிழர்க



தி. மு. க. மனித சங்கிலி போராட்டத்தில் தயாநிதி மாறன், மு. க. ஸ்டாலின்

ளுக்கு குறிப்பிடத்தகுந்த அளவில் உரிமைகள் போன்றவற்றுக்கு உத்தரவாதம் அளித்தது. 1948இல் இழைத்த தவறு திருத்திக்கொள்ளப்பட்டு, தமிழ் மொழியும் ஆட்சி மொழியாக அங்கீகரிக்கப்பட்டது. ஆனால், இவை எவையும் புலிகளைத் திருப்திப்படுத்தவில்லை. தமிழர் வாழும் பகுதிகளில் தங்களுக்கான அதிகாரம் உறுதிசெய்யப்பட்டதால் புலிகள் இதை ஏற்றுக்கொள்ளவில்லை என்று புலிகளின் விமர்சகர்கள் சொல்கிறார்கள். தமிழர் தன்னாட்சி என்பதை தமிழர் உரிமைமீட்பின் முதல் படியாக நினைத்துச் செயல்படாமல், தமிழீழத்துக்குக் குறைவான எதனையும் ஏற்கத் தயாராக இல்லை என்ற நிலையையே புலிகள் எடுத்துவருகின்றனர். இலங்கை இனப் பிரச்னையின் பின்னணியில் சிங்கள பேரினவாதத்தின் தன்மைகளைச் சுட்டிக்காட்டிப் புலிகளின் நிலையை ஆதரிப்பவர்களும், புலிகளின் அதிகார வேட்கையைச் சுட்டிக்காட்டி அவர்களை விமர்சிப்பவர்களும் இருக்கிறார்கள். புலிகளது நிலைப்பாட்டின் சாதக பாதகங்கள் தனித்து விவாதிக்கப்படவேண்டியவை என்றாலும், புலிகளின் நிலைப்பாடும் தமிழர்களின் வாழ்நிலையும் பிரிக்கமுடியாத அளவு பின்னிப் பிணைந்தவை என்பதை மறுக்கமுடியாது என்பதே இன்றைய நிலை.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர், இந்தியாவில் காங்கிரஸ் மற்றும் இதர கட்சிகளில் குறிப்பாக, தமிழகத்தின் சாதாரண மக்களிடையே புலிகள்மீதிருந்த மதிப்பு, பெருமித உணர்வு, ஆதரவு என்பன கணிசமாகக் குறைந்துவிட்டன. புலிகள் இழைத்த மிகப்பெரிய அரசியல் தவறு என்று ராஜீவ் கொலையைக் கூறலாம். இதை அவர்களும் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். பெரும்பாலான தமிழக அரசியல்வாதிகளைப் பொறுத்தவரை, இலங்கைத் தமிழர்களுக்கான ஆதரவு என்பது புலிகள் ஆதரவாகவே புரிந்துகொள்ளப்பட்டது. இதற்குக் காரணம், இலங்கைத் தமிழர்களை அடையாளப்படுத்தும் ஒற்றைக் குறியீடாக புலிகள் தங்களை ஸ்திரப்படுத்திக்கொண்டமைதான். முன்னாள் முதல்வர் எம். ஜி. ஆர், புலிகளைப் பகிரங்கமாகவே ஆதரித்தார். முன்னாள் பிரதமர் இந்திரா காந்தியும் ஆதரித்தார். அவரது ஆட்சிக் காலத்தில் புலிகளுக்கு இந்தியாவில் இராணுவப் பயிற்சிகள்கூட அளிக்கப்பட்டன. அப்போதெல்லாம் புலிகள் தமிழக மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு பெற்றிருந்ததுதான் காரணம். எம். ஜி. ஆர். இருந்தவரை இதர போராளிக் குழுக்களை ஆதரித்துவந்த கருணாநிதி, எம். ஜி. ஆரின் மறைவுக்குப் பின்னர் புலிகளை ஆதரித்துவருகிறார். ஆனாலும், போராளிக் குழுக்களுக்கிடையே நடக்கும் 'சகோதர சண்டைகள்' குறித்து தன் கவலையை இன்றளவும் வெளிப்படுத்திக்கொண்டேதான் இருக்கிறார் கருணாநிதி.

ராஜீவ் காந்தி கொலைக்குப் பின் அரசியலில் பிரதான இடத்தைப் பிடித்த ஜெயலலிதா, ஆரம்பத்திலிருந்தே புலிகளைத் தீவிரவாதிகள் என்றே கூறிவந்தார். அதை அவர் இன்றுவரையும் தொடர்கிறார். தமிழ் உணர்வு, தமிழ்த் தேசியம், தனித் தமிழ்நாடு போன்றவற்றை முன்வைத்து அரசியல் மற்றும் இயக்கங்களை நடத்திவரும் நெடுமாறன், வீரமணி, வை. கோபாலசாமி, திருமாவளவன் போன்றோர் புலிகளை நேரடியாகவே ஆதரிக்கிறார்கள். திரைப்படத் துறையைச் சேர்ந்த பாரதிராஜா, சத்யராஜ், சீமான், அமீர் போன்றோரும் தங்கள் ஆதரவில் உறுதியாக இருக்கிறார்கள்.

போர் தீவிரமடையும்போதெல்லாம் நடப்பதுபோல, இப்போதும் அப்பாவித் தமிழர்கள் மிக அதிகமான அளவில் கொல்லப்படுகிறார்கள். நான்காவது தமிழின படுகொலை அரங்கேற்றப்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆனால், இது குறித்து தமிழகத்தில் இயல்பான கொந்தளிப்பு உருவாகவில்லை. ஒருசில அரசியல் கட்சிகள், புலிகள் ஆதரவு இயக்கங்கள் போன்றவற்றால்தான் இந்தப் பிரச்னை கவனிக்கத்தக்கதாக உருவாகியுள்ளது. இதன் காரணத்தைப்பற்றி தமிழகத்தின் இளம் பத்திரிகையாளர்களில் ஒருவர் கூறியிருப்பது கவனிக்கத்தக்கது. 'இப்போது இலங்கைத் தமிழருக்கான ஆதரவு, புலிகளுக்கான நேரடி ஆதரவாகப் புரிந்துகொள்ளக்கூடிய நிலைதான் உள்ளது. ஒருவேளை, நெருக்குதல்களால் இந்திய அரசு நடவடிக்கை எடுத்தாலும், அது புலிகளின் வெற்றியாகக் கருதப்படுமேதவிர, இலங்கைத் தமிழர்கள் அதற்கான நேரடிப் பலனை அநுபவிப்பார்களா என்பதுபற்றிச் சந்தேகம் இருக்கிறது.'


**எதிர்பார்த்த அளவில் தி. மு. க. வின் செயல்பாடுகள் இவ்விஷயத்தில் தீவிரமாக இல்லை என்பதே யதார்த்தம்**

**புலிகள் ஆயுதங்களைக் கீழேபோட்டால்தான் போர் நிறுத்தம் பற்றிப் பேசமுடியும் என்பதே மத்திய அரசின் நிலை**

முத்துக்குமார் என்னும் இளைஞன் இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகத் தீக்குளித்து இறந்தமை; இலங்கையிலிருந்து தொடர்ந்து துயரச் செய்திகள் வருதல் போன்றவற்றுக்குப் பின்னர் தமிழக மக்கள், மற்றும் செய்தி நிறுவனங்களின் போக்கில் கணிசமான மாற்றம் ஏற்பட்டுள்ளமை தெரிகிறது. பொது நீரோட்டத்தின் முன்னணி சஞ்சிகைகளில் ஒன்றான 'குமுதம்', பிரபாகரனின் வாழ்க்கை வரலாற்றுத் தொடரை வெளியிடுவதுடன், இலங்கை இராணுவத்தின் செயல்களை அம்பலப்படுத்தும் செய்திகளையும் வெளியிடுகிறது. இன்னொரு பிரபல இதழான 'ஆனந்த விகடன்' வாரந்தோறும் அழுத்தமான செய்திக் கட்டுரைகளின்மூலம் இலங்கை இராணுவத்தைக் கடுமையாக விமர்சிக்கிறது. தமிழகத்தில் எண்பதுகளின் நிலைமை மெல்லத் திரும்புவதுபோலத் தோற்றுகிறது.

**தமிழகத்தில் இயல்பான கொந்தளிப்பு உருவாகவில்லை. ஒருசில அரசியல் கட்சிகள், புலிகள் ஆதரவு இயக்கங்கள் போன்றவற்றால்தான் இந்தப் பிரச்னை கவனிக்கத்தக்கதாக உருவாகியிருக்கிறது**

**எண்பதுகளிலிருந்த ஆதரவு நிலைமை மெல்லத் திரும்புகிறது**



வழக்கறிஞர்கள் ரயில் மறியல் போராட்டம்

ம.தி.மு.க., பா.ம.க., விடுதலைச் சிறுத்தைகள் போன்ற கட்சிகளின் போராட்டம், திரைப்படத் துறையினரின் போராட்டம் என்று பலதரப்பினரும் போராட்டத்தில் ஈடுபட்டுவருவது தமிழக அரசுக்கும் மத்திய அரசுக்கும் நெருக்கடியை ஏற்படுத்திவருகிறது. தி.மு.க. தலைவர் கருணாநிதி, மத்திய அரசில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்தி போர் நிறுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கும்படி தூண்டவேண்டும் என்ற கோரிக்கை வலுவாக எழுந்துள்ளது. ஆனால், எதிர்பார்த்த அளவில் தி.மு.க. வின் செயல்பாடுகள் இவ்விஷயத்தில் தீவிரமாக இல்லை என்பதே யதார்த்தம். இந்நிலையில் ஈழத் தமிழர்களுக்கு ஆதரவாகப் போராடும் பல்வேறு தரப்பினரும் தி.மு.க. மீதும் கருணாநிதிமீதும் கடும் அதிருப்தி அடைந்திருக்கிறார்கள். புலிகள் ஆயுதங்களைக் கீழேபோட்டால்தான் போர் நிறுத்தம் பற்றிப் பேசமுடியும் என்பதே மத்திய அரசின் நிலை என்று மத்திய அமைச்சர்கள் ப. சிதம்பரமும், இலங்கைக்குச் சென்றுவந்த பிரணாப் முகர்ஜியும் கூறிவிட்டார்கள். ஆனால், புலிகள் ஆயுதத்தைக் கீழேபோட்டால் இலங்கை இராணுவம் தாக்குதலை நிறுத்துமா என்பதற்கு என்ன உத்தரவாதம் என்பதற்கு மத்திய அரசிலிருந்து பதில் இல்லை. ராஜீவ் படுகொலைக்குப் பின்னர் புலிகளுக்கும் இந்திய அரசு அமைப்புக்களுக்குமிடையே எந்த தொடர்பும் இல்லாமல்போனதும் நிலைமையைச் சிக்கலாக்குகிறது.

எது எப்படியிருந்தாலும் இப்போதைய முக்கிய கோரிக்கை போர்நிறுத்தம் என்பதுதான். நடைமுறை அர்த்தத்தில் சொல்வதானால், புலிகள்மீது இலங்கை அரசு தொடுத்திருக்கும் போரை நிறுத்துவதுதான். ஏனென்றால், இலங்கைத் தமிழர்களைப் படுகொலை செய்வதை ராஜபக்ஷ அரசு நிறுத்திக்கொண்டு, புலிகள்மீது மட்டும் தாக்குதல்களைத் தொடர்வது என்பது நடைமுறையில் முடியாத காரியமாகவே இருக்கும். புலிகளின் இருப்பிடம், இலங்கை இராணுவத்தின் கண்மூடித்தனமான அணுகுமுறை ஆகியவற்றை வைத்துப் பார்க்கும்போது, அப்பாவித் தமிழ் மக்களைப் பாதிக்காத போர் என்பது சாத்தியமில்லைத்தான். ஆனால், இதைச் சொல்லி, தமிழின படுகொலைகளை நியாயப்படுத்துவது மனிதாபிமானத்தைத் தொலைத்த பேச்சாக மட்டுமே இருக்கமுடியும். மக்களுக்காகப் போர்நிறுத்தம் செய்வது புலிகளுக்குச் சாதகமாக அமையலாம். ஆனால், அதற்காகப் போர்நிறுத்தம் செய்ய மறுப்பது மேலும் கோரமான இனப்படுகொலைக்கே வழிவகுக்கும் என்பதில் சந்தேகமில்லை. எனவே, பொதுமக்கள் வெளியேறுவதற்கு கணிசமான அவகாசமும் சுதந்திரமும் அளித்து, அதுவரையாவது போர்நிறுத்தம் அறிவிப்பதே இலங்கை அரசு உடனடியாகச் செய்யவேண்டியது. போர்க்களத்திலிருந்து வரும் குலைநடுங்கவைக்கும் செய்திகளைப் பார்த்தால் இலங்கை அரசு இதைச் செய்யுமா என்பது பெரிய கேள்விக்குறிதான். ஆனால், உலக நாடுகளும் இந்தியாவும் மனிதாபிமான அடிப்படையில் இதை வலியுறுத்தியாகவேண்டும் என்பதே கோடிக்கணக்கான தமிழர்களின் கோரிக்கை. இதிலும், மருத்துவ மனைகளும் புகலிட முகாம்களும்கூட இராணுவத்தின் தாக்குதல்களுக்கு இலக்காகிவரும் நிலையில், இது மிகவும் அவசரமான, அவசியமான கோரிக்கை என்பதில் சந்தேகம் இருக்கமுடியாது.

கடந்த ஆண்டில் சமரசத்துக்கான பல்வேறு முயற்சிகளுக்குப் பின்னர் அதிகார பகிர்வுக்கான வாய்ப்புக் கிடைத்தபோது, புலிகள் அதைப் பயன்படுத்திக்கொள்ளாததே இப்போதுள்ள நிலைக்குக் காரணம் என்னும் ஒரு கருத்தும் தமிழக மக்கள், மற்றும் செய்தி ஊடகங்கள் மத்தியில் நிலவுகிறது. தமிழீழத்துக்குக் குறைவான எதனையும் பரிசீலித்துப் பார்க்கக்கூட தயாரக இல்லை எனும் புலிகளின் அணுகுமுறையால் வந்த இடர்தான் இது என்று அவர்கள் கருதுகிறார்கள். அரசியல் ரீதியிலான அதிகாரப் பகிர்வை முதற் படியாகவாவது ஏற்றுக்கொண்டு புலிகள் இறங்கிவரவேண்டும் என்று, படுகொலைகளைக் கண்டு பதறும் பலர் கருதுகிறார்கள். ஆனால், இப்போது இராணுவம் இவ்வளவு தூரம் முன்னேறிய பின்னர் அத்தகையதொரு தீர்வுக்கு இலங்கை அரசு ஒப்புக்கொள்ளுமா என்பது கேள்வி.

இது நடக்குமா, அல்லது இலங்கை அரசு விரும்புவதுபோல், புலிகளின் அழிவில்தான் புதிய தொடக்கம் இருக்குமா என்பது தெரியவில்லை. ஒருவேளை அப்படி நடந்தால், அது தமிழ் உரிமைப் போராட்டத்துக்கான பின்னடைவாக இருக்கவே வாய்ப்பு அதிகம். தவிர, புலிகளின் வழிமுறைகள்பற்றிய விமர்சனங்கள் ஒருபுறமிருந்தாலும், கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழர்களின் உரிமைக்காகப் போராடிவரும் புலிகள் இன்று, விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கும் ஒரே சக்தியாக இருக்கிறார்கள். புலிகள் வழிமுறைகள் குறித்து கடும் விமர்சனங்கள்கொண்ட ஈழத் தமிழ் எழுத்தாளர் ஒருவர் கூறிய வாசகம் இங்கு நினைவுகூரத்தக்கது: 'புலிகளின் வெற்றி எமது வெற்றி அல்ல; ஆனால், புலிகளின் தோல்வி எமது தோல்வி'. ■

# தேர்தல் திருப்பங்கள்

**தமிழக அரசியல் கட்சிகள் இலங்கைத் தமிழர் பிரச்னையில் தமது போக்குகளை மாற்றிக்கொள்கின்றன**

**அரசியல் ஆதாயம் முதன்மை பெறுகிறது**

பிங்காட்சன்

இலங்கைப் பிரச்னைக்காக
ஜெயலலிதாவும்
உண்ணாவிரதம்



ஜெயலலிதாவும் இலங்கைப் பிரச்னைக்காக உண்ணாவிரதப் போராட்டம் நடத்திவிட்டார். ஏற்கனவே அனைத்து அரசியல் கட்சியினரும், திரைப்படத் துறையைச் சேர்ந்த சூப்பர் ஸ்ரார், சுப்ரீம் ஸ்ரார், இளைய தளபதி, மூத்த தளபதி, நடிகர், நடிகையர், மீனவர்கள், வர்த்தகர்கள், தகவல் தொழில்நுட்ப துறைப் பணியாளர், ஏன் அரவாணிகள் உள்பட அத்தனைபேரும் ஒருநாள் - ஒரே நாள் உண்ணாவிரதம் இருந்து ஈழத் தமிழருக்கான தம் கடமையைச் செய்து முடித்துவிட்டார்கள்.


ஈழப் பிரச்னையில் இந்திய அரசு தலையிடவேண்டும் என்று கோரி நீதிமன்றப் புறக்கணிப்புப் போராட்டத்தில் குதித்த தமிழக வழக்கறிஞர்களும் சட்டத்தரணிகளும் போராட்டத்தின் அடிப்படை நோக்கத்தை மறந்து துறந்துவிட்டு, தங்களைத் தாக்கிய காவல் துறையின்மேல் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற கோரிக்கைக்குமாறி, தொடர்ந்து போராட்டம் நடத்திவருகிறார்கள்.

முத்துக்குமார் என்ற இளைஞன் இந்தப் பிரச்னைக்காக தீக்குளித்து இறந்து போனான். அவனுக்கு அநுதாபம்காட்ட ஆயிரக்கணக்கில் மக்கள் திரண்டார்கள். அவனைப் பின்பற்றி இலங்கைப் பிரச்னைக்காக எட்டுப்பேர் தீக்குளித்தார்கள். ஆனால், அவர்களை எவரும் கண்டுகொள்ளவில்லை. "ஈழம் என்ற சொல்லைக்கூட உச்சரிக்கக்கூடாது. ஏனென்றால், அது இன்னொரு நாட்டின் பிரிவினையை ஆதரிப்பதாகும். இலங்கையில் அரசு மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளைக் குறைகூறக்கூடாது'' என்றெல்லாம் கூறிவந்த ஜெயலலிதா, ஈழப் பிரச்னைக்காக உண்ணா நோன்பு மேற்கொண்டார்.

ஜெயலலிதா விடுதலைப் புலிகளை எதிர்த்துவருபவர். இலங்கை இனப்



மனித சங்கிலிப் போராட்டம்



முத்துக்குமாருக்கு அஞ்சலி: சத்தியராஜ், பாரதிராஜா

**அரசியல் கட்சியினர், திரைப்படத் துறையைச் சேர்ந்தவர்கள், மீனவர்கள், வர்த்தகர்கள், தகவல் துறை பணியாளர், ஏன் அரவாணிகள் உள்பட அத்தனைபேரும் உண்ணாவிரதம் இருந்து ஈழத் தமிழருக்கான தம் கடமையைச் செய்து முடித்துவிட்டார்கள்**

போரில் இலங்கை அரசின் செயல்பாட்டை நியாயப்படுத்திப் பேசிவருபவர். இதுவரை ஈழத் தமிழர்களை ஆதரித்துத் தமிழ்நாட்டில் நடைபெற்று வரும் போராட்டம் எதிலும் கலந்துகொண்டதில்லை. அவருடைய கூட்டணியில் இப்பொழுது இருக்கும் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி ஏற்பாடு செய்திருந்த உண்ணாவிரதத்தில் கலந்துகொள்ளப் போவதாக வாக்களித்துவிட்டு, கடைசி நேரத்தில் பின்வாங்கியவர்.

அ.இ.அ.தி.மு.க.வின் வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால், ஜெயலலிதாவின் அரசியல் ஆசான் எம். ஜி. இராமச்சந்திரன் விடுதலைப் புலிகளின் நம்பகமான நண்பராக இருந்தார். எண்பதாம் ஆண்டுகளில் விடுதலைப் புலிகளுக்கு மூன்றரைக் கோடி ரூபாய் நிதியை வெளிப்படையாக, பொதுக்கூட்டம்போட்டு அள்ளி வழங்கியவர். 1985இல் ஜெயலலிதாவும்கூட ஈழப் பிரச்னைக்காக உண்ணாவிரதம் இருந்தவர்தான். ஆனால், எம். ஜி. ஆர் . மறைவுக்குப் பின் முற்றிலும் மாறுபட்ட நிலையை எடுத்தார்.

1991ஆம் ஆண்டு தேர்தலில் காங்கிரஸ் கட்சியுடன் கூட்டணிசேர்ந்து போட்டியிட்டதால் புலி எதிர்ப்பு நிலையை எடுக்கவேண்டியதாயிற்று. ராஜிவ் காந்தியின் மரணத்துக்குப் பின்னர் தமிழ்நாட்டில் ஈழத் தமிழருக்காக குரல் எழுப்பி வந்தவர்கள் அடங்கிப்போனார்கள். இன்று, ஜெயலலிதா திடீரென்று ஈழத் தமிழர்களுக்காக குரல் எழுப்புகிறார். காங்கிரசுடன் கூட்டணி சேர்ந்து தேர்தலில் போட்டியிடவேண்டும் என்ற நோக்கம் அவருக்கு இருந்ததால் இதுவரை இலங்கைத் தமிழருக்கு ஆதரவாகப் பேசாமல் மாறாக, எதிர்ப்புக் காட்டிவந்தார்.

இன்று காங்கிரஸ், அவர் அனுப்பிய சமிக்ஞைகளைக் கண்டுகொள்ளாமல் தி. மு. க. வுடன் தன் உறவைத் தொடர்கிறது. காங்கிரஸ் உறவு இல்லை என்று முடிவானபின், இலங்கைத் தமிழர் ஆதரவு பாட்டாளி மக்கள் கட்சியைத் தன் கூட்டணிக்கு இழுப்பதற்காக இன்று தனது நிலையை மாற்றிக்கொண்டுவிட்டார் என்றே கருதப்படுகிறது. பாட்டாளி மக்கள் கட்சித் தலைவர் டாக்டர் ராமதாசும் ஜெயலலிதாவைப் பாராட்டிப் பேசியுள்ளார். விடுதலைப் புலிகளை உக்கிரமாக ஆதரிக்கும் திருமாவளவனை தி. மு. க. தலைமையிலான கூட்டணியிலிருந்து வெளியேற்றவேண்டும் என்று காங்கிரஸ் உரத்துக் குரல் எழுப்பி வருகிறது. ஜெயலலிதா, திருமாவளவன் வருகைக்காக கதவுகளைத் திறந்து வைத்திருக்கிறார். அதற்கு ஒரே தடையாகவிருந்த பிரச்னையும் ஜெயலலிதாவின் ஈழப் பிரச்னை உண்ணாவிரதத்தால் முடிந்துவிட்டது.

தி. மு. க. தலைவர் கருணாநிதிக்கு ஆட்சியில் நீடிக்கவேண்டும்; அதற்காக எதையும் செய்வார். காங்கிரஸ் கட்சியின் ஆதரவு இன்றி முதலமைச்சர் பதவியில் நீடிக்கமுடியாது. எனவே, தமிழினக் காவலர் என்ற பட்டத்தையும் துறக்கத் தயாராகிவிட்டார். மத்திய அரசுக்குக் கடிதம் எழுதி, தன் தமிழின உணர்வைக் காட்டிக்கொண்டார். பொங்கி எழுந்து, தனது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்கள் பதவி விலகுவார்கள் என்று அறிவித்தார். ஆனால், அன்னை சோனியாவின் முகம் தோன்றி - இந்திராவின் மருமகளின் முகம் தோன்றி - அவருடைய கோபத்தைத் தணித்துவிட்டது. தன் குடும்பத்தினரின் பதவிகள் நீடிக்கவேண்டும் என்ற கவலை அவருக்கு.

இதற்குள், தேர்தலும் வந்துவிட்டது. ஈழப் பிரச்னை அமுங்கி, அடங்கிப் போய்விட்டது. கூட்டணிக் கட்சிகளுக்கு தொகுதிகளை ஒதுக்கவேண்டும்; அவர்களைச் சமாளிக்கவேண்டும். மாநில ஆட்சியில் காங்கிரசுக்கு அமைச்சர் பதவிகளை அளிக்காமல் சாமர்த்தியமாகக் காயை நகர்த்தவேண்டும். இப்படி, பல பிரச்னைகள் கருணாநிதிக்கு.

அரசியல் விமர்சகர் ஒருவர் கூறினார்: "தமிழ் நாட்டில் உள்ள இரண்டு பெரிய கட்சிகளான தி. மு. க., அ. இ. அ. தி. மு. க. ஆகியவற்றில் ஏதேனும் ஒன்றாவது ஆதரித்தால்தான் இலங்கைத் தமிழருக்கு தமிழ்நாட்டு மக்களின் ஆதரவு கிட்டும். ஆனால், இந்த இரண்டு கட்சிகளுமே அரசியல் ஆதாயம் ஏதேனும் கிடைத்தாலன்றி, ஈழத் தமிழருக்கான ஆதரவு நிலையை எடுக்கமாட்டா. மக்களிடையே இந்தப் பிரச்னை ஏற்படுத்திய எழுச்சியும் இப்போது அடங்கிவிட்டது. இலங்கையில் தமிழ் மக்கள் அநுபவித்துவரும் இன்னல்களுக்கு விமோசனம் கண்ணில் தென்படவே இல்லை'' என்றார், உண்மைதான். ■

# தென்கிழக்கு ஆசிய சமூகம்

## ஐரோப்பிய ஒன்றியம்போல உருவாகும் 'ஆசியான்' நாடுகள்

சாரங்கன்




தாய். பிரதமர் வேஜஜிவா

'ஆசியான்' எனப்படும் தென்கிழக்காசிய நாடுகளின் அமைப்பு ஐரோப்பிய ஒன்றியத்தைப் போன்றதான ஒரு பொருளாதார சமூகமாக தன்னை அமைத்துக்கொள்ளும் ஆவல்மிகுந்த அதன் திட்டத்தை 2015இல் நிறைவேற்றிக்கொள்ள உறுதிபூண்டுள்ளது. உலகை ஆக்கிரமித்துள்ள நிதி நெருக்கடி, உறுப்பு நாடான மியன்மாரில் அச்சுறுத்தும் மனித உரிமை நடவடிக்கைகள் ஆகிய தடங்கல்களுக்கு மத்தியிலும் இந்த இலக்கை அடைய, தாய்லாந்தில் நடைபெற்ற 14ஆவது உச்சி மாநாட்டில் தென்கிழக்காசிய தலைவர்கள் சபதமிட்டிருக்கிறார்கள்.

புதிய வர்த்தக தடைகள் எதனையும் ஏற்படுத்தாது, அடுத்த ஏழு ஆண்டுகளில் ஒரு தனித்த சந்தையை உருவாக்குவதில் உறுதியுடன் செயல்பட ஆசியான் தலைவர்கள் உடன்பட்டிருப்பதாக மாநாட்டு அறிக்கை தெரிவிக்கிறது.

அபிவிருத்தி அடையும் நாடுகளுக்கு அவசியமான விதத்தில், உலக நிதி முறையில் திடமான, அவசர மாற்றத்துக்கும் இந்த அறிக்கையில் கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

ஆசியான் நாடுகளின் பொருளாதாரம் ஏற்றுமதிகளிலேயே தங்கியுள்ளபோது, இப்பிராந்தியத்தில் அழுத்தத்தை ஏற்படுத்தும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளோடு, மியன்மாரின் ஜனநாயக நடைமுறைகளின் குறைபாடுகளையும் இது எதிர்கொள்ள நேர்கிறது. மியன்மாரின் 'யுன்ரா' இராணுவ ஆட்சி, நோபல் பரிசு பெற்ற அரசியல் தலைவி ஓங் சன் சூ க்யீ உள்ளிட்ட, இரண்டாயிரத்துக்கும் அதிகமான அரசியல் கைதிகளை விடுதலை செய்யும்படியான சர்வதேச கோரிக்கையை உதாசீனம் செய்துவருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தைப் போல சட்டபூர்வமான ஓர் அமைப்பாக ஆசியான் ஒன்றிணைவதற்கான சாசனம் கடந்த டிசம்பரில் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நடைபெற்ற முதலாவது உச்சி மாநாடு இது. சாசனத்தில் மனித உரிமைகள் மிக முக்கியமானதாக வற்புறுத்தப்பட்டபோது, உச்சி மாநாட்டுக்கு முன்னதாக முன்னேற்பாடு செய்யப்பட்டிருந்த பேச்சுக்களில் தமது நாடுகளின் மனித உரிமைவாதிகள் கலந்துகொண்டு பேச மியன்மாரும் கம்போடியாவும் மறுத்தமை மாநாட்டில் ஒரு பின்னடைவை ஏற்படுத்தவே செய்தது.

ஆசியான் தலைவர்கள், மியன்மார் பிரதமர் தெயின் செயினுடன் அடுத்த ஆண்டில் அங்கு நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு அமைவான விதத்தில், நாட்டை வழிப்படுத்தும் நடவடிக்கைகள்பற்றி பகிரங்க ஆலோசனை ஒன்றை மேற்கொண்டதாக தாய்லாந்து பிரதமர் அபிசிற் வேஜஜிவா தெரிவித்தார். மியன்மாரில் இரண்டு தசாப்தங்களுக்குப் பின்னர் இத் தேர்தல் நடைபெற எற்பாடாகிறது.

இதேவேளை, மியன்மாரின் இராணுவ ஆட்சியை மாற்றியமைக்கும் சாத்தியமான திட்டம் எதனையும் எவருமே கொண்டிருக்கவில்லை என்று அமெரிக்கா தெரிவித்திருக்கிறது. பொருளாதார தடையோ அல்லது ஆசியான் அமைப்பின் ஈடுபாடோ எதுவுமே பலனளிக்கவில்லை என்று அமெரிக்கா கூறுகிறது. 'தெளிவான எந்த வழியுமே தென்படவிடல்லை' என்று அமெரிக்காவின் புதிய இராஜாங்க செயலாளர் ஹிலறி கிளின்ரன் கூறியிருக்கிறார்.

தனித்த ஒரு சந்தையை எற்படுத்தும் ஆசியானின் இலக்கு பிரதானமாக, வர்த்தக தடைகளை நீக்குவது தொடர்பானதே. இதுதவிர, பொது நாணயம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பில் அது இன்னமும் சிந்திக்கவில்லை.

ஆசியான் அமைப்பில் பத்து நாடுகள் அங்கம் வகிக்கின்றன. இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகள் 1967 ஆகஸ்ட் 8ஆம் தேதி பாங்கொக்கில் கூடி ஆரம்பித்த பின்னர், புரூணை, கம்போடியா, லாவோஸ், மியன்மார், வியட்நாம் ஆகிய நாடுகள் இதில் இணைந்துகொண்டன. பிலிப்பைன்ஸ், மலேசியா, தாய்லாந்து ஆகிய மூன்று நாடுகள் 1961 இல் அமைத்த 'ஆசா' என்ற அமைப்பு, ஆசியானின் முன்னோடியாகவிருந்தது. ஐந்நூறு மில்லியனுக்கு அதிகமான மக்கள் தொகையைக்கொண்ட ஒரு பிராந்தியத்தை ஆசியான் கொண்டிருக்கிறது. இரண்டு கம்யூனிச நாடுகள், இரண்டு மன்னராட்சி நாடுகள், இராணுவ சர்வாதிகார நாடு ஒன்று ஆகியவற்றோடு, ஜனநாயகத்தில் சிறகடிக்கும் நாடுகளும் இதில் உள்ளடங்குகின்றன.

நியூசிலாந்து, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளுடன் ஆசியான் நாடுகளுக்கான சுதந்திர வர்த்தக உடன்படிக்கை ஒன்றும் உச்சி மாநாட்டில் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ■

# Mortgage 4US Ltd

**Get expert advice in a holistic manner, covering amongst other things, the following key decision areas.**

## Personal & Corporate Advice:

- **Retirement planning** – This would incorporate individual, group and executive pension plans, Stakeholder pension, Employee benefit schemes and Annuity advisory service.
- **Mortgage arrangement service and Financial re-engineering** – Incorporating first and second time buyers, remortgage, debt consolidation and commercial financing.
- **Life assurance and protection planning** – Including all forms of family protection, income and disability protection, estate planning and business protection.
- **Mortgage Conveyance** – Offered through a network of specialist solicitors.
- **Will writing** – Offered via vetted third party agencies.
- **Investment planning** – Including regular and single premium products. Including school fees planning
- **Key event advisory service** – On issues such as redundancy & retirement.

Our objective is to deliver a high quality face to face financial planning service to each of our corporate and individual clients.

- Identify, evaluate and prioritise your specific needs and objectives.
- Create a clear plan of action which enables you to take better control of your financial affairs and reach your objectives.
- Research the entire market place and provide the most suitable product solutions available whilst equally delivering value for money and helping you make and save money. we can act as your trusted financial planning partner and help you to interpret what may affect you and what won't and how to take advantage of opportunities that are available.

## The Essence Of Holistic Financial Planning (HFP)

We focus on the totality of your situation in terms of what will give you the financial security which you want and deserve, whilst equally offering genuine no-nonsense choice and value for money. It is all about looking at all of the tools we could employ to assist you so that you can enjoy peace of mind and financial security as shown in the financial buckets below.




**Mortgage 4US Ltd, 6 Barton Road, London W14 9HD**

Telephone: 02073860924/07775578552

E-mail: karthigesus@unleashadvice.co.uk Fax.: 02076100460

Mortgage 4US ltd ( FSA NO: 478944) is
appointed representative of Unleash Advice Partnership Ltd
which is authorised & regulated by the Financial Services Authority.
FSA No. 473157

Website: http://www.mortgage4usltd.com



மலேசியா

# சுதந்திரத்தில் இன உரிமை

## புதிய பொருளாதார கொள்கையில் பாதிப்புறும் தமிழர்கள்

டி. ஐ. ரவீந்திரன்




ஆசியாவிலேயே பொருளாதாரத்தில் வலுவாக இருக்கும் நாடுகளில் முக்கியமானது மலேசியா. இங்கு மலாய் இனத்தவர், சீனர்கள், இந்தியர்கள் - குறிப்பாக தமிழர்கள் ஆகியோர் வாழ்கின்றனர். மலேசிய குடியரசில் 13 மாகாணங்கள் இருக்கின்றன. இவற்றில், ஒன்பது மாகாணங்களில் மரபு வழிவந்த சுல்தான்கள் அரசுத் தலைவர்களாக இருக்கிறார்கள். இவர்களுக்கு இந்தியாவின் ஆளுநர்களைப் போன்ற நிலையும், அவர்களைவிட அதிகமான அதிகாரங்களும் இருக்கின்றன. மற்றைய நான்கு மாகாணங்களின் அரசுப் பிரதிநிதிகள் நியமனம்செய்யப்படுகின்றனர்.

மலேசியா 1957இல் பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றது. இந்நாடு தென் சீனக் கடலால் இரண்டாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. சுதந்திரம்பெற்று ஆறு ஆண்டுகள் கழித்துத்தான் நிர்வாக ரீதியில் இரண்டும் இணைந்து ஒரே நாடாயின. சர்வதேச கடல்வழிப் பாதையான மலாக்கா நீரிணையைத் தனது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதால் நிரந்தர வருமானத்துக்கு வழியேற்பட்டிருக்கிறது.

இதன் மக்கள் தொகையில் 60 வீதம் மலாய் இனத்தவர்கள். 25 வீதம் சீனர்கள். இந்தியர்கள் 8 வீதமானோர். இவர்களில் சீனர்கள் அசாத்திய உழைப்பாளிகளாக இருந்துவருவதால் அவர்களது முன்னேற்றம் ஏற்றமாகவே இருந்துவருகிறது. ஆனால், மலாய் இன மக்கள் அவர்களுடைய நாடு, அவர்களது உரிமை என்பதால், இயல்பாகவே அரசுசார்ந்த சலுகைகள், ஒதுக்கீடுகள் போன்றவற்றை இயல்பாக வென்றெடுத்தார்கள். ஆனால், சீனர்கள், மற்றும் இந்திய வம்சாவழித் தமிழர்களுக்கு இத்தகைய சலுகைகள் ஏதும் இல்லை. மலாய் இனத்தவர்களுக்கு சலுகைகள் இருந்தும் அதற்கேற்ற முன்னேற்றம் இல்லை என்ற எண்ணம் குறையாகி, பொறாமையாக மாறியது. சீனர்கள் தங்களுக்கும் இட ஒதுக்கீடு, கல்வி மற்றும் தொழில்வாய்ப்புகளில் இடம் கோரினார்கள். இந்த நிலை மோசமடைய, 1969இல் பெரும் இனக்



கலவரமாக அது வெடித்தது. பல உயிர்கள் அநியாயமாகப் பலியாயின. ஆனாலும், சீனர்களுக்கு விடிவுகாலம் பிறந்தது. வேலைவாய்ப்பு, கல்வி போன்றவற்றில் 30 வீத இட ஒதுக்கீடு அமுல்படுத்தப்பட்டது. அதேசமயம், எட்டு வீத தமிழர்களுக்கு நான்கு வீத இட ஒதுக்கீடு என்று முடிவுசெய்யப்பட்டது.

தமிழர்கள் கதையே தனிக்கதை. 19ஆம் நூற்றாண்டில் பிரிட்டிஷார் மலேசியாவைத் தங்களது கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். அந்தக் காலத்தில் அது கருவேலமரக் காடுகள் நிறைந்த பகுதியாக இருந்தது. அவற்றை அழித்து, அந்த இடத்தில் தேயிலைத் தோட்டங்களை உருவாக்க பிரிட்டிஷார் முடிவுசெய்தனர். குறைந்த கூலியில் மிகுந்த உழைப்புக்கு இந்தியா அவர்களுக்கு வாய்ப்பானது. தமிழ்நாட்டிலிருந்து பல் லாயிரக்கணக்கானவர்களை அழைத்து அதாவது, 'ஆள்பிடித்து'ச் சென்றனர். நூற்றைம்பது ஆண்டுகளாக பெரும்பாலான தமிழர்கள் மலேசியாவில் உள்ள தேயிலை, இரப்பர் தோட்டங்களில் கூலிகளாக பணிபுரிகின்றனர். இப்போது, ரப்பர், தேயிலைத் தோட்டங்கள் பல மூடப்பட்டும் அரசுடைமையாக்கப்பட்டும் வருவது வேறு விடயம்.

பிரிட்டிஷார் மலேசியாவை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் விட்டுச்சென்றனர். ஆரம்பத்திலிருந்தே இஸ்லாம் மட்டும்தான் அரசு மதம் என்றும், மலாய் மொழி அதிகாரபூர்வ அரசு மொழி என்றும் முடிவுசெய்யப்பட்டது. இதன்பின்னர், மேற்குறிப்பிட்ட சீனர்களின் கலவரத்துக்குப் பின்னர்தான் பிற இனத்தவர்களுக்கும் இட ஒதுக்கீடுபோன்ற சலுகைகள் தேவை என்பது முடிவானது. தமிழர்களில் மிகப் பெரும்பான்மையோர் இந்துக்கள். இவர்கள் தொழிலாளர்களாக, கூலிகளாகவே வாழ்க்கை நடத்திக்கொண்டிருந்தனர். மற்றைய துறைகளில் இவர்களால் பெரிதாக எதுவும் செய்ய இயலவில்லை.

ஆனால், தமிழர்களில் வளமானவர்கள் இல்லவே இல்லை என்றும் கூறிவிட முடியாது. குறிப்பிட்ட எண்ணிக்கையில் படித்தவர்கள், வசதிபெற்றவர்கள் இருக்கவே செய்கிறார்கள். மூன்று தமிழ்த் தினசரிகள், ஆறு வார இதழ்கள், ஏழு மாத இதழ்கள் வெளிவருகின்றன. நாடு முழுவதும் முப்பது திரையரங்குகள் தமிழ்த் திரைப்படங்களை மட்டுமே திரையிடுகின்றன. தமிழர்கள் அரசு பதவிகளிலும், மத்திய அரசின் அமைச்சர் பதவிகளிலும் இருக்கிறார்கள். ஆனாலும், பெரும்பாலான தமிழர்களின் வாழ்க்கைத்தரம் உயரவே இல்லை. இவர்கள் தேயிலை, இரப்பர் தோட்டங்களில்தான் பரம்பரை பரம்பரையாக முடங்கிக்கிடக்கிறார்கள்.

இந்த நிலைக்கு முக்கிய காரணம், 1970களில் மலேசிய அரசு அமுல்படுத்திய புதிய பொருளாதாரக் கொள்கைதான். இதன்மூலம், முஸ்லிகளுக்கும் மலாய் இனத்தவர்களுக்கும் அதீதமான சலுகைகள் வழங்கப்பட்டன. அதே வேளை, இந்துக்கள் அதாவது, தமிழர்கள் தனித்து தொழில் தொடங்க அநுமதி இல்லை. அப்படித் தொழில் தொடங்க வேண்டுமானால் மலாய்க்காரர் அல்லது முஸ்லிம் ஒருவரைச் சேர்த்துக்கொண்டால்தான் அநுமதி கிடைக்கும். அரசாங்க மானியம் மற்றும் உதவிகள் போன்றன முஸ்லிம்களும் மலாய் இனத்தவரும் நடாத்தும் கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே உண்டு. இதனாலேயே தமிழர்களால் பெரும் தொழில்களைப் புரிய முடியவில்லை.

இந்த விடயங்கள் தமிழர்களை வெகு காலமாக அமைதியிழக்கச்செய்கின்றன. 1969இல் சீனர்கள் ஒன்றுதிரண்டபோது ஏற்பட்ட அமைதியின்மை மற்றும் கலவரங்களில் அரசு ஒருதலைப்பட்சமாக மலாய்களுக்கும் முஸ்லிம்களுக்கும் பக்கபலமாய் நின்றது. ஆனாலும், இருபக்கத்திலும் உயிர்ப் பலிகளை நிறுத்தமுடிய

வில்லை. அதன்பின்னர், கலவரச் சூழ்நிலை உருவாவதைத் தடுத்து நிறுத்த பல சட்டரீதியான நடவடிக்கைகளை அரசு எடுத்தது. ஐந்துபேருக்குமேல் ஒன்றுகூடுவதானாலும் அரசின் அநுமதி தேவை என்பதுபோன்ற பல கட்டுப்பாடுகளை அரசு கொண்டுவந்தது.

இவற்றையெல்லாம் மீறி, 2007 நவம்பர் 27 ஆம் தேதி தமிழர்களின் கூட்டு இயக்கமான 'ஹிண்ட்ராப்' (HINDRAF - Hindu Rights Action Force - இந்து உரிமைகள் போராட்டக் குழு) 20 ஆயிரம்பேரை ஊர்வலத்தில் திரட்டியது. அதுவும், இந்த ஊர்வலம் மலேசிய அரசை நேரடியாக எதிர்த்து அல்ல. பிரிட்டிஷ்காரர்களை எதிர்த்தே திரண்டது. ஹிண்ட்ராபின் கோரிக்கைகள் பிரிட்டிஷ் மகாராணிக்கு அனுப்பப்பட்டன. இவற்றை பிரிட்டிஷ் தூதரகத்தில் மனுவாக கொடுப்பதற்குத் திரட்டப்பட்ட கூட்டம்தான் அது. நூற்றைம்பது ஆண்டுகளாக தமிழர்கள் முன்னேறாமல் இருக்கிறார்கள். பல்லாயிரக்கணக்கில் தமிழர்களை ஆசைகாட்டி அழைத்துவந்தது பிரிட்டிஷ் அரசுதான். அவர்கள் நாட்டைவிட்டுச் சென்றபோது, முஸ்லிம்களின் கருணையில் தமிழர்களை இருக்க வைத்துச் சென்றார்கள். முஸ்லிம், மலாய் மக்கள் தமிழர்களை முன்னேறவிடவில்லை. பல தலைமுறைகளாக தமிழர்கள் பெரும்பாலும் கூலிகளாகவே இருப்பதற்கு, நாடு சுதந்திரம்பெற்றபோது அவர்கள் இவ்வாறு ஏமாற்றப்பட்டதே காரணம். இதற்கு நஷ்டஈடாக தமிழர் ஒவ்வொருவருக்கும் தலா ஒரு லட்சம் விதம் 14 லட்சம் கோடி வழங்கப்படவேண்டும்; இதுதான் பிரிட்டிஷ் அரசிடம் தமிழர்கள் முன்வைத்த கோரிக்கை. இந்தக் கோரிக்கையை முன்வைத்து லண்டன் நீதிமன்றில் வழக்கும் தொடர்ந்தனர். இந்த வழக்கின் செலவுகளையும் ஹிண்ட்ராபினால் செலுத்தமுடியாது என்றும், பிரிட்டிஷ் மகாராணியே தங்களுக்கு ஆதரவளித்து, பிரிட்டிஷ் காலனித்துவ அரசு செய்த அநீதிக்கு நியாயம் கிடைக்க உதவவேண்டும் என்றும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

மலேசிய அரசு இதனை ஏற்றுக் கொள்ளாது, கூட்டத்துக்குத் தடைவிதித்தது. இதனை மீறி ஹிண்ட்ராப் வெற்றிகரமாக கூட்டத்தைக் கூட்டியது. ஐயாயிரம் சிறப்புக் காவல் படையினர் கண்ணீர்ப் புகைக்குண்டுகளையும், அதிவேக நீர்பாய்ச்சிக் கருவிகளையும் பயன்படுத்தி கூட்டத்தைக் கலைக்க முயன்றனர். இதில் நூற்றுக்கணக்கான தமிழர்கள் காயமுற்றனர்.

சரி, ஹிண்ட்ராப்பினால் இவ்வளவு பெரிய கூட்டத்தை எப்படிக் கூட்டமுடிந்தது? சமீபகாலமாக ஹிண்ட்ராப் பல கோரிக்கைகளை முன்வைத்து மலேசிய அரசுக்கு எதிராக குரல் கொடுத்து வந்திருக்கிறது. இது, தமிழ் மக்களை மிகவும் கவர்ந்திருந்தது. உதாரணமாக, தமிழர்களுக்கு 20 வீத அரசு உயர் பதவிகள் இட ஒதுக்கீடு செய்வது; பொதுத்துறை மற்றும் தனியார் துறைகளில் அரசின் ஆசியுடன் இருக்கும் இன, மத ரீதியான பாரபட்சம் களையப்பட ஆணைக்குழு ஒன்றை அமைத்து ஆராய்வது; பாராளுமன்றத்தில் 20 ஆசனங்கள் இந்தியர்களுக்கு என்று நிரந்தர ஒதுக்கீடு செய்வது; தமிழர்கள் தொழில் தொடங்க, அதுவும் தனியாகத் தொழில் தொடங்க அரசு அநுமதிப்பது போன்றவை அவை. ஆயினும், ஹிண்ட்ராப் தமிழர்களைத் திரட்டியது இதுபோன்ற நடைமுறைக் கோரிக்கைகளை வைத்து அல்ல; மாறாக, உணர்வுபூர்வமாகவே அவர்களைத் திரட்ட முடிந்தது.

இஸ்லாமிய அரசான மலேசிய அரசுக்கு உருவ வழிபாட்டில் நம்பிக்கை இல்லை. ஆனால், மலேசியத் தமிழர்கள் தங்களது பிரச்னைகள், கஷ்டங்கள், அதிருப்திகள் ஆகியவற்றுடன் வாழ்க்கை நடாத்தவேண்டியிருந்ததால், பக்தி என்பது மிக முக்கியமான அம்சமாக வாழ்வில் இருந்துவந்தது. இதனாலேயே, பல்லாயிரக்கணக்கான சிறியதும் பெரியதுமான கோவில்கள் அவர்கள் வேலைசெய்துவந்த இரப்பர், தேயிலைத் தோட்டங்களிலும், தமிழர் வசிக்கும் பகுதிகளிலும் நிறைந்திருந்தன. இக் கோவில்கள் அரசின் கட்டுப்பாட்டில் வர, அவை பத்துக்கு ஒன்று என்ற வீதத்தில் அநுமதிக்கப்பட்டு, மீதியிருந்த கோவில்கள் அழிக்கப்பட்டதாக தகவல்கள். இவ்வாறு அழிக்கப்பட்ட கோவில்களின் எண்ணிக்கை ஏழாயிரம் என்று ஹிண்ட்ராப் கூறுகிறது. இதை வைத்துத்தான் இந்த இயக்கம் தமிழர்களைத் திரட்டியது. இதுதவிர, தமிழர்களின் குழந்தைகள் படிக்கும் பள்ளிகள் நாட்டில் 523 இருக்கின்றன. இவை எவற்றுக்குமே அரசு உதவி ஏதுமில்லை. இதனை முன்னிறுத்தியும் தமிழர்களின் உணர்வை ஹிண்ட்ராப் தட்டியெழுப்பியது; இதற்குப் பலனும் இருந்தது.



**பெரும்பாலான தமிழர்களின் வாழ்க்கைத்தரம் உயரவே இல்லை. இவர்கள் தேயிலை, இரப்பர் தோட்டங்களில்தான் பரம்பரை பரம்பரையாக முடங்கிக்கிடக்கிறார்கள்**

ஒரு நாட்டில் அந்நாட்டு மக்களில் கணிசமான பிரிவினர் ஒரு விடயத்தை ஆதரித்தால், அவர்களோடு சேர்வதற்கு அந்நாட்டு எதிர்க்கட்சிகளுக்கு எவரும் சொல்லிக்கொடுக்க வேண்டியதில்லை. மலேசியாவிலும் இதுவே நிகழ்ந்தது.

ஹிண்ட்ராப் தலைவர்களை, விரைவில் வெளியில் வரவியலாத உள்நாட்டு பாதுகாப்புச் சட்டத்தின்கீழ் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று, தானே கையொப்பமிட்ட உத்தரவின் மூலம், பிரதமர் அப்துல்லா அஹமட் பதாவி சிறையில் தள்ளினார்.


இவையனைத்தும் மக்களின் அதிருப்தியைச் சம்பாதித்தபோது, 2008 மார்ச் 8 ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது. ஆளும் கட்சி ஒருவாறு 140 ஆசனங்களுடன் பெரும்பான்மையைப் பெற்றது. எதிர்க்கட்சிக்கு 82 ஆசனங்களும், ஐந்து மாநிலங்களில் ஆட்சி அமைக்குமளவு வெற்றிகளும் கிட்டின. ஆளும் கட்சிக்கு ஆதரவாக இயங்கிவந்த மலேசிய இந்திய காங்கிரஸ் ஒன்பது இடங்களில் போட்டியிட்டு, மூன்று இடங்களில் மட்டுமே வென்றது.

ஆனால், சிறையிலிடப்பட்ட ஹிண்ட்ராப் தலைவர்கள் இன்னமும் விடுதலை செய்யப்படவில்லை. ஹிண்ட்ராப் சட்ட விரோத அமைப்பொன்றாக அரசாங்கத்தால் பிரகடனப்படுத்தப்பட்டிருக்கிறது. தடுத்துவைக்கப்பட்டிருப்பவர்களை விடுதலைசெய்யக்கோரி பிரதமர் அலுவலகத்துக்கு மனு கையளிக்கச் சென்றவர்கள் கைதுசெய்யப்பட்ட சம்பவமும் நிகழ்ந்திருக்கிறது. ■

# RETHAM TRAVEL & TOURS

9061 ATOL PROTECTED

**Here we come to Rayners Lane, to provide with one stop Service.**




- Flights to all destinations with all airlines
- Package tours to (Soutth & North) India and Fareast
  All assistance will be provided on arrival to fulifill
  All spritual rituals at important temples with the above package
- Groups to Tirupathy, Shridi Baba & Puttaparthi all round the year
- India visa arrangements
- Instant Travellers cheque & Foreign currency
- Senior citizens welcome, your travel arrangements will be made to your specific needs.
- Ayurvedic treatment can be arranged with excellent seaside accommodation in Kottakal, Kerala

SriLankan Emirates KUWAIT AIRWAYS QATAR AIRWAYS JET AIRWAYS

Maestro VISA MasterCard DELTA DELTA

458 Alexandra Avenue, Harrow, Middlesex, HA2 9TL

Tel. 020 8868 3646 Tel. 0208 090 4277
Mob. 079 7664 9249 rethamtravel@yahoo.co.uk



ஸ்லம்டொக் மில்லியனர்

# இந்தியாவின் வறுமையும் பெருமையும்

**சொல்லப்படுவது யதார்த்தம்தானா என்பதில் சந்தேகம் இருக்கிறது. படைப்பாளியின் தேவைக்கு ஏற்ப உருக்கொள்ளும் யதார்த்தம் அது**

அரவிந்தன்

'ஸ்லம்டொக் மில்லியனர்' பற்றிப் பக்கம் பக்கமாக எழுதப்பட்டுவிட்டது. 'ஸ்லம்டொக்' என்னும் அந்தத் தலைப்பில் தொடங்கி, அது பெற்ற விருதுகள்வரை பலவிதங்களிலும் அது சர்ச்சைக்குள்ளாகிவருகிறது. முதலில் 'கோல்டன் குளோப்', பின்னர் 'பஃப்ரா', அதன்பின்னர் பொது நீரோட்டப் படங்களின் கனவுக் கிரீடமான 'ஒஸ்கார்'. இப்படி, எல்லா விருதுகளையும் அள்ளிய இந்தப் படம் 'ஒரு சுமாரான படம்' என்பதைச் சொல்வதற்கு ஒருவர் தேர்ந்தெடுக்கப்பட்ட திரைப்பட விமர்சகராக இருக்கவேண்டும் என்பதில்லை. இந்தியாவில் பாலிவூட், டொலிவூட், கொலிவூட் என்றெல்லாம் ஹாலிவூட்டைப் பார்த்து பச்சை குத்திக்கொண்ட திரைப்படப் பிரிவுகள், ஆண்டுதோறும் ஸ்லம்டொக் போன்ற படங்கள் பலவற்றை பல தர நிலைகளில் உருவாக்கித் தள்ளுகின்றன.

உதிரிகளும் பலவீனர்களும் ஏற்றம் பெறுவது சார்ந்த காதல் கற்பனைகள் இந்தியத் திரைக்குப் புதிதல்ல. 'லகான்', 'சக் தே இந்தியா' போன்ற பல படங்களை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். சமீபத்தில் வெளியான 'வெண்ணிலா கபடிக்குழு' இத்தகைய படத்துக்கான சிறந்த உதாரணம். ஏழைக் கதாநாயகன் விண்ணைத்தொடும் அளவுக்கு உயரும் மசாலாப் படங்களையும் சற்றே தாராளப் போக்குடன் இந்தப் பட்டியலில் சேர்த்துவிடலாம்.


இத்தகைய படங்களில் ஸ்லம்டொக் பெறக்கூடிய இடம் என்ன? கறாரான விமர்சன அளவுகோல்களின்படி பார்த்தால், இதற்கு முதலிடம் தரமுடியாது என்பதே நிதர்சனம். திரைக்கதைத் தர்க்கத்திலும், காட்சி அமைப்பிலும் லகான், சக் தே இந்தியா, வெண்ணிலா ஆகிய படங்கள் ஸ்லம்டொக்கைவிட சிறந்தவை. தவிர, சக் தே இந்தியாவும் வெண்ணிலாவும் ஸ்லம்டொக்கைவிடவும் யதார்த்தத்துடன் அர்த்தபூர்வமாக உறவு கொண்டுள்ளன. இந்தப் படங்களும் நாடகத் தன்மை கொண்டிருந்தாலும், அந்த நாடகத் தன்மையின் சாரத்தில் பொய்மையோ, சில்லறைத்தனமோ இல்லை.

ஸ்லம்டொக் இந்திய சேரிகளின் யதார்த்தத்தை முகத்தில் அறைந்தது போலச் சொல்கிறது என்று சொல்லப்படுகிறது. முகத்தில் அறைவது என்னவோ உண்மைதான். ஆனால், சொல்லப்படுவது யதார்த்தம்தானா என்பதில் சந்தேகம் இருக்கிறது. இந்தியச் சேரிகள், குறிப்பாக மும்பையின் தாராவிப் பகுதி மிகவும் மோசமான வாழ்நிலையைக் கொண்டிருக்கிறது என்பதில் எந்தச் சந்தேகமும் இல்லை. ஒரு வெள்ளைக்காரர் இதைக் காட்டியதற்காக நாம் கூடுதலாக வருத்தப்படவேண்டிய அவசியமும் இல்லை. இவரைவிடவும் வலுவாக இந்திய வறுமையை சத்யஜித் ரேயின் படங்களும், ஒருசில வெகுஜன திரைப்படங்களும்

சித்தரித்துள்ளன. யதார்த்தத்தை யார் சொல்கிறார்கள், ஏன் சொல்கிறார்கள் என்பது முக்கியம்தானெனினும், அதை யெல்லாம்மீறி அந்த யதார்த்தத்துக்கு முகம்கொடுக்கவேண்டியது அவசியம்.

ஆனால், இயக்குநர் டனி பொயில் காட்டும் யதார்த்தம், பொழுதுபோக்குத் திரைப்பட ரசிகர்களின் நுகர்வுக்கேற்ப திறமையாக வடிவமைக்கப்பட்ட யதார்த்தம். குறிப்பாக, இந்திய யதார்த்தம் குறித்த மேற்கத்தைய மனங்களின் முன் தீர்மானங்களுக்கு ஏற்ப வடிவமைக்கப்பட்ட கச்சிதமான சித்திரம். படைப்பாளியின் தேவைக்கு ஏற்ப உருக்கொள்ளும் யதார்த்தம் அது. உதாரணமாக, அமிதாப் பச்சனைப் பார்ப்பதற்காக மலக்குழிக்குள் இறங்கி ஓடும் சிறுவனின் சித்திரம். இத்தகைய கழிவறைகள் (?) இருப்பது குறித்து ஒவ்வோர் இந்தியரும் வெட்கப்படவேண்டும் என்பது ஒருபுறமிருக்க, அந்தச் சிறுவன் ஓடும் காட்சியைச் சற்றே ஆராய்ந்து பார்த்தால், அது யதார்த்தத்தின்மீது கட்டப்பட்ட புனைவு என்பது புரியும். ஒரு சிறுவன் கழிவறையின் குழியில் இறங்கி, பூமிக்கு அடியில் ஓடும் மல நீரோட்டத்தினூடே நீந்தியோ நடந்தோ சென்று, தான் போக வேண்டிய இடத்துக்கு அருகில் உள்ள இன்னொரு மலக்குழியின் வழியே வெளியில் வருகிறான். இது, கிட்டத்தட்ட அமிதாப், ரஜினி, விஜய் போன்ற அசாத்தியமான நாயகர்களுக்கு மட்டுமே சாத்தியப்படும் சாகசம். இந்தச் செயலின் நடைமுறைச் சாத்தியம் பற்றிய கேள்விகளை எழவிடாமல் செய்வது அந்தக் காட்சியின் அதிர்ச்சியூட்டும் தன்மை.

இதுபோலவே பல காட்சிகள். வறுமையில் வாடும் சிறுவர்கள் பிச்சைக்காரர்களாக்கப்படும் குரூரமான நடைமுறைபற்றிய சித்தரிப்பு நன்றாகவிருக்கிறது. இந்தியா போன்ற நாடுகளில் பிச்சைக்காரர்களை உருவாக்கி, அவர்களை வைத்துப் பிழைக்கும் ஈனத் தொழில் பல விதங்களில் நடப்பதால் ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு விதமான யதார்த்தம் நிலவுகிறது. இந்நிலையில், திரையில் காட்சிப்படுத்தப்படும் யதார்த்தம் நாம் கண்ட யதார்த்தம்போல இருக்கிறதா என்று பார்க்காது, அதற்கான நம்பகத் தன்மையுடன் முன்வைக்கப்பட்டிருக்கிறதா என்பதை மட்டும்தான் நாம் பார்க்கமுடியும். அந்தவகையில், இது யதார்த்தமான சித்தரிப்பு என்று சொல்வதில் தவறில்லை. ஆனால், அடுத்தடுத்த கட்டங்களில் அந்தச் சித்தரிப்பு வகைமாதிரித் தன்மைக்குள் புகுந்து, வெகுஜனத் திரைப் படங்களுக்கே உரிய 'சுவாரஸ்யத்துடன்' மனதைத் தொட முயல்கிறது. முக்கிய பாத்திரங்களாக வரும் சிறுவர்கள் தப்பிச் செல்லும் காட்சி இதற்கு உதாரணம். அந்தப் பெண் ஒரு விபச்சார விடுதியில் காணப்படுவதும் இத்தகையதே. நாயகன் 'கோடீஸ்வரன்' நிகழ்ச்சியைப்பற்றி அறிந்துகொள்வதும், அதில் கலந்து கொள்வதும்கூட இந்தப் பட்டியலில் கட்டாயம் இடம்பெற்றாகவேண்டிய, வெகுஜன ரசனைக்குரிய நாடகங்கள் தாம். போட்டியில் தொலைபேசி மூலம் நண்பரை அழைத்து உதவிகோரும் கட்டத்தில், அந்தத் தொலைபேசியை நாயகனின் காதலி எடுப்பதற்கான முஸ்தீபுகளின் நாடகத் தன்மைகளும், அந்தப் பெண்ணின் கை அந்தத் தொலைபேசியைப் பற்றும் தருணத்தின் பரவசமும் வெகுஜனத் திரைப்படங்களின் அச்சு அசலான உத்தி.



**நாளை, இன்னோர் ஆங்கிலேய அல்லது அமெரிக்க இயக்குநர் இந்தியாவுக்கு வந்து ஷாருக் கான், அமீர் கான், ஐஸ்வர்யா ராய், கத்ரீனா கைப், ரஜினி காந்த் ஆகிய எவரையேனும் வைத்து ஆங்கிலப் படம் எடுத்தால் அதற்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அமோக ஆதரவு கிடைக்கும். அதற்கான களத்தை ஸ்லம்டொக்குக் கிடைத்த மிகப்பெரிய கவனமும் வெற்றியும் ஏற்படுத்தியிருக்கின்றன**

சுவாரஷ்யமான இந்த நாடகங்களில் மறைந்துபோகும் யதார்த்தம் ஒருபுறமிருக்க, நாடகத் தன்மை குறைவான இடங்களிலும் யதார்த்தம் அடிவாங்குகிறது. பார்வை இழந்த சிறுவன் அமெரிக்க பணநோட்டில் அச்சிடப்பட்டுள்ள பெஞ்சமின் பிராங்ளினைப்பற்றி எப்படித் தெரிந்துகொண்டான் என்பதைப் படம் தெளிவுபடுத்தவில்லை. அந்தக் காட்சியின் உணர்வுபூர்வமான சித்தரிப்பு, இந்தக் கேள்வியை விலக்கிவிடக் கூடிய தன்மை படைத்தது. மலக்குழியில் யதார்த்தத்தைப் பற்றிய கேள்வியை எழவிடாமல் செய்வது அதன் அதிர்ச்சியூட்டும் தன்மை என்றால், இங்கு அதற்குப் பயன்படுத்தப்படுவது கழிவிரக்கம்.

கோடீஸ்வரனாவதற்கான வினா-விடைப் போட்டியில் நாயகன் எதிர்கொள்ளும் கேள்விக்கான விடைகள், அவன் வாழ்பநுபவங்களிலிருந்தே கிடைப்பதாகக் காட்டியிருப்பது ஒரு புனைவு உத்தி என்னும்வகையில் சிறப்பானதுதான். ஆனால், கேள்விகள் பெரும்பாலும் அவன் வாழ்வின் கால ஓட்டத்துக்கு ஏற்ப - பின்னோட்டத்தில் அவன் கதையைச் சொல்வதற்கு வசதியாக - வந்து விழும் அதிசயத்தை என்னவென்று சொல்வது!

இந்தப் படம் இந்தியாவின் வறுமையைக் கடைச் சரக்காக பயன்படுத்திக் கொண்டிருக்கிறது என்னும் விமர்சனம் தன்னளவில் வலுவானதல்ல. சித்தரிப்பின் நோக்கம் சார்ந்து அதன் மதிப்பு உருவாவதைப்போலவே, அது சார்ந்த விமர்சனமும் அதன் நோக்கம் சார்ந்தே மதிக்கப்படவேண்டும். இந்தியாவின் அவலங்



**இந்திய சேரிகளின் யதார்த்தத்தை முகத்தில் அறைந்ததுபோலச் சொல்கிறது என்று சொல்லப்படுகிறது. முகத்தில் அறைவது என்னவோ உண்மைதான். ஆனால்...**

களை ஆவணப்படுத்திய 'மதர் இந்தியா' நூலை எழுதிய டாக்டர் மேயோவை காந்தியடிகள் சாக்கடை மேஸ்திரி என்று சொன்னார். அவரது கண்ணோட்டம் இந்திய யதார்த்தத்துக்கு முகம்கொடுக்காத மேட்டுக்குடி மனப்பான்மையின் போலிப் பெருமிதத்திலிருந்து உருவானதல்ல. இந்திய கிராமங்களிலும் சேரிகளிலும் முறையான கழிவறைகள் இருக்கவேண்டியதன் அவசியம் உள்ளிட்ட, பல சீர்திருத்தங்கள் பற்றி முதலில் பேசியவர் காந்தி. அவற்றை நடைமுறைப்படுத்த செயல்திட்டம் வகுத்தும் அவர் செயல்பட்டார். கழிவறைகள் அமைப்பது மற்றும் அவற்றைப் பராமரிப்பது குறித்து கிராமத்து மக்களுக்கு பயிற்சி அளித்தவர் அவர். மேயோவின் நூல்மீதான அவரது கோபம் நிஜமான அக்கறையிலிருந்தும், விமர்சனம் செய்பவரின் நோக்கம் குறித்த கூர்மையான மதிப்பீட்டிலிருந்தும் உருவானது. டனி பொயில் காட்டும் அவலம் கண்டு, 'மானம் போகிறது' என்று கொதிப்பவர்களில் பலர், தங்கள் கண்ணெதிரில் வாழும் அவலங்கள் குறித்த சலனம் எதுவுமின்றி, அன்றாடம் அவற்றைக் கடந்து செல்லும் போலிகள். அரசியல்வாதிகளைத் திட்டுவதோடு அவர்களது சமூகப் பொறுப்புணர்வு முடிந்துபோகிறது.

பொருள்படுத்தத் தகுதியற்ற போலி ரோஷங்கள் ஒருபுறமிருக்க, டனி பொயிலின் நோக்கம் குறித்து அவரது சித்தரிப்பின் தன்மை சார்ந்து பேசுவதற்குச் சில விஷயங்கள் இருக்கின்றன. சமூகத்தின் கடைநிலையிலிருந்து உயரத்துக்கு வரும் கதை என்பதால் கடைநிலை வாழ்வின் யதார்த்தங்களை அவர் காட்டவேண்டியிருக்கிறது என்பதை ஏற்றுக்கொள்ளலாம். அதேவேளை, எந்த மும்பையில் இந்த சேரி அமைந்திருக்கிறதோ அதே மும்பையில் இந்தியாவின் பொருளாதார, உள்கட்டமைப்பு வளர்ச்சி சார்ந்த தடயங்களும் காணக்கிடைக்கின்றன. இவை, டனி பொயிலின் கண்களில் படவில்லை. மும்பைச் சேரிப் பகுதியின் அழுக்கை அடிக்கோடிட்டுக் காட்டுவதற்காகவாவது மும்பையின் அழகிய முகத்தையும் அவர் காட்டியிருக்கலாம். எல்லாமே சேர்ந்ததுதான் மும்பை. இயக்குநர் பிரியதர்ஷன் ஒரு பேட்டியில் சொன்னதுபோல, மும்பையின் அழகைக் காட்டும் ஒரு 'ஷொட்'டைக்கூட படத்தில் பார்க்க முடியவில்லை. சேரியிலேயே மையம்கொண்டு, அங்கேயே இயங்கும் படமாக இருந்தாலும் இதை ஏற்றுக்கொள்ளலாம். ஆனால், பல காரணங்களுக்காகப் பல இடங்களுக்குப் பயணிக்கும் திரைக்கதையில் மும்பையின் சாதகமான எந்த அம்சத்துக்கும் அநேகமாக இடமில்லை. 'நான் கடவுள்' படத்தில் பிச்சைக்காரர்களை வைத்துப் பிழைப்பு நடாத்தும் ஈன வியாபாரிகளையும், அவர்களிடம் அடிவாங்கி நாளும் செத்துக்கொண்டிருக்கும் பிச்சைக்காரர்களையும் காட்டும் கமெரா, அங்கிருந்து வெளியே வரும்போது, நிலவொளியில் மின்னும் மலையடிவாரத்து சிற்றோடையின் அழகை இயல்பாகப் பதிவுசெய்கிறது. அதுபோன்ற ஒரு காட்சியைக்கூட ஸ்லம்டொக் படத்தில் காணமுடியவில்லை என்பது தற்செயலான விஷயமாக இருக்கமுடியாது. படத்தை உருவாக்கியவர்கள் எத்தகைய யதார்த்தத்தை, யாருக்கான நுகர்பொருளாக சித்தரிக்க விரும்புகிறார்கள் என்பது குறித்த கேள்விகள் எழுவதையும் தடுக்கமுடியாது. இந்தியா பற்றிய ஒற்றைப் பரிமாண புரிதலைப் போற்றிப் பாதுகாக்கும் மேற்கத்தைய மனங்களைத் திருப்திப்படுத்தும் வகைமாதிரிச் சித்தரிப்பு இது என்று சொல்வது தவறானதாகாது.

வெகுஜனத் திரைப்படங்களின் வெற்றிச் சூத்திரத்தின் எல்லைக்குள் திணிக்கப்படும் யதார்த்தம், தர்க்கத்தைவிட சுவாரஷ்யத்துக்கும் நாடக தன்மைக்கும் முக்கியத்துவம் கொடுக்கும் திரைக்கதை, மனித வாழ்வின் அகம் சார்ந்த அவதானிப்பைக் காட்டிலும் புறத்தோற்றம் சார்ந்த எளிமைப்படுத்தப்பட்ட சித்தரிப்பில் கவனம் செலுத்தும் மேம்போக்கான படைப்பு மனம் ஆகிய தன்மைகள் கொண்ட படம்தான் ஸ்லம்டொக். சுவையான திரைக்கதை, பொருத்தமான பின்னணி இசை, நேர்த்தியான ஒளிப்பதிவு, யதார்த்தத்தின் ஒரு முகத்தை அப்பட்டமாகக் காட்டும் முயற்சி, நம்பகமான நடிப்பு ஆகிய சாதகமான அம்சங்கள் இருந்தும் மேற்சொன்ன குறைகளால் இது ஒரு சராசரி பொது நீரோட்டப் படமாகவே தேங்கிவிடுகிறது.

இத்தகைய ஒரு படம் இத்தனை விருதுகளைப் பெற்றது எப்படி? என்ற கேள்வி எழுகிறது. இச்சமயத்தில், 'தாரே ஜமீன் பர்', 'ஜோதா அக்பர்' போன்ற படங்களோடு ஒப்பிட்டு, இந்தப் படங்களுக்கு விருது கொடுத்திருக்கலாமே என்றும் குரல்கள் எழுவதைக் கேட்கமுடிகிறது. இந்தப் படம் ஆங்கிலத்தில் எடுக்கப்பட்டது என்பதை மறந்துவிடலாகாது. தாரே ஜமீன் பர் போன்ற ஹிந்திப் படங்கள் வெளிமொழிப் படங்கள் என்னும் பிரிவில்தான் போட்டிக்குச் செல்லமுடியும். அந்தப் படங்களுக்கும் வேறு பிரிவின்கீழ் வரும் ஸ்லாம்டொக்குக்கும் போட்டி இல்லை என்பதால் இத்தகைய ஒப்பீடுகள் அர்த்தமற்றவை. ஆனால், ஸ்லம்டொக்கின் பிரிவில் இடம்பெற்ற *The Curious Case of Benjamin Button*, *The Reader* முதலான படங்களைப் பார்க்கையில் இந்தத் தேர்வு நியாயப்படுத்தக்கூடியதாக இல்லை என்றே பல விமர்சகர்கள் கருதுகிறார்கள்.


அப்படியானால், இந்தப் படத்துக்கு விருதுகள் எப்படிக் கிடைத்தன? இந்தப் படத்தின் தரத்தை வைத்துப் பார்க்கையில் விருதுக்குப் பின்னால் செயல்பட்டிருக்கக்கூடிய மனோபாவங்கள் குறித்த சில சந்தேகங்கள் தவிர்க்க இயலாதவை.

சமீப காலமாக இந்தியப் படங்களுக்கு சர்வதேச மதிப்பு கூடியிருக்கிறது. கடந்த ஆண்டு வெற்றிபெற்ற 'சிங் இஸ் கிங்', 'கஜினி' போன்ற படங்களின் வசூலில் கணிசமான பகுதி வெளிநாட்டுச் சந்தையிலிருந்து கிடைத்தது. அதிலும் கஜினி, திட்டமிட்டு உருவாக்கப்பட்ட கவனத்தினாலும், திறமையான சந்தைப்படுத்தலாலும், வெளியான இரண்டே வாரங்களுள் 200 கோடி ரூபாய் வசூல் செய்தது.

அதன் பட்ஜெட் சுமார் 60 கோடி. இப்போதெல்லாம் இந்திய மொழிகளில் வெளியாகும் பெரிய நட்சத்திரங்களின் படங்கள் வெளிநாடுகளின் வசூலையும் முக்கிய இலக்காகக்கொண்டிருக்கின்றன. உலகமெங்கும் இந்தியர்கள் பரவிக் கிடப்பதும், அவர்கள் பொருளாதார ரீதியில் ஓரளவு வசதிபடைத்தவர்களாக இருப்பதும் இதற்குக் காரணம். தவிர, வெளிநாட்டு இந்தியர்களின் பொதுவான ஆர்வங்களாக கோவில் சார்ந்த நடவடிக்கைகளும் சினிமாவும் இருக்கின்றன. எனவே, இவர்களைக் குறிவைத்து படம் எடுப்பது பொருளாதார ரீதியில் புத்திசாலித்தனமான உத்தி என்பது நிதர்சனமான உண்மை.

75 கோடி செலவில் உருவான ஸ்லம்டொக் இதுவரை ஆயிரம் கோடி ரூபா வசூல் செய்திருக்கிறது. இதில் கிட்டத்தட்ட 800 கோடி வெளிநாட்டுச் சந்தைகளிலிருந்து கிடைத்தது. இந்தியர்கள் பெருமளவில் இடம்பெற்ற ஓர் இந்தியப் படத்துக்கு ஏராளமான விருதுகளும், வரலாறு காணாத உலகளாவிய கவனமும் கிடைத்திருக்கிறது. இதன் விளைவாக இதன் வசூல், சாதனை அளவைத் தொட்டிருக்கிறது. நாளை, இன்னோர் ஆங்கிலேய அல்லது அமெரிக்க இயக்குநர் இந்தியாவுக்கு வந்து ஷாரூக் கான், அமீர் கான், ஐஸ்வர்யா ராய், கத்ரீனா கைப், ரஜினி காந்த் ஆகிய எவரையேனும் வைத்து ஆங்கிலப் படம் எடுத்தால் அதற்கு இந்தியாவிலும் வெளிநாடுகளிலும் அமோக ஆதரவு கிடைக்கும் என்று நம்ப இடமிருக்கிறது. அதற்கான களத்தை ஸ்லம்டொக்குக்குக் கிடைத்த மிகப்பெரிய கவனமும் வெற்றியும் ஏற்படுத்தியிருக்கின்றன. இந்திய சந்தையை அல்லது இந்திய ஆற்றல்களைப் பயன்படுத்தி பன்னாட்டு நிறுவனங்கள் பணம் சம்பாதிக்க முயல்வதற்கு வழிவகுக்கக்கூடிய நிகழ்வாகவும் இதைப் பார்க்கலாம்.

தொண்ணூறுகளில் இந்தியாவிலிருந்து வரிசையாக உலக அழகிகள் வந்த வண்ணம் இருந்தார்கள். ஐஸ்வர்யா ராய், சுஷ்மிதா சென், பிரியங்கா சோப்ரா, டயானா ஹைடன், யுக்தா முகி ஆகியோர் உலக அழகிப் பட்டங்களை வென்று இந்தியாவுக்குப் 'பெருமை' சேர்த்தார்கள். திடீரென்று உலகம் இந்திய அழகை மதிக்கத் தொடங்கியது. இந்தியர்கள் பலர் இதுகுறித்துப் பெருமித உணர்வடைந்தனர். ஐஸ்வர்யா ராய் போல, பிரியங்கா சோப்ராபோல, சுஷ்மிதா சென்போல நாமும் வரவேண்டும் என்ற ஆசை இந்திய இளம் பெண்கள் பலருக்கும் ஏற்பட்டது. வரமுடியும் என்ற நம்பிக்கையும் அவர்களுக்கு ஏற்பட்டது.



**தொண்ணூறுகளில் இந்தியாவில் அழகிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அழகு வியாபாரம் பெருகிப் பல பன்னாட்டு, உள்நாட்டு நிறுவனங்களின் கஜானாக்கள் நிரம்பின. 2009இல் இந்தியர்களை வைத்து எடுக்கப்பட்ட ஓர் ஆங்கிலப் படம் சிறந்த படமாக மகுடம் சூட்டப்பட்டுள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும்சில விருதுகளும் பல முதலீடுகளும் இந்தியத் திரை உலகுக்கு வந்துசேரலாம்**


பணமும் முயற்சியும் இருந்தால் யாரும் 'அழகி'யாகலாம் என்ற நம்பிக்கை பெண்கள் மனதில் இந்த வெற்றிகளின்மூலமாகவும், அதையொட்டிய செய்தியூடக கொண்டாட்டங்களின் மூலமாகவும் விதைக்கப்பட்டது. அழகு என்பது தன்னம்பிக்கைக்கான புதிய மந்திரமாக, முயன்றால் அடையக்கூடிய இலக்காக உரைப்பட்டது. ஐந்து இந்தியப் பெண்கள் உலக அழகிகளாகத் தேர்வுபெற்றதையொட்டி இத்தனை கோடிப்பேர் மனதில் அழகுக் கனவுகளை விதைக்க முடியும் என்பது கேட்பதற்குக் கற்பனைபோலத் தெரியும் ஆனால், அது ஓர் யதார்த்தம் என்பது இந்தியாவின் சிறு நகரங்களிலும் பெருநகரங்களிலும் சுற்றிப் பார்த்தால் தெரியும்.

'தேவைக்கு ஏற்ப சேவை' என்பது தானே சந்தையின் நிரந்தர விதி. அழகை 'உருவாக்க'வும் மெருகேற்றவும் உத்தரவாதம் அளிக்கும் அழகு நிலையங்கள் நாடு முழுவதும் ஆயிரக்கணக்கில் தோன்ற ஆரம்பித்தன. மேற்கு உலகம் எதை அழகு - குறிப்பாக பெண்ணழகு - என்று நினைக்கிறதோ அந்த அழகை அடைவதற்கான முயற்சிகள் சந்தைப் படுத்தப்பட்டன. இடுப்பு, மார்பு, கைகள், கால்கள் என எந்தெந்த அங்கங்கள் எந்த அளவில் இருக்கவேண்டும் என்பது குறித்த தரப்படுத்தப்பட்ட அளவுகோல்கள் கோலோச்சத் தொடங்கின. திரைப்படங்களிலும் விளம்பரங்களிலும் இந்த அளவுகோல்கள் முன்னிலைப்படுத்தப்பட்டன. உடற்பயிற்சி, சிகை அலங்காரம், தோல் பராமரிப்பு, உணவுக் கட்டுப்பாடு ஆகியவை குறித்த 'விழிப்புணர்வு' பெருகியது. இந்தப் புதிய விழிப்புணர்வுக்கு தினிபோடும் மையங்களும் கூடவே முளைத்தன. கடந்த 15 ஆண்டுகளில் இந்தியாவில் அழகு பராமரிப்புச் சந்தை அடைந்திருக்கும் வளர்ச்சி கண்கூடானது; பிரமிக்கத்தக்கது.

தொண்ணூறுகளில் இந்தியாவில் அழகிகள் கண்டுபிடிக்கப்பட்டார்கள். அழகு வியாபாரம் பெருகிப் பல பன்னாட்டு, உள்நாட்டு நிறுவனங்களின் கஜானாக்கள் நிரம்பின. 2009இல் இந்தியர்களை வைத்து எடுக்கப்பட்ட ஓர் ஆங்கிலப் படம் சிறந்த படமாக மகுடம் சூட்டப்பட்டுள்ளது. அடுத்தடுத்த ஆண்டுகளில் மேலும்சில விருதுகளும் பல முதலீடுகளும் இந்தியத் திரை உலகுக்கு வந்துசேரலாம். இந்தியர்களின் கலைத்திறன் மேற்கு உலகினால் 'கண்டுபிடிக்க'ப்பட்டுக் கொண்டாடப்படலாம். பல பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் உள்நாட்டு நட்சத்திரங்களின் பொருளாதார சாம்ராஜ்யங்கள் விரிவடையலாம். ஆனால், இதற்கும் நல்ல சினிமாவுக்கும் தொடர்பில்லை என்பதைப் புரிந்துகொள்ளவேண்டும்; இந்திய பெருமையாக இதைப் பார்ப்பதிலுள்ள ஏமாளித்தனத்தையும் சேர்த்துப் புரிந்துகொள்ள முயற்சிக்கவேண்டும். ■

# இன்னோர் இமயம்

## இரண்டு 'ஒஸ்கார்' விருதுகளை வென்ற முதல் இந்தியர்; முதல் தமிழர்



'ஸ்லம்டொக் மில்லியனர்' படத்தில் ரஹ்மானின் இசை அமைப்பு,
'சிறந்த இசை', 'சிறந்த பாடல்'
என்பவற்றுக்கான விருதுகளைப் பெற்றன

**ஏ. ஆர். ரஹ்மானின் இமாலய உயர்வு நேர் அநுபவத்தில்**

எஸ். சம்பத் குமார்

ஏறக்குறைய 30 ஆண்டுகளுக்கு முன்னர் சென்னைத் தொலைக்காட்சி நிலையத்துக்கு தனது சின்னஞ்சிறிய மகனை அழைத்துவந்திருந்தார் ஒரு பெண்மணி. சைக்கிள் ரிக்ஷாவில் அவர்கள் வந்திருந்தார்கள். தன்னைவிடப் பெரியதான அந்த 'கீபோர்ட்' இசைக் கருவியைத் தூக்கிக்கொண்டு வந்தான் அந்தச் சிறுவன் - சிறுவர் நிகழ்ச்சியில் பங்கேற்பதற்காக.

ஆனால், ஒளிப்பதிவு கூடம் கிடைக்கத் தாமதமானது. "ஒளிப்பதிவை நாளை வைத்துக்கொள்ளலாமா?'' என்றார் தயாரிப்பாளர்.

அந்தச் சிறுவனின் முகம் வாடிப்போனது.

நாளை மீண்டும் வரவேண்டும் என்றால் மீண்டும் சைக்கிள் ரிக்ஷாவுக்கு வாடகை தரவேண்டுமே!

நல்லவேளையாக அங்கு ஊழியராகப் பணிபுரிந்துவந்த தேவா (இன்றைய புகழ்பெற்ற இசை அமைப்பாளர் தேவா தான்), இன்னோர் ஒளிப்பதிவு கூடம் காலியாக இருப்பதைச் சொன்னார்; ஒளிப்பதிவு நடந்தது.

"கண்ணே கலைமானே...'' என்ற 'மூன்றாம் பிறை' படத்தின் பாடலை மிக அருமையாக வாசித்த அந்த பத்து வயதுப் பாலகனைக்கண்டு அங்கிருந்தோர் வியந்தனர். 'கீ போர்ட்' எட்டவில்லை என்பதால், எழுந்துதாவி, அந்த மூன்று அடுக்கு இசைக் கருவியை வாசித்தான் அந்தப் பிறவி மேதை அல்லா ரக்கா ரஹ்மான்.

அந்த ஏ. ஆர். ரஹ்மான் இன்று, இரண்டு 'ஒஸ்கார்' விருதுகளைத் தட்டி வந்த சாதனையாளர்.

மலையாளப் படங்களில் துணை இசை அமைப்பாளராக பணியாற்றி வந்த தந்தை சேகர் திடீரென்று இறந்து போனதால், குடும்பச் சுமை சிறுவன் திலீப் குமாரின் தலையில் வீழ்ந்தது. (குடும்பத்தில் நிகழ்ந்த துயரங்களிலும் நம்பிக்கைகளிலும், இந்து குடும்பத்தில் பிறந்த திலீப் குமார் 21ஆவது வயதில் ரஹ்மானாக இஸ்லாத்தைத் தழுவினார்.) முதலில், மலையாள இசை அமைப்பாளர் ஒருவர் ரஹ்மானுக்கு வேலை கொடுத்தார் - ஒலிப்பதிவு கருவியை இயக்குகின்ற வேலை. கிடைத்த முதல் ஊதியம் 50 ரூபா.

பின்னர் இசைக் குழுக்களில் பணியாற்றினார். பள்ளிக்குச் செல்லமுடியவில்லை; பள்ளிப் படிப்பு பாதியில் நின்றது.

விளம்பரப் படங்களுக்கு இசை அமைத்து வருவாய் ஈட்டினார். அந்தக் காலம் 'இசைஞானி' இளையராஜா ஏகபோகமாக இசைத்துறையில் கோலோச்சிவந்த காலம்.

இளையராஜா இசை அமைத்தால் போதும் - படம் வெற்றி. அதுவும், ஆரம்பப் பாட்டை அவர் பாடினால் ...

இன்னும் சொல்லப்போனால், ஒரு படத்தின் ('கிழக்கு வாசல்' என்று ஞாபகம்) 'ரைட்டில்' வருமுன் இளையராஜா நடந்துவர, அவருடைய பாதங்கள் மலர்களால் அர்ச்சிக்கப்படும் காட்சிகூட அப்போது இடம்பெற்றது. அவரை மீறி வேறு எந்த இசை அமைப்பாளரும் தலையெடுக்க முடியாது என்ற நிலை. தன் இசையால் அந்த அளவுக்கு அனைவரையும் வசியப்படுத்தியிருந்தார் அந்த இசை மேதை. ஆனால், எவரையும் மதிப்பதில்லை; எடுத்தெறிந்து பேசிவிடுவார்; இயக்குநர் முதல் தயாரிப்பாளர்வரை எவருமே தலையிட அநுமதிக்கமாட்டார், என்ற குற்றச்சாட்டுகளும் நிலவின.

பாரதிராஜாவைப் பகைத்துக்கொண்டார்; கவிஞர் வைரமுத்து அவருக்குப் பாடல் எழுதுவதைக் கைவிட்டார்; பாலசந்தர், ஏ.வி.எம் நிறுவனம் - ஏன், அமைதிக்குப் பெயர்போன நடிகர் ரஜினிகாந்த் - என, அவரைக் கண்டு விலகியவர்களின் பட்டியல் நீண்டிருந்தது. அந்தப் பட்டியலில் இடம்பெற்ற இயக்குநர் மணிரத்தினம், தனது 'ரோஜா' படத்துக்கு இசை அமைக்க ஏ. ஆர். ரஹ்மானை ஒப்பந்தம் செய்தார். அந்த முதல் படமே அவருக்கு தேசிய விருது வாங்கித் தந்துவிட்டது.

அவருடைய இசையில் புதுமை, இளமை, இனிமை அனைத்தும் இருந்தன. பிரபல திரை இசைக்குயில் சித்ரா ஒரு நேர்காணலில் கூறினார்: "ஏ. ஆர். ரஹ்மான் இசை அமைக்கும் விதமே தனி. முதலில் அடிப்படை சுருதியை மட்டும் வைத்து - என் குரலை மட்டும் - வேறு இசைக்கருவிகளின்றி பதிவு செய்து கொள்வார். பாடல் வெளிவரும்வரை பாட்டு எப்படி இருக்கும் என்பது தெரியாது. ஆனால், வெளிவரும் பாடல் அற்புதமான படைப்பாக இருக்கும்.''

அதுதான் ரஹ்மானின் சிறப்பு.

நவீன யுகத்தின் பிரதிநிதியாக, இளைஞர்களின் அடையாளமாக அவர் உருவானார். ரப், ரெக்கே, அரபு, பேர்சிய இசையுடன், மேற்கத்திய இசை உத்திகளையும், கர்நாடக, ஹிந்துஸ்தானி இசையையும் கலந்து, புதுமையான கலவையாகத் தந்தார்; மக்கள் ஏற்றுக்கொண்டனர். மைக்கல் ஜாக்சன் ஆட்டம்போல இவருடைய இசை இடமளித்தது; பல இளைஞர்கள் பிரபுதேவாக்களாக ஆடி மகிழ்ந்தனர்.

ரஹ்மான் ஒரு தொழில்நுட்பவியலாளராக கம்யூட்டரை பயன்படுத்தினார் தன் இசையில்.

ஒரு வயலின் அல்லது குழல் இசையைப் பதிவுசெய்து கம்யூட்டரில் புகுத்தி, வேறுவிதமான இசையை வெளிக்கொணர்ந்தார்.

இளையராஜாவின் குழுவில் பணிபுரிந்தபோது 'புன்னகை மன்னன்' படத்தில் "சிங்களத்துச் சின்னக்குயிலே...'' பாட்டுக்கு கம்யூட்டரைப் பயன்படுத்த உதவினார் இவர்.

மெல்லிசை நிகழ்ச்சிகளில் மற்றைய இசை அமைப்பாளர்களின் பாட்டுக்களை எவரும் பாடிவிட முடியும். ஆனால், ரஹ்மானின் பாட்டுக்களைப் பாடிவிட முடியாது; அவற்றின் இசையை அப்படியே கொண்டுவர முடியாது.

கம்யூட்டரின் பயன்பாட்டால் தாளங்களில் துல்லியமான கணக்குடன், புதிய உத்திகளைப் பயன்படுத்தினார் (பல வாத்திய இசைக் கலைஞர்களுக்கு வேலை இல்லாமல் போனது).

சோனு நிகம் என்ற பாடகர் **கூறுகிறார்:** "எல்லோரிடமும் மென்பொருள் இருக்கிறது; கம்யூட்டர் இருக்கிறது. ஆனால், இவர் மட்டும்தான் இசையில் ஜீவனைத் தொடுகிறார்.''

ரஹ்மானுடைய இசையில் பழைய பாட்டுக்களின் சாயல் தெரியும். ஆனால், புதுமையாக அலங்காரம் செய்வார். சூபி இசையில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டவர் என்பதால் அதன் தாக்கம் இவரது இசையில் நிலவியது. "தக தெய்ய தெய்ய தெய்யா...'' 'உயிரே' பாட்டு இதற்கு உதாரணம்.

எண்ணற்ற புதிய பாடகர்களைப் பயன்படுத்தினார் (குரலின் தனித்தன்மை மறைந்துபோனது ஒரு குறைதான்).

உச்சஸ்தாயியில் பெரும்பாலும் பாடல்களை அமைத்தார் ("வந்தே மாதரம்...'', "வீரபாண்டிக் கோட்டையிலே...'' இப்படிப் பல பாடல்கள்).

'மெலடி' என்ற இனிமையையும் அவ்வப்போது தந்தார் ("சிநேகிதனே...'', "கன்னத்தில் முத்தமிட்டால்...'').

தமிழிலிருந்து ஹிந்திக்குச் சென்றார்; அங்கிருந்து ஹாலிவுட்.

பணிவும் பண்பும் கொண்ட ஏ. ஆர். ரஹ்மான் இன்று உச்சியில் நிற்கிறார்; அது தமிழனுக்குப் பெருமை. ■

# சிரட்டை



ஓவியம்:
கே. கே. ராஜா



**இப்போது அவன் கைகளில் முன்னர்போல் வலு இல்லை. இருந்தாலும், வானத்தில் விரலால் கோடுபோட்டுக் கொண்டிருப்பதை விடவும் சிரட்டையின் வெளிப்புறத்தைக் கல்லில் தேய்த்து வழுவழுப்பாக்குவதில் தனி ஆனந்தம் ஏற்படுகிறது**

அவனுடைய கரங்கள் எப்போதும் பரபரத்துக்கொண்டேதான் இருக்கும். ஏழுதுவது... படிப்பது... சாப்பிடுவது என்கிற நேரம் எல்லாம் போக, விரல்கள் காற்றிலாவது ஏதாவது 'வரைந்து' பார்த்து, அல்லது 'கணக்குப்' போட்டுக்கொண்டிருக்கும். புதிதாக அவனைப் பார்க்கின்றவர்களுக்கு 'இவன் என்ன... ஒரு மாதிரியோ?' என்றுகூட நினைக்கத் தோன்றும்.

ஆழமான படிப்பாளி என்று சொல்வதற்கில்லை; சராசரியைவிடக் கொஞ்சம் அதிக விஷயஞானம் உள்ளவன். ஏட்டுப் படிப்பு என்பதை விடவும், மற்றவர்களைப் பார்த்து அநுபவத்திலேயே அவன் கற்றுக்கொண்டவை ஏராளம்.

அப்படித்தான் இந்தச் 'சிரட்டை' வேடிக்கையும். சிரட்டை என்கிற தென் மாவட்டத்துச் சொல் ஆளுமையே அவனுக்குச் சமீபத்தில்தான் தெரியும். அவனுடைய 'ஜன்மபூமி' வட்டாரத்தில் எல்லாம் தேங்காய் ஓடு, தேங்காய்க் கொட்டாங்கச்சி என்றுதான் சொல்வார் கள்.

பக்கத்துவீட்டுத் திருநெல்வேலிப் பேர்வழி ஒருவர் குடிவந்தபிறகு இந்தச் 'சிரட்டை' அவனுடைய குடும்ப அகராதியில் இடம்பிடித்தது. இது, குழந்தைகளின் காலம். அந்தக் காலத்து எம்ஜிஆர், சிவாஜி; பின்னால், ரஜனி, கமல் எல்லாம்போய், இப்போது சூர்யா, அஜீத் புகழ் எல்லாம்கூட இவர்கள் மூலம்தான் பெரியவர்களுக்குப் புரிகிறது. அப்படித்தான் குழந்தைகள் தங்கள் தோழர்களோடு விளையாடப்போய் 'சிரட்டை'யையும் கொண்டுவந்துவிட்டார்கள். இப்போது, தேங்காய் ஓடு, கொட்டாங்கச்சி என்று சொல்கிற பழக்கம் விட்டே போய்விட்டது.

சின்ன வயசில் இந்தக் கொட்டாங்கச்சியின் மூன்றாவது கண்வழியே கயிற்றை நுழைத்து உள்ளே முடிச்சுப்போட்டு இழுத்துக்கொண்டு, கொட்டாங்கச்சியின்மேல் பாதம் வைத்து, விரலிடுக்கில் கயிற்றைக் கவ்விக்கொண்டு நடந்தால் - 'டக் டடக்' குதிரைச் சவாரிதான்! இப்போதுமாதிரி விதம்விதமான குட்டிக் கார், பொம்மைகள், 'ரெடிபேர்' கரடிப் பொம்மை எல்லாம் யார் கண்டது? எப்போதாவது 'செலுலொயிட்' பொம்மைகள் என்று குட்டிக்குட்டியாய் வாங்கித் தருவார்கள். ஐம்பது வருஷத்துள் குழந்தைகளின் உலகம்தான் எவ்வளவு விவரமஹா சமுத்திரமாக ஆகிவிட்டது!

'காஸ்' அடுப்பு... ஏன், மண்ணெண்ணெய் 'ஸ்ரோவ்' கூடத் தெரியாது. காய்ந்த சுள்ளிகள், விறகுகள், மண்ணையும் உமியையும் சேர்த்துப் பிசைந்து அம்மாவோ, மற்றவர்களோ சொந்தமாகத் தயாரிக்கும் அடுப்புகள்தாம். அதைக்கூட 'அடுப்புப்போடுவது' என்று குறிப்பிடுவார்கள். ஒற்றை அடுப்பு, இரட்டை அடுப்பு, கும்மட்டி அடுப்பு என்றெல்லாம் அதில் 'ஜாதி'கள் உண்டு.

அம்மா மண்ணைக் குழைத்து அடுப்புப் போடுகிற அழகை பார்த்துக் கொண்டே இருக்கலாம். அத்தனை நளினம்; அத்தனை திருத்தமான வேலை. கும்மட்டி அடுப்பு என்பது இப்போது பார்க்கிற 'எலெக்ரிக் ஹொட்பிளேட்' மாதிரி வட்ட வடிவமாக இருக்கும். கீழே ஒரு கை முட்டி நுழைகிற வாய். உருளை வடிவின் பாதியில் நீள நீளமான கம்பித் துண்டுகளை வரிசையாக இடைவெளிவிட்டு அடுக்கிப் பூசியிருப்பார். மேலே கரித் துண்டுகளைப் போட்டு, அடிவழியே காகிதம் எதையாவது கொளுத்திப் போட்டு விசிறுவார். கம்பி வரிசைக்கு மேலே கொஞ்சம் தேங்காய் நாரை உதிர்த்துப்போட்டால்தான் அதன் வழியே கரித்துண்டுகளில் தீ பரவும். கரி எரிந்த சாம்பல் கம்பிகளின் வழியே உதிர்ந்துவிடும். கும்மட்டி அடுப்பு மட்டும் தீப்பற்றிக்கொண்டுவிட்டால் நமக்கு வேலையே இல்லை; அவ்வப்போது வீசுகிற காற்றில் தணல் தானே கனிந்து எரியும்.

அடுப்புக்குத்தான் எரிபொருளாக மரம், சுள்ளிகள் எல்லாம் வேண்டும். அவனுடைய அம்மாவுக்குத் தேங்காய்க் கொட்டாங்கச்சி சேகரிப்பது ஒரு வேலை. வீடுகளில் அடிக்கடி தேங்காய் வாங்கி சமைக்கிற அளவுக்கு பொருளாதாரம் இல்லை. அவ்வப்போது பக்கத்துச் செட்டியார் கடையில் போய் காலணா, அரையணா என்று தேங்காய்ப் பத்தைகளை வாங்கிவந்து அம்மியில் வைத்து அரைத்து அன்றைய பொழுதை ஓட்டிவிடுவார். ஆகவே, அக்கம் பக்கத்து வீடுகளிலிருந்து தேங்காய்க் கொட்டாங்கச்சிகளைச் சேகரித்து வைத்திருப்பார்.

அடுப்பில் போட்டால், எண்ணெய் கசிந்தபடி ஒருவிதமான நறுமணத்தோடு புஸ்... புஸ்... என்று சீறுகிறமாதிரி ஒலி எழுப்பிக்கொண்டு கொட்டாங்கச்சி நின்று எரியும். பாத்திரங்களில்தான் பயங்கரமாக் கறை படியும்.

அதற்குப் பிறகு இந்தக் கொட்டாங்கச்சியைப்பற்றிய அவனுடைய ஞானம், வாசலில் தயிர் கொண்டுவருகிற காளிக் கிழவி, அவ்வப்போது ஈச்சம்பழம், பாலைப்பழம், நாவல் பழம் என்று கூடைகளில் சுமந்துகொண்டுவந்து விற்கிற கிராமத்துப் பெண்கள் - இவர்கள் மூலம் கிடைத்தது. வழுவழுவென்று வெளிப்புறம் தேய்த்து, நானாவட்டத்தில் மோர், வெண்ணெய் பட்டுக் கறுத்து மின்னுகிற அழகான கொட்டாங்கச்சியைக் காளிக்கிழவி வைத்திருப்பாள். அதில் முகந்துதான் தயிரோ, மோரோ கொடுப்பாள். ஏமாற்றல் அளவுகள் எல்லாம் அறியாத காலம். அதுவும், அரையணா, ஓர் அணாவுக்கு மோர் வாங்கினால் ஒரு நாள் ஓடிவிடும். ஓர் அணா என்பது இன்றைய ஆறு பைசா மதிப்புத்தான்; ரொம்பப் பெரிய தொகை!

ஈச்சம் பழம், பாலைப்பழம் எல்லாம் காசுக்குத் தரமாட்டார்கள். ஒரு கொட்டாங்கச்சி அளவு அரிசி கொடுத்தால் இரண்டு மடங்காகப் பழம் தருவார்கள். ஒரு கொட்டாங்கச்சி நெல், சோளம் என்று தந்தால் ஒரு கொட்டாங்கச்சி பழம்தான் கிடைக்கும். இப்படி, முகத்தல் அளவையாகவும் பயன்பட்டது சிரட்டை என்கிற கொட்டாங்கச்சி.

பெரிய கொட்டாங்கச்சிகளில் இரண்டு துளைகள்போட்டு சீராகச் செதுக்கிய மூங்கில் குச்சி அல்லது சவுக்குக் குச்சியைச் செருகி, கூழ் கிண்டுகிற போது கரண்டியாகவும் பயன்பட்டது அவனுக்கு நினைவிருக்கிறது.

அறுபதாண்டுகளுக்குப் பிறகு எல்லாம் வரிசையாக நினைவுக்கு வருகின்றன. இப்போது அவன் கைகளில் முன்

னர்போல் வலு இல்லை. இருந்தாலும், வானத்தில் விரலால் கோடுபோட்டுக் கொண்டிருப்பதை விடவும் சிரட்டையின் வெளிப்புறத்தைக் கல்லில் தேய்த்து வழுவழுப்பாக்குவதில் தனி ஆனந்தம் ஏற்படுகிறது. 'வறட், வறட்' என்று சிரட்டை முதுகைச் சுவரில், மாடிப் படியில் என்று தேய்க்கிறபோது அவளுக்குத் தலை வேதனையாகவும் இருக்கிறது.

'கிழத்துக்கு வேறவேலை இல்லையா?' என்று பிள்ளைகளும் மருமகள்களும் கூட செல்லமாக கெக்கலி கொட்டிச் சிரிக்கிறார்கள். குட்டிப் பேரன்தான், தாத்தா என்னவோ செய்கிறாரே என்று வேடிக்கை பார்த்தபடி, தானும் ஒரு சிரட்டையை எடுத்துத் தரையில் உரசுகிறான். அவனுக்கு இந்த 'வறட்... வறட்...' ஒலி வேடிக்கையாக இருக்கிறது.

அவனுடைய தாயார் நாட்களில் கொட்டாங்கச்சிகளை எரிபொருளாகச் சேமிப்பது சிரமமாக இருந்தமாதிரி இப்போது இல்லை. தினமும் ஒரு தேங்காயாவது உடைத்தாகிறது. என்னென்னவோ சாமி கோவில்களுக்கும், வீட்டிலேயே சமையல் தேவைகளுக்கும் என்று தேங்காய் ஓடுகளை என்ன செய்வது என்று தெரிவதில்லை. 'காஸ்' அடுப்புக்கள், மின்சார அடுப்புக்கள் என்று புழங்குகிற காலங்களில் சிரட்டை போன்ற இயற்கை எரிபொருள்களை யார் சீந்துவார்கள்?

எப்போதாவது, வீட்டுவேலை செய்ய வருகிற பெண்மணி, இருக்கிற கொட்டாங்கச்சிகளை எடுத்துப்போவாள்; அதுவும் மனம்வைத்தால்தான்.

ஒருநாள், கிழவிக்குத் தேங்காய் உடைத்துக் கொடுத்தபோது பிறந்தது இந்தப் புதிய 'சிரட்டை மஹாத்மியம்'. கிழவிக்குத் தேங்காயை அறைந்து உடைக்க வலு இல்லை. அப்படியே உடைத்தாலும் தாறுமாறாக, 'ஈ.ஸி.ஜி' வரைபடக் கோடுமாதிரி நெளிநெளியாக உடைந்து சிதறும். அதைத் துருவியில் வைத்துத் துருவுவதும் சிரமம். அதனால், கிழவிக்கு இதிலும் அவன்தான் துணை. கோவில் குருக்கள் உடைக்கிற மாதிரி, குடுமியின் மிகை நாரைப் பிய்த்துவிட்டுத் தண்ணீரில் நனைத்துக் கல்லில் மோதினால், 'சடேர்'! அத்தனை சரிபாதியாக உடையும் என்பது அவனுக்குப் புரிந்தது போல் கிழவிக்குத் தெரியாது.

அப்படி உடைத்தபோது ஒருசமயம், அவனையும் மீறிக் கால் மூடி - முக்கால் மூடி என்று உடைந்தது நன்றாய் முற்றிய தேங்காய். குட்டியான கால் தேங்காய் மூடியைக் கையில் வைத்துப் பார்த்த போதே தயிர்காரக் காளிக்கிழவி; ஈச்சம் பழ, பாலைப்பழக்காரிகளின் கொட்டாங்கச்சி நினைவுக்கு வந்தது.

உள்ளங்கை அகலமான அந்தச் சிறிய தேங்காய்ச் சிரட்டையின் முதுகைத் தேய்ப்பது என்று தொடங்கி இப்போது வழுவழுப்பான வெளிப்புறத்தோடு பத்துப் பதினைந்து சிரட்டைகள் அழகான கிண்ணங்களாய்ச் சேர்ந்துவிட்டன.

அப்பாவைப் பார்க்கவந்த அருமைப் பெண் ஒருசமயம் குட்டிக்குட்டியாய் அவன் தேய்த்துவைத்திருந்த சிரட்டைகளை ஆசையாக வாங்கிக்கொண்டு போனாள். "அழகா இருக்குப்பா இது... சர்க்கரை டப்பாவிலேயும் சாம்பார்ப் பொடி எடுக்கவும் வைச்சுக்கலாமே" என்று அவள் சொன்னபோது அவனுக்குப் பேரானந்தமாக இருந்தது. எதிலும் பயன்படு பொருளாய்ப் பார்க்க விரும்புகிற பெண் என்று பெருமையாகவும் இருந்தது.

"அம்மாம்மா! பொறந்தாத்துச் சீரைக் கொண்டு போறா உங்க பொண்ணு" என்று மருமகன்கள் கிண்டல்பண்ணி என்ன செய்ய?

"அப்பா, பெயின்ட் வாங்கித் தரேன்... மேலே கலர்கலராப் பூசிப் பூ வரைஞ்சா..." என்று தூண்டிவிட்டாள் பெண். அதுவும் சரி என்று பட்டாலும், இயற்கையான சிரட்டை நிறம் பாழாகி விடுமே என்று தோன்றியது. ஆனாலும், சொன்னவள் கலை நுட்பத்தை மதிக்கிற பெண்ணாயிற்றே... பெயின்ட் வந்தது. விதம் விதமான நிறங்களில் பிரத்தியேகமான பெயின்ட்கள்; பிரஷ்கள்... அவளே எடுத்துக் குழைத்து 'இப்படிப் பூசு' என்றும் சொல்லிக் கொடுத்தாள்.

அடுத்த நாலு நாட்கள் இதே வேலை. மனம்போனபடி சிரட்டையின் வெளிப்புறத்தில் சித்திர வேலைகள். தரையில் எல்லாம் ஆங்காங்கே சொட்டுச் சொட்டாய் நிறத் துளிகள்.

"என்னப்பா இது... தரையெல்லாம் பெயின்ட். தேவையா?" என்று முணுமுணுத்தான் பிள்ளை. "போகட்டும்பா... ஏதோ அவருக்கும் பொழுது போகணுமோ இல்லையோ..." என்று பரிந்து கொண்டு வந்தாள் கிழவி.

அவனுக்கு - பூசிவைத்த பெயின்ட் வேலைப்பாடு அவ்வளவாய் மனநிறைவு தரவில்லை. இயற்கையான அழகு பறிபோய்விட்டமாதிரி தோன்றியது. அடர்த்தியாகப் பூசியிருக்கவேண்டாமோ என்று நினைத்தான்.

இன்னொரு சிரட்டையை எடுத்து வாய் விளிம்பில் மட்டும் வட்டமாக, போர்டர் கட்டியமாதிரி கோடுகள் போட்டான். கோலம் மாதிரி நெளிநெளியாய் ஒரு வரிசை. 'இதுவே போதும் போல இருக்கே... சிம்பிள்' என்று நினைத்து அப்படியே மேஜைமீது வைத்தான். நொடியில் உலர்ந்துவிடுகிற பெயின்ட் அது. எளிமையே அழகுதான் என்பதை அதிகம் வேலைப்பாடில்லாத இந்தச் சிரட்டையும் சொல்வது போலிருந்தது.

தெருவில் கார் வந்துநிற்கும் ஒலி கேட்டு மேஜையைவிட்டு விலகிவந்து வாசல் பார்த்தான். 'வெளிநாடா, உள்நாடா?' என்று புரிந்துகொள்ள முடியாத நான்கைந்துபேர் 'ஷூஸ்' தடதடக்கப் படியேறி வந்தார்கள்.

"அப்பா, இவன்தான் மார்ட்டின்... இவ லின்டா..." என்று அறிமுகப்படுத்தினாள் மருமகள். இருவரும் கல்யாணம் பண்ணிக்கப் போகிறார்கள்என்பது அநுமானம். மருமகள் லண்டன் போயிருந்த போது ஒரு 'புரஜெக்டில்' உதவியிருந்தான் மார்ட்டின். இன்னும்சில வடக்கத்திய நண்பர்களோடு தமிழ்நாடு விஜயம் என்பது அவனுக்குப் புரிந்தது. வந்தவர்களோடு உரையாடி, தேநீர், காபி என்று உபசரித்து...

அவனால் அதிகம் பேச முடியவில்லை. மொழி அந்நியம். அதுவும், மகன், மருமகள், பேரன், பேத்தி மாதிரி கூடச் சரளமாகப் பேச முடியாது. கிழவி தூணோரமாக நின்று பார்த்தே பழகியவள் - மாறுமோ?

வந்தவர்களின் கண்கள் வீடு முழுவதும் என்கிற மாதிரி வியப்பால் மேய்ந்த போது, அவர்களின் பார்வையில் பட்டது இந்த வண்ணச் சிரட்டைகள். எடுத்துப் பார்த்து 'ஹௌ நைஸ்' சொன்னார்கள். மேற்கத்திய நாகரிகத்தில் சம்பிரதாயமான சொற்கள்தாம் என அவன் எண்ணினான்.

லின்டாவின் கரத்தில், விளிம்பில் மட்டும் கோடுபோட்ட ஒற்றைச் சிரட்டை... திருப்பித் திருப்பிப் பார்த்தாள். மார்ட்டினிடம் ஏதோ சொன்னாள்.

"யூ வான்ட் டு ஹாவ் இற்?" மருமகள்தான் கேட்டாள். "அப்பாதான் செய்தது; ஹொபி..." பெருமைபொங்கச் சொன்னான் மகன். லின்டாவின் கண்களில் கோடி சூர்யப்பிரகாசம். அந்தச் சிரட்டையைப் பவ்யமாகப் பெற்றுக் கொண்டு மார்போடு அமுத்தியவாறு "தாங் யூ" சொன்னாள். லின்டாவின் வடிவத்தில் இன்னொரு மகள் தெரிந்தாள்.

அவர்கள் விடைபெற்றுப் போன போது அவனுக்கு என்னவோ சொல்ல வேண்டும் போலிருந்தது. லின்டா - மார்ட்டின் இருவரின் தலையையும் தொட்டு 'கோட் ப்ளெஸ் யூ' என்றான். அவன் கண்களில் நீர் துளிர்க்க முயன்றது.

கிழவி பெருமையோடு பார்த்துக் கொண்டேயிருந்தாள். ■

KUMARANS

# Grocers & News Agents

குமரன்ஸ்

லீலா தயாரிப்பு பொருள்களின்
இறக்குமதியாளர்களும் ஏக விநியோகஸ்தர்களும்

லீலா


## Money Transfer Service

(Global Exchange Ltd, Western Union)

**KUMARANS**
**142-144 Hoe Street**
**Walthamstow**
**London E17 4QR**

**Tel: 020-8521 4955, 020-8521 4411**
**Fax: 020-8521 9482**
**Email: kumaransltd@aol.com**





## வெண்ணிலா கபடி குழு

**கதை, திரைக்கதை, இயக்கம்: சுசீந்திரன்**
**இசை: வி. செல்வகணேஷ்**
நடிப்பு: விஷ்ணு, கிஷோர், சரண்யா, மோகன், வைரவன், நிதிஷ், சுந்தர், அப்புக்குட்டி, சூரி, பாண்டி, ஜானகி

### ஆடுகளமும் வாழ்க்கைக் களமும்

கபடி விளையாட்டு அதன் நுணுக்கங்களோடும் உயிர்ப்போடும் நாடகியத் தன்மைகளோடும் சித்தரிக்கப்பட்ட முதல் படம் வெண்ணிலா கபடி குழு.

பழநிக்கு அருகில் உள்ள சிறிய கிராமத்தில் ஒரு குழுதான் வெண்ணிலா கபடி குழு. தோற்றுக்கொண்டே இருக்கும் இக்குழு, பயிற்சியாளர் செளடமுத்துவின் (கிஷோர்) வழிகாட்டுதலில் எப்படி உயிர்க்கிறது என்பதுதான் கதை.

விளையாட்டில் விரோதம், வணிக நோக்கங்கள், பழைய பகை, தற்செயலாகக் கிடைக்கும் ஆதரவுகள், காதல் மயக்கம், வர்க்க, ஜாதி உறவுகள் என்று வாழ்வின் வண்ணங்களையும் மனிதர்களின் குண பேதங்களையும் இயல்பாகக் கோத்தபடி முன்னகர்கிறது திரைக்கதை. ஆட்டத்தின் நுணுக்கம், உயிர்ப்பு ஆகியவற்றுடன் கிராமப் பண்பாட்டுக் கூறுகளையும் துல்லியமாகக் காட்சிப்படுத்தியிருக்கும் புது இயக்குநர் சுசீந்திரன் நம்பிக்கை அளிக்கிறார்.

பாஸ்கர் சக்தியின் வசனங்கள், செல்வகணேஷின் (விக்கு விநாயகராமின் மகன்) பின்னணி இசை, லஷ்மணின் ஒளிப்பதிவு ஆகியவை படத்தை மறக்கமுடியாத அநுபவமாக மாற்றுகின்றன.

கிஷோர் தன் கம்பீரமான, அநாயாசமான நடிப்பால் உயர்ந்து நிற்கிறார். விளிம்பிலிருந்து மையத்துக்கு வந்து நட்சத்திர வீரனாக உயரும் மாரியாக நடித்திருக்கும் விஷ்ணு, தென்றலாய் வந்துபோகும் சரண்யா மோகன், கபடி வீரர்களாக வரும் வைரவன், நிதிஷ், சுந்தர், அப்புக்குட்டி, சூரி, பாண்டி ஆகிய அனைவரும் செறிவாக நடித்திருக்கிறார்கள்.

ஒரு விளையாட்டைப் பின்னணியாகக்கொண்டு, மனித வாழ்வின் சில பக்கங்களைத் திறந்துகாட்டியிருக்கும் விதத்தில் மிகவும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டிய படம் இது.



## நான் கடவுள்

### களம் புதிது, காட்சி புதிது

பாதாள அறைபோன்ற அந்தக் கட்டடத்தினுள் பார்வையிழந்தோர், உடல் வளர்ச்சி குன்றியவர்கள், மூளைவளர்ச்சி குன்றியவர்கள் என்று பலவிதமான குறைபாடுகள் உள்ள மனிதர்கள் காணப்படுகிறார்கள். அவர்களை அங்கு வைத்திருப்பவர்கள் அவர்களைப் பிச்சை எடுக்க வைத்துப் பிழைப்பு நடத்தும் வியாபாரிகள்.

இந்த ஊருக்கு வந்துசேருகிறான் ருத்ரன் (ஆர்யா). சிறுவயதில் தன் தந்தையால் காசியில் கைவிடப்பட்ட ருத்ரன் அகோரி சந்நியாசியாக வளர்கிறான். இந்த ருத்ரன் அந்தப் பிச்சைக்காரர்களுக்கு விடுதலை தருவானா என்பது தான் கதை.


அசலான ஒரு பிரச்னையை அழுத்தமாகக் காட்டியிருக்கும் பாலா பாராட்டுக்குரியவர். இளையராஜாவின் பாடல்களும் பின்னணி இசையும் அபாரம். ஆர்தர் வில்சனின் காட்சிப் பதிவுகள் படத்தை உயர்ந்த தரத்தில் நிறுத்துகின்றன. ஜெயமோகனின் வசனங்கள் படத்துக்கு வலுவூட்டுகின்றன. அவரது நாவலான 'ஏழாம் உலகத்தை' அடிப்படையாகக் கொண்டே பிச்சைக்காரர்களின் வாழ்வு சித்தரிக்கப் பட்டுள்ளது.

கண்களில் கனல் தெறிக்க வித்தியாசமான உடல் மொழியுடன் ஆர்யா வியக்க வைக்கிறார். கண் பார்வையற்றவராக நடித் திருக்கும் பூஜா சிறப்பாகச் செய்திருக் கிறார். தாண்டவனாக நடித்திருக்கும் ராஜேந்திரன் கச்சிதம்.

எல்லாம் சரி; அதர்மத்தை ஒழிக்கவும் மாற்றமுடியாத வேதனைகளை முடிவுக்குக் கொண்டுவரவும் அவதார மூர்த்தி நிகழ்த்தும் சம்ஹாரம் ஒன்றுதான் தீர்வு என்று பாலா சொல்லவருகிறாரா? யதார்த்தமான ஒரு பிரச்னையை யதார்த்த தளத்தில் வைத்துக் கையாள அவர் ஏன் முன்வரவில்லை? பாலா தேர்வுசெய்யும் களம் புதிது; காட்சி புதிது. ஆனால், அவரது பார்வை பழையது. யதார்த்தத்தின் உக்கிரத்தை மறக்கப் புராணிக கற்பனை மழையில் நனையமுனைவது.

இப்படிப் பல விஷயங்களை விரிவாகப் பேசமுடியும் என்றாலும், நான் கடவுள் அழுத்தமான படம் என்பதை மறுப்பதற்கில்லை.

## சிவா மனசுல சக்தி



**இயக்கம்: ராஜேஷ்**
**நடிப்பு: ஜீவா, அனுயா, ஊர்வசி, சந்தானம்**
**இசை: யுவன் ஷங்கர் ராஜா**

### காதலும் மோதலும்

விகடன் டாக்கீஸின் முதல் படம். சக்தியும் (அனுயா) சிவாவும் (ஜீவா) பரஸ்பரம் பொய்களைப் பரிமாறிக்கொள்கிறார்கள். பிறகு பொய்கள் அம்பலமானாலும் நட்பு தொடர்கிறது, மேலும் பல பொய்களுடன். காதலும் சத்தமில்லாமல் வளர்கிறது. சக்தியின் காதல் வெளிப்படும் தருணத்தில் சிவாவின் விளையாட்டுத்தனம் எட்டிப்பார்க்க, விளயாட்டு மோதல் சீரியசாகிவிடுகிறது. இது மோதல் மறுபடியும் எப்படிக் காதலாக மாறுகிறது என்பதுதான் கிளைமாக்ஸ்.

புது இயக்குநர் ராஜேஷ், கலகலப்புக்குக் கொடுத்திருக்கும் முக்கியத்துவத்தைக் காட்சிகளின் நம்பகத் தன்மைக்கும் நேர்த்திக்கும் கொடுக்காமல் போய்விட்டதுதான் பிரச்னை.

ஜீவா இயல்பாக நடித்திருக்கிறார். புதுமுகம் அனுயா பல காட்சிகளில், தான் ஒரு புதுமுகம் என்பதை உணரவைக்கிறார். சந்தானம் சத்தம், வசை ஆகியவற்றை நம்பாமல் 'காமெடி'செய்ய முயன்று, அதில் ஓரளவு வெற்றியும் பெற்றிருக்கிறார். ஊர்வசியின் படபடப்பான பேச்சும் நெகிழ்வூட்டும் நடிப்பும் நன்று. யுவன் ஷங்கர் ராஜாவின் பின்னணி இசை அருமை. பாடல்களும் பரவாயில்லை. கேள்வி கேட்காமல் படத்தைப் பார்த்தால் கொஞ்சம் சிரித்துவிட்டு வரலாம்.

## தநா.07.அல.4777

**இயக்கம்: லக்ஷ்மிகாந்தன்**
**நடிப்பு: பசுபதி, அஜ்மல், சிம்ரன், மீனாட்சி**
**இசை: விஜய் ஆண்டனி**



### சீரான பயணம்

தோல்விகளே வாழ்க்கையாக இருக்கும் கோபக்கார டாக்சி டிரைவரும் பணத் திமிர்பிடித்த ஓர் இளைஞனும் சந்திக்க நேர்கிறது. பணக்கார கௌதமின் (அஜ்மல்) திமிரும் பதற்றமுமே அவனையும் டாக்சி டிரைவர் மணிகண்டனையும் (பசுபதி) சிக்கலில் மாட்டவைத்துவிடுகின்றன. இதனால் கௌதமுக்கு சொத்து நஷ்டம். மணிக்கோ குடும்பத்தில் பெரிய பிரச்னை.

ஆங்கிலப் படமான Changing Lanes ஹிந்தியில் டாக்ஸி நெ. 9211 என்ற பெயரில் வந்தது. அதன் தமிழ்ப் பதிப்பான தநா.07.அல.4777 அசலுக்கு நெருக்கமாகவும் தமிழுக்கு அணுக்கமாகவும் படமாக்கியிருக்கிறார் இயக்குநர் லக்ஷ்மிகாந்தன்.

பல ஓட்டைகள் இருப்பினும் திரைக்கதை சரளமாக உள்ளது. வசனங்கள் இயல்பாக உள்ளன. 'டூயட்' காட்சிகள் திணிக்கப்படவில்லை என்பதும் ஆறுதல்.



பசுபதி குறைவைக்காமல் செய்திருக்கிறார். அஜ்மலும் தேறுகிறார். சற்றே ஆழமான வேடத்தில் மிகையற்ற நடிப்பை வழங்கியிருக்கிறார் சிம்ரன். மீனாட்சி அழகாக இருக்கிறார்; நடிக்கவும் செய்கிறார்.

விஜய் ஆண்டனியின் இசை சுமார். குருதேவின் ஒளிப்பதிவு பரவாயில்லை.

சில குறைகள் இருந்தாலும் சுவாரஷ்யமான பயணத்துக்கு உத்தரவாதம் உண்டு.

**- அரவிந்தன்**

# சினிமா



## 'ரீமேக்'கில் கமல்

'எ வெட்னஸ்டே' என்னும் இந்திய படத்தின் 'ரீமேக்'கில் தான் நடிப்பது உண்மைதான் என்று கமல்ஹாசன் உறுதிப்படுத்தியுள்ளார். இந்தியாவில் நடைபெறும் பயங்கரவாதச் சம்பவங்களையும் அவைகுறித்த அரசின் அணுகுமுறையையும் விமர்சனபூர்வமாக அணுகும் 'எ வெட்னஸ்டே' படத்தில் நஸிருதின் ஷா நடித்த பாத்திரத்தில் கமல் நடிக்கப்போகிறார்.

அமெரிக்காவைச் சேர்ந்த இயக்குநர் ஒருவர் படத்தை இயக்கப்போகிறார். இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்கவுள்ளது.

பெப்ரவரி 19இல் நடைபெற்ற எப்.சி.சி.ஐ. மாநாட்டில் கலந்துகொண்ட கமல், தனது பேச்சில் வெட்னஸ்டே படத்தில் நடிக்கவிருப்பதை தெரிவித்தார்.

ஆக, 'மர்மயோகி' இப்போதைக்கு இல்லை என்பது உறுதியாகிவிட்டது.

## த்ரிஷாவும் ரூ-பீஸும்

நயன்தாராவைத் தொடர்ந்து த்ரிஷாவும் ரூ-பீஸ் உடையில் நடிக்கப்போகிறார் என்றும், இயக்குநர் விஷ்ணுவர்த்தனின் 'சர்வம்' படத்தில் அவர் அப்படி நடித்திருக்கிறார் என்றும் செய்திகள் கசிந்தன. அந்தக் காட்சிகளை விளம்பரத்துக்குப் பயன்படுத்தக்கூடாது என்று த்ரிஷா நிபந்தனை விதித்தார் என்றெல்லாம் சொல்லப்பட்டது. ஆனால், அப்படியெல்லாம் எதுவுமில்லை என்று த்ரிஷா மறுத்ததோடு, அப்படி நடிக்க தனக்கு ஆசையில்லை என்றும் கூறிவிட்டார்.



ஆர்யாவும் த்ரிஷாவும் நடிக்கும் சர்வம் படத்தின் இசைப்பேழை வெளியீட்டு விழா சென்னையில் பெப்ரவரி 14ஆம் தேதி நடந்தது. அந்த விழாவில், 'நீச்சல் உடையில் நடிப்பீர்களா?' என்ற கேள்விக்கு பதில் அளித்த த்ரிஷா, "எனக்கு ரூ-பீஸ் உடையில் நடிக்க விருப்பம் இல்லை; அதேநேரம் அப்படி நடிப்பவர்களை குறைகூறவும் விருப்பம் இல்லை'' என்றார். சர்வம் படத்தில் அப்படி நடித்திருப்பதாக செய்திகள் வந்திருக்கின்றனவே என்று கேட்டதற்கு, 'நீச்சல் குளத்துக்குப் பக்கத்தில் படப்பிடிப்பு நடந்தால் நீச்சல் உடையில் நடித்ததாக அர்த்தமா?' என்று திருப்பிக் கேட்டார் த்ரிஷா.

இதோடு, த்ரிஷாவின் ரூ-பீஸ் பற்றிய பேச்சு முடிவுக்கு வருமா?

## இது காமெடி அல்ல



தமிழின் முன்னணி காமெடியன்களான வடிவேலு, விவேக் இடையே நடந்துவரும் தொழில் போட்டி உச்சத்தை எட்டியுள்ளது. 'படிக்காதவன்' படத்தில் வடிவேலுவின் இடத்தை விவேக் பிடித்தார். 'கந்தசாமி' படத்தில் விவேக்கின் இடத்தைப் பிடித்திருக்கிறார் வைகைப்புயல்.

விக்ரம், ஸ்ரேயா நடிப்பில் சுசி கணேசின் இயக்கத்தில் பெரும் பொருட்செலவில் உருவாகிவரும் கந்தசாமியிலிருந்து கழற்றிவிடப்பட்டுள்ளார் விவேக். அவருக்குப் பதில் இப்போது வடிவேலு நடிக்கிறார்.

படம் கிட்டத்தட்ட முடிந்துவிட்ட நிலையில் விக்ரமும் வடிவேலுவும் இடம்பெறும் காமெடிக் காட்சிகளை மூன்று நாள்கள் தொடர்ந்து எடுக்கப் போகிறார் சுசி.

வடிவேலு ஒப்பந்தமாகியுள்ள இன்னொரு பெரிய படம் 'ஆதவன்'. 'குருவி' படத்தைத் தயாரித்த உதயநிதி ஸ்டாலின் தயாரிக்கும் இந்தப் படத்திலும் முதலில் நடிக்கவிருந்தவர் விவேக்தான்.

காமெடியன்களிடையே நடக்கும் போட்டி, ஹீரோக்களிடையே நடக்கும் போட்டியைவிட சீரியஸாக இருக்கும் போலிருக்கிறதே.

## ஜெயம் ரவிக்கு திருமணம்



ஜெயம் ரவிக்கு கல்யாணம் என்னும் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. நீண்ட போராட்டத்துக்குப் பின்னர் ரவியின் பெற்றோர் ரவியின் காதலுக்கு பச்சைக்கொடி காட்டிவிட்டார்கள்.

ரவிக்கும் ஸ்கொட்லாந்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டிருக்கும் ஆர்த்திக்கும் நீண்ட நாள்களாக காதல் இருந்துவருகிறது. ஆர்த்தி, 'வீராப்பு' படத்தைத் தயாரித்த விஜயகுமாரின் மகள். ஜெயம் ரவியின் தந்தை எடிட்டர் மோகன் இந்தக் காதலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

பெப்ரவரி 14ஆம் தேதியன்று உலகமே காதலர் தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருக்க, காதலுக்காகத் தற்கொலை வரைக்கும் சென்றாராம் ஜெயம் ரவி. புலனாய்வு இதழ் ஒன்று இந்தச் செய்தியை வெளியிட்டது. ரவி இவ்வளவுதூரம் போனதால், அவரது அப்பா இறங்கிவந்திருப்பதாகச் சொல்லப்படுகிறது.


ரவி இப்போது நடித்துவரும் இயக்குநர் ஜகந்நாதனின் 'பேராண்மை' படம் வெளிவந்தபிறகு சென்னையில் திருமணம் நடக்கும். தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

ரவி தற்கொலைமுயற்சியில் இறங்கினாரோ இல்லையோ, இந்தச் செய்தி வந்த மறுநாளே திருமணத்துக்குச் சம்மதித்துவிட்டார் மோகன். நல்லவேளை,

அந்தப் பத்திரிகையில் செய்திவந்தது. அல்லாவிட்டால், 'இந்த விஷயம் இன்னும் எத்தனை வருடத்துக்கு இழுத்திருக்குமோ, அந்தப் பத்திரிகைக்கு நன்றி' என்றாராம் ஜெயம் ரவி.

இந்தத் திருப்பத்தைவைத்து யாரும் படம் எடுக்காமல் இருந்தால் சரி.

## கடவுள் தந்த வரம்



பாலா படத்தில் நடிப்பவர்களுக்கு அவர்கள் திரை வாழ்வில் ஏற்றம் இருக்கும். 'சேது'வுக்குப் பிறகு விக்ரமும் நந்தாவும் பின்னர் சூர்யாவும் பெரிய இடத்துக்குச் சென்றனர். அதுபோலவே, ஆர்யாவுக்கு 'நான் கடவுள்'.

ஆர்யா இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக கஷ்டப்பட்டு உழைத்த உழைப்புக்குப் பலன் கிடைத்திருக்கிறது. பல படங்களில் நடிக்க அவருக்கு அழைப்பு வந்தவண்ணம் இருக்கிறது.



பாலா

'நான் கடவுள்' படத்திலிருந்து முற்றிலும் மாறுபட்ட, இளமை துள்ளும் சுதா பாத்திரத்தில் நடித்துள்ள 'சர்வம்' படம் மார்ச்சில் வெளியாகிறது. இப்படத்தை,'பட்டியல்','அறிந்தும் அறியாமலும்', 'பில்லா' ஆகிய வெற்றிப் படங்களை இயக்கிய விஷ்ணுவர்த்தன் இயக்கியிருக் கிறார்.

சர்வம் படத்துக்குப் பிறகு 'கிரீடம்', 'பொய் சொல்லப்போகிறோம்' ஆகிய படங்களை இயக்கிய விஜயின் இயக்கத்தில் உருவாகும் 'மெட்ராஸ் பட்டணம்' என்னும் படத்தில் ஆர்யா நடிக்கிறார். இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்னைய காலகட்டத்தில் நடக்கிறது கதை.

மறைந்த இயக்குநர் ஜீவாவிடம் பணிபுரிந்த மணிகண்டன் என்பவர் இயக்கும் படத்திலும் ஆர்யா ஒப்பந்தமாகியிருப்பதாக தகவல். இதில் ஆர்யாவுடன் ஜோடி சேருபவர் ஜெனிலியா.

இந்தப் படங்களில் ஆர்யாவின் சம்பளம் கணிசமாக உயர்ந்திருப்பதாக தகவல்கள் வருகின்றன. எல்லாம் கடவுள் தந்த வரம்.

## இளையராஜாவின் மூன்றாம் தலைமுறை



இளையராஜா குடும்பத்திலிருந்து மூன்றாம் தலைமுறையும் இசைத்துறைக்கு வந்திருக்கிறது. ராஜாவின் மூத்த மகன் கஸ்தூரி ராஜாவின் குழந்தையை மிஷ்கினின் 'நந்தலாலா' படத்தில் பாடவைத்திருக்கிறார் இசை ஞானி.

இந்தப் படத்துக்கு இவர் ஐந்து பாடல்கள் போட்டுக்கொடுக்க, அதில் இரண்டைத்தான் படத்தில் பயன்படுத்தியிருக்கிறார் மிஷ்கின்.

படத்தைப் பார்த்த ராஜா தனது மற்றைய பாடல்கள் பயன்படுத்தப்படாமல் போனதற்கு இலேசாக வருத்தம் தெரிவித்தது தனி சங்கதி.

## திரைக்கு வரும் இன்னொரு நாவல்



திரும்பத்திரும்ப ஒரே சூத்திரத்தில் படம் எடுத்து ரசிகர்களை வதைக்கும் இயக்குநர்களுக்கு மத்தியில் வித்தியாசமான கதையுடன் களம் இறங்கும் இயக்குநர்களும் இருக்கிறார்கள். தமிழ் இலக்கியத்திலிருந்து உத்வேகம்பெற்ற இயக்குநர்கள் சிலர் தங்களைக் கவர்ந்த சில படைப்புகளைத் திரையில் வடிக்க முயல்கிறார்கள். தி. ஜானகிராமனின் 'மோகமுள்', நாஞ்சில் நாடனின் 'தலைகீழ் விகிதங்கள்' (சொல்ல மறந்த கதை), சுஜாதாவின் 'பிரிவோம் சந்திப்போம்' (ஆனந்த தாண்டவம்), தமிழ்ச்செல்வனின் 'வெயிலோடு போய்' (பூ), ஜெயமோகனின் 'ஏழாம் உலகம்' (நான் கடவுள்) போன்ற படைப்புகளின் அடிப்படையில் உருவாகும் சில படங்கள் தமிழ்த் திரைக்கு மாறுபட்ட களங்களை அறிமுகப்படுத்துகின்றன.

இந்தவகையில் இப்போது இன்னொரு புதுவரவு, எழுத்தாளர் நீல. பத்மநாதனின் 'தலைமுறைகள்' நாவல் இப்போது படமாகவுள்ளது. 'கனவே கலையாதே' படத்தையும், 'சந்தனக்காடு' தொடரையும் இயக்கிய கவுதமன் இந்நாவலைப் படமாக்கவுள்ளார். 'மகிழ்ச்சி' எனப் பெயரிடப்பட்டுள்ள இப்படத்தில் கவுதமே கதையின் நாயகனாகவும் அறிமுகமாகிறார். சிவசக்தி பாண்டியன் தயாரிப்பில் உருவாகும் 'மகிழ்ச்சி'யில் தேவா இசையமைக்கிறார்.

செழுமையான படைப்புகளைக் கொண்ட தமிழ் இலக்கியப் பரப்பிலிருந்து கதைகள் திரைக்கு வரும்போது மசாலாத்தனங்கள் குறைந்து, அர்த்தமுள்ள படங்கள் வரத்தொடங்கும் என்று எதிர்பார்க்கலாம்.

## இயக்குநர்களுக்கு கடிவாளம்

பெப்ரவரி 23ஆம் தேதி கூடிய தயாரிப்பாளர் சங்கத்தின் பொதுக்குழுக் கூட்டத்தில் அதிரடியாகச் சில முடிவுகளை எடுத்திருக்கிறார்கள்.



அமீர்

முதல் அதிர்ச்சி, படத்துக்காகச் செலவழிக்கப்படும் பிலிம் சுருள் பற்றியது. பெரிய இயக்குநர்கள், பெரிய நடிகர்கள், மற்றும் பெரிய முதலீட்டுப் படங்களாக இருந்தால் 125 பிலிம் 'கேன்'களை பயன்படுத்திக்கொள்ளலாம். அதாவது, ஒரு லட்சத்து 25 ஆயிரம் அடி! அடுத்த பிரிவில் வரும் படங்களுக்கு 75 பிலிம் கேன்களைப் பயன்படுத்திக்கொள்ளலாம். இவ்விரு பிரிவுகளுக்கும் காலக் கெடுவும் நிர்ணயிக்கப்படும். அதற்குள் படங்களை முடித்துத்தராத இயக்குநர்கள், சங்கத்தில் விசாரிக்கப்படுவார்கள். நஷ்டத்தை அவர்கள் தலையில் கட்டவும் முடிவுசெய்யப்படும்.

இதைபோலவே, பெரிய படங்கள் நஷ்டம் அடைந்தால் அந்த நஷ்டத்தைப் போக்க மீண்டும் அதே இயக்குநரும் நடிகரும் ஒரு வருடத்துள் அதே தயாரிப்பாளருக்கு இன்னொரு படத்தை உருவாக்கத் தங்கள் ஒத்துழைப்பைக் கொடுக்கவேண்டுமாம்.

இந்தக் கட்டுப்பாடு மூன்று லட்சம் அடிகளுக்கு மேல் பிலிம் ரோல்களைப் பயன்படுத்தும் பாலா, அமீர், ஷங்கர் போன்றவர்களுக்குப் பெரும் சிக்கலை உருவாக்கும்.

(தொகுப்பு: சென்னைத் திரைவாசல்)



**ஆர். நடராஜன்**
அமெரிக்க தூதரக
முன்னாள் அரசியல் ஆலோசகர்

# யாருக்கும் வெட்கமில்லை

சோனியா நாட்டில் தேர்தல் திருவிழா நடக்கவிருக்கிறது. அது என்ன சோனியா நாடு என்கிறீர்களா? பரதன் ஆண்டது பாரதம் என்றால் சோனியா ஆண்டது சோனியா நாடுதானே. அப்படியும் உங்களுக்குச் சந்தேகமா? சரி, வேறு ஓர் ஆதாரம். நவீன் சாவ்லாவை தலைமைத் தேர்தல் ஆணையாளராக நியமித்துள்ள, பிரதிபா பாடீல் என்ற, டெல்லிப் பட்டணத்தின் மிகப் பெரிய குமாஸ்தாவை நியமித்தது யார், என்பது தெரிந்தால் உங்களுக்கு இதில் சந்தேகம்வர நியாயமில்லை. சோனியா அசல் இந்தியரா இல்லையா என்ற சந்தேகமே வராத பொழுது, இதில் எதற்கு சந்தேகம் வரவேண்டும்? போகட்டும், எதுவாக இருந்தாலும் சோனியா என்ற முதலாளி, மன்மோகன் சிங் என்ற ஏவலாள்மூலம் ஆட்சிநடத்தி வருவதுபோல், நவீன் சாவ்லா என்ற ஏவலாள் மூலம் தேர்தல் நடத்தவிருக்கிறார். இது உறுதியாகிவிட்டது. சந்தேகத்துக்கு அப்பாற்பட்டவராக இருக்கவேண்டும் என்பது சீசரின் மனைவிக்கும் ராமரின் மனைவிக்கும்தான் சொல்லப்பட்டது. பிறர் மனைவியருக்கு அல்ல.


'இவர் சரியில்லையே; இவர்மீது புகார் இருக்கிறதே' என்று' இனிமேல் மக்கள் சொல்வதற்கில்லை. புகார்கள் ஏதாவது இருந்தால் விசாரிக்க வேண்டும் என்ற நியதி, அரசாங்கத்தின் கடைநிலை குமாஸ்தாக்கள் விஷயத்தில் மட்டுமே சட்டம். 'ஒருவரை எங்க ஆள்' என்று முதலாளி சொல்லிவிட்டாலும், அது நாட்டின் மிகப் பெரிய குமாஸ்தாவுக்கு புரிந்துவிட்டாலும் போதும், எவர்மீதான புகார்களும் குப்பைக் கூடைக்குள் போய்விடும். பிறகு, அவர் கோபுரத்தில் குந்திக்கொள்வார். 'தலைமைத் தேர்தல் கமிஷனராவது, புண்ணாக்காவது, நீர் யாரையா இதைச் சொல்வதற்கு? உம்மை நாடாளுமன்றம் மூலம் வெளியேற்றுகிறேன் பார்' என்று மத்திய அரசாங்க முதலாளி சோனியா காந்தி முடிவு செய்து நடவடிக்கை எடுத்திருந்தால், அதில் நியாயம் இல்லாவிட்டாலும் தவறான கோபம், ரோசம் ஆகியவற்றின் சாயல் கொஞ்சமாவது இருந்திருக்கும். ஆனால், புகார்களுக்கு உள்பட்ட நவீன் சாவ்லா நியமனத்தில் வெளிப்படுவது அலட்சியம். சர்வ அலட்சியம். மக்கள் ஒரு பொருட்டல்ல என்ற மமதை.

கோபாலசாமியின் ஒழுக்கத்தின்மீது யாரும் குறை சொன்னதில்லை. நவீன் சாவ்லாவின் ஒழுக்கம் கேள்விக்குறி. ஆனால், எங்களுக்குத் தேவை நவின் சாவ்லாவே என்ற சோனியாவின் முடிவுக்கு பிரதிபாவின் ரப்பர் ஸ்டாம்ப் முத்திரை கிடைத்துவிட்டது. எனவே, ஆளும் கட்சிக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் சாதகமாகச் செயல்பட முன்வருவார் நவீன் சாவ்லா என்று எதிர்பார்க்க நிறையவே இடம் இருக்கிறது. "என்மீதான குற்றச்சாட்டுக்கள் அபாண்டமானவை, நிரூபியுங்கள் பார்க்கலாம். நிரூபிக்க அவகாசம் தருகிறேன், அதுவரை விலகி இருக்கிறேன்'' என்று சொல்லும் நியாய உணர்வு நவீன் சாவ்லாவிடம் இல்லை. "புகாருக்கு இடம்கொடுத்துள்ள நபரை நாங்களே விலக்கிவிடுகிறோம், இதற்காகத் தலைமைத் தேர்தல் கமிஷனர் சிபாரிசு செய்யவேண்டிய தேவை இல்லை'' என்று மத்திய அரசும் சொல்லவில்லை.

அதுசரி, மத்தியில் அரசு என்ற ஒன்று இருக்கிறதா என்று கேட்கிறீர்களா? அரசாங்க அலுவலகங்களுக்கு செல்பவர்கள்கூட அப்படி நினைக்கவில்லை; வீட்டையே அலுவலகமாகவும் நாட்டையே வீடாகவும் நினைக்கும் சோனியா காந்தி, 'நானே அரசாங்கம்' என்ற பிரெஞ்சு மன்னன் பாணியில் செயல்படுகிறார். பிரான்சுக்கு அருகில் உள்ள நாடுதானே இத்தாலி.

நீங்கள் யார், என்ன சொல்வது, நான் என் போக்கில்தான் செயல்படுவேன் என்ற அகம்பாவம். தட்டிக் கேட்க எவருமில்லை. எனவே, அகம்பாவம் மறுபடியும் அரியணை ஏறலாம். முன்பு தயக்கம் காட்ட ஒரு கலாம் இருந்தார். இப்போது, வீட்டுக்கே வந்து பதவிப் பிரமாணம் செய்விக்க இவரால் நியமிக்கப்பட்டவர் இருக்கிறார். அப்புறம் என்ன கவலை?

கடந்த ஐந்து வருடங்களில் டெல்லியில் அமைச்சர்கள் இருந்தார்கள்; அதிகாரிகள் இருந்தார்கள். ஆனால், அரசாங்கம் என்ற ஒன்று இல்லை. இனி எப்படியோ? ■



Nalli
80
YEARS
SINCE 1928
First and the Finest
NALLI CHINNASAMI CHETTY
Opposite Panagal Park
9 Nageswaran Road, T. Nagar
Chennai - 600 017
Tel: 24344115 / 42604567
Emali: inquiry@nalli.com Web:www.nalli.com




சுவிஸ் தேசத்திலே மிகக் குறைந்த விலை
நிறைந்த தரம்! நிகரில்லா ரகங்கள் !!
ONLINE SHOPPING
www.ars-swiss.ch
ARS
1 Sfr முதல் 3500 Sfr வரை
உலகத்தில் உள்ள அனைத்து வகையான ஆடை அணிவகுப்புகளை ஒரே இடத்தில் வாங்கி மகிழலாம்.
ஆடை, ஆபரணக் கலையின் அத்தனை அம்சங்களிலும் மிகச்சிறந்த புத்தம் புதிய டிசைன்கள்
ஷாப்பிங் உலகின் சூப்பர் ஸ்டார்
ARS SAKTHI TRADING GmbH
Textile and Gold
Gold • Diamond • Silver
Hauptstrasse 50/52, 6015 Reussbühl Luzern Switzerland
Telephone : +412605971 Fax : +412605972 Handy: +787391254




சுவிஸ் சென்னை சில்க்
அனைத்து ஜவுளிகளுக்கும்
மொத்தவிற்பனை விசாரணைகள்
வரவேற்கப்படுகின்றன
Tel: 076 447 8858


SOLD
RED CARPET.
Thinking of
Buying or Selling
Real Estate
RED CARPET.
Royal Realty Ltd., Brokerage
INDEPENDENTLY OWNED AND OPERATED
Canada - Toronto வுக்கு
அண்மித்த பகுதியில்......
Real Estate Service
வீடு, வியாபாரம் வாங்க, விற்க.....
Karu Kandiah FRI. CRES,
Real Estate Broker / President
* 20 Years Real Estate Experience
* Multi Award Winner
Dir: 416-284-5698
Bus: 416-284-5555
880 Ellesmere Road,Suite 204, Toronto, ON., M1P 2W6


Western Jewellers
230 Upper Tooting Road
London SW17 7EW
Telephone : 020 8767 3445
SILK
EMBORIUM
122 Upper Tooting Road
London SW17 7EN
Tel : 020 8672 1900
Western Jewellers
& Textiles
5 Plaza Parade 29-33 Ealing Road
Wembley Middlesex HA0 4YA
Tel : 020 8903 0909